மகாபாரதச் சுருக்கம்



பீஷ்ம பருவம்

மகாமகோபாத்தியாய (1986)

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-90

பீஷ்ம பருவம்

மகாபாரதச் சுருக்கம்

ஆறுவது

பீஷ்ம பருவம்

(பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது)

Mahabharatha Churukkam

Bhishma Parvam

உரையாசிரியர் - பதிப்பாசிரியர்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்,

M.A. (Hist.) M.A. (Tamil), L.T., P.O.L.,

Dipl. Geog. Vidvan.

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகாநந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4.

(U.G.C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட்நகர், சென்னை-600 090.

1986

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண் — 93

முதற்பதிப்பு 1986 — 1000 பிரதிகள்

(c) மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர், சென்னை-600 090

விலை : ரூ. 15/-

Published with the Financial Assistance
of the Government of India,
Dept. of Edn. and Culture, New Delhi.

Printed at Sudha Printers 287/3 Lloyds Road, Madras-600 014.

உள்ளடக்கம்

பதிப்பாளர் குறிப்பு	v
Introduction	ix
முகவுரை	xiii
நூல்	1-130
பகவத்கீதைச் சருக்கம்	1-21
முதற்போர்ச் சருக்கம்	22-41
இரண்டாம்போர்ச் சருக்கம்	42-50
மூன்றும்போர்ச் சருக்கம்	51-58
நான்காம்போர்ச் சருக்கம்	59-74
ஐந்தாம்போர்ச் சருக்கம்	75-82
ஆறும்போர்ச் சருக்கம்	83-88
ஏழாம்போர்ச் சருக்கம்	89-93
எட்டாம்போர்ச் சருக்கம்	94-103
ஒன்பதாம்போர்ச் சருக்கம்	104-113
பத்தாம்போர்ச் சருக்கம்	114-130
அபிதானசூசிகையகராதி	131-135
அரும்பதவகராதி முதலியன	136-143
சில அருந்தொடர்கள்	144
செய்யுண்முதற்குறிப்பகராதி	145-149

பதிப்பாளர் குறிப்பு

திருக்கலந்து சேருமார்ப! தேவதேவ தேவனே!
இருக்கலந்த வேதநீதி யாகிநின்ற நின்மலா!
கருக்கலந்த காளமேக மேனியாய! நின்பெயர்
உருக்கலந் தொழிவிலா துரைக்குமாறு ரைசெயே.

(திருச்சந்த விருத்தம்)

இந்தப் பீஷ்மபருவம் மகாபாரதத்துள் ஆருவதாக மிளிர்கின்றது. இப்பருவம் வேதத்திற்கு உபநிஷத்துக்கள் போல, பாரதமாகிய ஐந்தாம் வேதத்திற்கு ஸ்ரீ பகவத் கீதையாகிய உபநிஷத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பகவத்கீதையின் பெருமையை அறியாதார் யார் உளர்? அதன் சொற்பொருட்சிறப்பைக் கண்டு எத்தேசத்தினரும் எச்சமயத்தினரும் போற்றுகின்றனர். கருணைக் கடலான கண்ணனுல் அர்ச்சுனனுக்குக் கூறப்பட்டதிலிருந்தும் இதன் பெருமையை நன்கு அறிந்து கொள்ளலாம். பாண்டவ கௌரவர்களுக்குப் பிதாமஹரும், தெய்வத்தன்மையுள்ளவரும், யாவராலும் செய்தற்கரிய பெரிய விரதத்தை மேற்கொண்டு அநுஷ்டித்தவருமான பீஷ்மரது ப்ரபாவத்தை முக்கியமாகக் கொண்டது இப் பருவம். பக்தனுக்குக் கட்டுப்பட்ட பகவான் 'தான் செய்த பிரதிக்ஞை தவறினும் அடியார் செய்த பிரதிக்ஞை ஒரு நாளும் தவறக் கூடாது' என்று அநுஷ்டித்துக் காட்டி அச்சுதன் என்ற பெயரை நிலைநிறுத்திக் கொண்டதும் இந்தப்பருவத்தில்தான்.

கண்ணன் அருச்சுனனுக்கு வெற்றி உண்டாவதன் பொருட்டு அருச்சுனனைப்பார்த்து நீ சுத்தனாகி யுத்தத்திற்கு எதிர்முகமாக இருந்துகொண்டு பகைவர்களை வெல்வதற்காகத் துர்க்காஸ்தோத்திரத்தைச் சொல் என்று கூற அருச்சுனன் இரதத்திலிருந்து இறங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு துர்க்கா தேவியை ஸ்தோத்திரம் செய்ததாக இப்பருவத்தில் காணப்படுகின்றது.

இப்பருவத்தில் (வியாசபாரதம்)துர்க்காஸ்தோத்திரம் பதின்மூன்று செய்யுளில் உள்ளது. இந்தத் துதியை யாரொருவர் தினந்தோறும் பரிசுத்தனாகவும் ஏகாக்கிர சித்தனாகவும் இருந்துகொண்டு பாராயணம் செய்கின் றார்களோ அவர்கள் பகைவர்களை வெல்வதோடு மட்டு மின்றிச் சகல சௌபாக்கியங்களையும் அடைவார்கள் என்பது கண்கூடு.

இப்பருவம் 126 செய்யுட்களைக்கொண்டது. இந்தப் பருவத்தினைத் **திருமதி ருக்மிணிதேவி** அவர்களால் நிறுவப்பட்டுத் திருவான்மியூரில் இலங்கிக் கொண் டிருக்கும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம் சுவடியிலிருந்து அச்சேற்றித் தமிழுலகம் பயன்பெறும் வண்ணம் செவ்விய முறையில் அளிக்கின்றது. இந்தப் பருவம் வெளிவரும்பொழுது திருமதி ருக்மிணிதேவி அவர்கள் இல்லையே என்று நினைக்கும்போது சொல் லொணாத் துயரம் ஏற்படுகின்றது.

இந்தப்பருவத்திற்கும் பதவுரை,விளக்கவுரை முதலிய வற்றை அன்புடன் எழுதிக்கொடுத்தவர் திரு. C. ஜகந்நா தாசார்யர் அவர்கள். அன்னாருக்கு நூல்நிலையத்தின் சார்பில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மத்திய அரசு இந்தப் பதிப்புக்கு மானியம் அளித்த மைக்கு நன்றி. இந்நூலினை அச்சிட்டுக் கொடுத்த சுதா அச்சக உரிமையாளர் **திரு. சுப்பிரமணியன்** அவர்களுக்கு நன்றி.

சென்னை – 90
12 - 3 - 86

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப் பிரிவு,
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்.

துர்கா ஸ்துதி

மகாபாரதயுத்தம் ஆரம்பிக்குமுன்பு கண்ணன் அருச்சுனனைத் துர்க்காதேவியை வேண்டிக்கொள் என்று சொல்ல, அருச்சுனன் உடனே தேரிலிருந்து இறங்கிக் கீழ்க்கண்ட சுலோகங்களால் வழிபட்டான். துர்க்கையின் அருளால் அருச்சுனனுக்கு வெற்றிகிட்டியது. நாமும் தினமும் ஏகாக்கிரசித்தத்துடன் பாராயணம் செய்தால் எல்லாக் காரியங்களும் கைகூடும் என்பது பிரத்தியக்ஷ பிரமாணம்.

1 நமஸ்தே ஸித்தஸேநாநி ஆர்யே மந்தரவாஸினி
குமாரி காலி காபாலி கபிலே க்ருஷ்ணபிங்களே ||

2 பத்ரகாளி நமஸ்துப்யம் மகாகாளி நமோஸ்துதே
சண்டி சண்டே நமஸ்துப்யம் தாரிணி வரவர்ணிநி ||

3 காத்தியாயநி மஹாபாகே கராளி விஜயே ஜயே
சிகிபிஞ்சத்வஜதரே நாநாபரண பூஷிதே ||

4 அட்டசூல பிரஹரணே கட்ககேடக தாரிணி
கோபேந்த்ரஸ்யாநுஜே ஜ்யேஷ்டே நந்தகோபகுலோத்
பவே ||

5 மஹிஷாஸ்ருக் ப்ரியே நித்யம் கௌசிகி பீதவாஸிநி
அட்டஹாஸே கோகமுகே நமஸ்தேஸ்து ரணப்ரியே ||

6 உமே சாகம்பரி ச்வேதே க்ருஷ்ணே கைடபநாசிநி
ஹிரண்யாக்ஷி விருபாக்ஷி ஸுதூம்ராக்ஷி நமோஸ்துதே ||

7 வேதச்ருதி மகாபுண்யே ப்ரம்மண்யே ஜாதவேதஸி
ஜம்பூ கடக சைத்யேஷு நித்யம் ஸந்நிஹிதாலயே ||

8 த்வம் பிர்ம்ம வித்யா வித்யாநாம் மஹாநித்ரா ச தேஹிநாம்
ஸ்கந்தமாதர் பகவதி துர்க்கே காந்தாரவாஸிநி ||

9 ஸ்வாஹாகார: ஸ்வதா சைவ கலா காஷ்டா சரஸ்வதி
சாவித்திரீ வேதமாதா ச ததா வேதாந்த உச்யதே ||

10 ஸ்துதாஸி த்வம் மஹாதேவி விசுத்தேநாந்தராத்மநா
ஜயோ பவது மே நித்யம் த்வத்ப்ரஸாதாத் ரணாஜிரே ||

11 காந்தாரபய துர்க்கேஷு பக்தாநாம் சாலயேஷுச
நித்யம் வஸஸி பாதாளே யுத்தே ஜயஸி தாநவாந் ||

12 த்வம் ஜம்பநீ மோஹிநீச மாயா ஹ்ரீ : ச்ரீ: ததைவச
ஸந்தியா ப்ரபாவதி சைவ சாவித்ரீ ஜநநீ ததா ||

13 துஷ்டி : புஷ்டிர் த்ருதிர் தீப்தை: சந்திராதித்ய விவர்த்திநி
பூதிர்பூதிமதாம் சங்க்யே வீக்ஷ்யஸே ஸித்தசாரணை: ||

துர்க்காதேவி சரணம்

INTRODUCTION

Man is considered to be paragon of *animals*. *He is* undoubtedly the apex of creation. In apprehension he is like a God. But all these things will carry no weight unless he realises the goal of life. That goal of life can be determined only if he has recourse to "Shastras" or codes of law. These codes are to be found in the Vedas, Smrithis, Itihasas and Puranas. But to go through all these texts in a life-time is a herculean task and hence if one takes *into his head* to go *through* the Itihasas alone, it is tantamount to have gone through all the scriptural texts mentioned above. These Itihasas are two in number, the Ramayana and the *Mahabharata*.

Our Bharat is the Punya Bhoomi which *produced* these two *monumental works*. The Ramayana is by Valmiki and the Mahabharata by Vyasa. Both are sages of a high order. *Of the* two, Vyasa is considered to be Vishnu *incarnate*; c.f. "Vyasaya *Vishnu rupaya Vyasa rupaya* Vishnave". His work, the Mahabharata consists of nearly a lākh of slokas, divided into eighteen 'Parvas'. The amanuensis for this colossal work is none other than Vinayaka, the Lord of 'the Ganas'. This work includes the Bhagavat Gita in Bhishma Parva and the Vishnu Sahasranama *Stotra in the* Anusasanika Parva. Hence the sanctity of the work is *emphasised* in more ways than one. Though, apparently, the work seems to deal with the history and lives of the kings of the Kuru dynasty who *carried an internecine war* resulting practically in total annihilation, yet it contains the panacea for all the evils in this world, guiding us at the same time in the right path to face the *problems* of life which may arise in diverse situations.

Now, I shall briefly give the essence of Bhishma Parva.

BHISHMA PARVA

This is the Sixth of the Eighteen Parvas (Sections) of the Mahabharata. This consists of eleven sargas or Carukkams (sub- sections) starting from Bhagavat - gitaic - Carukkam and ending with the Pattham - Porc - Carukkam (ie, the tenth - day battle). This Parva deals about the ten days' battle between the Kauravas and the Pandavas. The Kaurava army was led by Bhishma, as its generalissimo. The important events and details dealt with in this Parva can be briefly analysed as follows :

(i) Goading Arjuna to fight by preaching him the essentials of Kshatriya - dharma, thereby urging him to do one's Karma without an eye on its results and without an iota of egoism in its performance.

(ii) The Pandavas approaching Bhishma and Drona, the commanders of the opposite Camp to enlighten them as to the way to conquer them in the ensuing battle.

(iii) The various Kinds of Vyuhas or military arrays formulated by the commanders of the contending forces.

(iv) The killing of Sveta by Bhisma in the first day battle.

(v) On the second day - the elephant - fight between Bhima and Chakradeva, the Kalinga king and the disposal of Chakradeva by Bhima.

(vi) On the third day - Krishna handling the Chakrayudha, in contravention of his promise made, to destroy Bhishma, who was bent on practically annihilating Pandava hordes.

(vii) On the fourth day - Bhima disposes of five Kaurava brothers of Duryodhana - Bhagadutta entered the field with his elephant horde and Katothkasa defeated him.

(viii) On the fifth day - the fight between Sattagi and Purisirava.

(ix) On the sixth day — the conquest of Abhimanyu over Vikarna, Bhagadutta and their allies.

(x) On the seventh day — the Pandya king was defeated by *Drona.*

(xi) On the eighth day — Bhima disposes of at first, eight Kaurava brothers and later seven more Kaurava brothers of Duryodhana — the death of Aravan at the hands of Alambusa, the younger brother of Bakasura.

(xii) On the ninth day — the death of Alambusa and Sadhanika (the younger brother of the Virata King) at the hands of Bhima and Bhishma respectively.

(xiii) On the tenth day — the terrible fight of Bhishma with *Dharmaputra's forces and he destroyed* them like dried leaves before fire. Arjuna then, thrust Sikandi to the front and Bhishma, on seeing him, threw away his bows and arrows and kept calm. Taking advantage of this. situation, Arjuna rained a shower of arrows on Bhishma and he fell down flat on the bed of arrows. Bhishma *waited till the advent of* Uttarayana and passed away on the Uttarayanam Day. Thus the Bhishma Parva ends with the exit of Bhishma from this world.

This in short is the essence of this Parva. Philosophical truths and moral values are stressed *in this Parva in the course* of its narration and I have done my best to bring them into limelight.

The work of writing a Commentary on all the Parvas of the "Mahabharatha Curukkam" was enjoined on me by the authotrities of Dr. U. Ve. Swaminatha Iyer Library and I am greatful to *them for this honour conferred* on me. By the grace of the Mahamahopadyaya Dakshinadhya Kalanidhi Dr. Iyer and by the benign benediciton of my esteemed Guru, Sri. U.Ve.V.M. Gopalakrishnamachariar, the modern Patanjali, I ventured to write this explanatory commentary. I have given the meaning for words, their explanation, allusions, the grammatical peculiarities, the

kind of prosody used in the course of the composition, and the rhetoric set like gems now and then.

My thanks are due to Sri K. Subramania Iyer, Honorary Curator of Dr. U. Ve. S. Iyer Library and to his associate Sri S. Balasaranathan for the encouragement they have given me. In fine, I express my gratitude to the Sudha Printers, Royapettah, Madras-14 for their excellent co-operation.

Triplicane,
Madras-600 005.
Date 10-3-1986

C. Jagannathachariar
Commentator & Editor

முகவுரை

அருந்தமிழன்பர்காள் !

பாரதம் பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது. அவற்றுள் ஆருவது இந்தப் பீஷ்மபருவமாகும். இந்தப்பருவம் பதினொரு சருக்கங்களைக்கொண்டமைந்தது. பகவத்கீதைச் சருக்கம் தொடங்கி, பீஷ்மன் துரியோதனுதியர் சேனைத்தலைவனுய்நின்று பத்துநாள் போரை நடத்திஇறுதியில் உத்தராயணத்து உயிர்துறந்தமை வரையில் கூறுங் கதைப்பகுதியைக்கொண்டு, பத்துநாட்போர்ச்சருக்கங்களையும் கொண்டு மிளிர்வது.

முதல்சருக்கத்து ஸ்ரீகிருஷ்ணபகவானுல் அருச்சுனனை வியாஜமாகக்கொண்டு உலகத்தவர்க்கு உபதேசிக்கப்பட்டதும், கர்மபக்தி ஞானயோகங்களைத்தெளிவாக விளக்குவதோடு பிரபத்தியின் சீர்மையையும் அறிவிப்பதுமாகிய ஸ்ரீபகவத்கீதையின் சாரத்தை மிகச்சுருங்கச்சொல்லி,விசுவரூபங்காட்டியமையையும்கொண்டுள்ளது. இந்தப் பீஷ்மபருவம். போர்ச்சருக்கங்களில் சிவேதன், உத்தரன் இராவான், கடோற்கசன், அபிமன் போன்ற இளையவீரர்களின் சாகசங்களும், விருத்தராகிய பீஷ்மனது போரிடுந்திறனும் வெகு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

அறிவுரைகள் பல கொண்டுள்ள இந்தப்பருவத்துக்கு அடியேனை உரையெழுதும்படி பணித்த மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல்நிலையத்தார்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயரவர்களின் ஆசியின் பலமும், அடியேனுக்கு ஞானுசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அவர்களின் அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரையெழுதத் துணிந்தேன்.

இந்தப் பீஷ்மபருவவுரையில் பல அரிய விடயங்கள், இலக்கண நுணுக்கங்கள்,உரைவிசேடங்கள், போர்க்குறிப்புக்கள், மேற்கொள்ள வேண்டிய நற்பண்புகள் முதலியன காட்டியுள்ளேன். மற்றும், பயில்வோர்க்குப்பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் அபிதான சூசிகை யகராதி, அரும்பதவகராதி முதலியன, அருந்தொடர்கள்,

செய்யுண்முதற்குறிப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப் பட்டுள்ளன.

இப்பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய சுதா பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும், அடியனை இந்நற்பணியிற் கூவியேவல் கொண்ட ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும் என்றும் நன்றியறித லுடையேன்.

திருமகள் கொழுநனை திருமால் தனது சரிதையாகிய இப் பாரதத்தில் அடியேனுக்கு மனம் பதியுமாறுசெய்து இந்நூலின் பீஷ்ம பருவத்திற்கு நல்லுரை வெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத்தோன் றுத்துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்திலீடுபட்டு அனவர தமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலால்
உண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே - பண்டைத்
தவளவண்ணு கார்வண்ணு சாமவண்ணு கச்சிப்
பவளவண்ணு நின்பொற் பதம்.

குரோதன ஸு
மாசி மீ 26
10—3—1986

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசார்யர்
உரையாசிரியர்-பதிப்பாசிரியர்

டாக்டர் ஐயரவர்கள்

1855 - 1942

ஆருவது

பீஷ்ம பருவம்

பீஷ்ம பர்வம் என்பது வடசொற்றொடர். இது திரிந்து வீட்டும பருவம் எனவும் வரும். பீஷ்மனது சம்பந்தமான பருவமென்று ஆரும் வேற்றுமைத் தொகையாகக் கொள்க. இனி, இரண்டனுருபும் பயனும் தொக்க தொகையாக, பீஷ்மனைப் பற்றிய பருவமெனினும் அமையும். பீஷ்மன் துரியோதனுதியர் சேனைத்தலைவனுய் நின்று பத்து நாள் போரை நடத்திய கதையைக்கூறும் பாகமென்று பொருள். பீஷ்ம பருவம் எனப் பெயரிட்டது என்னையோ வெனின்? — எதிரிகளது சிறப்பை நன்கு எடுத்துக் காட்டி அப்படிப்பட்டவர் களை இவர்கள் வென்றிட்டார்களெனக் கதாநாயகரைப் பெருமைப் படுத்த வேண்டியென்க. இது மேல் வரும் துரோண பருவம், கன்ன பருவம், சல்லிய பருவம் எனப் பெயரிட்டமைக்குங் காரண மாகும். இனி பீஷ்மவத பர்வமென்பது மத்திமபதலோபமாய்ப் பீஷ்ம பருவமென நின்றது என்றலும் ஒன்று. இது, பகவத் கீதைச் சருக்கத்தை முதலதாகக் கொண்டு, பின்னர் முதற்போர்ச் சருக்கம் முதல் பத்தாம் போர்ச்சருக்கம் வரையுள்ள பத்துச் சருக்கங்களை யும் கொண்டுள்ளது. ஆக, மொத்தம் சருக்கங்கள் பதினென்று கொண்டுள்ளது. அவற்றுள்,

முதலாவது

பகவத்கீதைச் சருக்கம்

பகவத் கீதையைப் பற்றிய சருக்கம் எனப் பொருள்படும் இரண்டனுருபும் பயனும் உடன்தொக்கதொகை. ஸ்ரீ கிருஷ்ண பகவானுல் அர்ச்சுனனை நிமித்தமாகக் கொண்டு உலகத்திற்கு உப தேசிக்கப்பட்டது, பகவத்கீதை. அருச்சுனன் தன் எதிர்ப்பக்கத்துச் சேனையிலுள்ளவர் அனைவரும் தனக்கு நெருங்கிய உறவினராயிருக் கக் கண்டு கலங்கி, உற்றுரைக் கொல்லப் பின்வாங்கிப் போர் செய்ய மாட்டேனென்ன, அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு உத்தரம் கூறியருளுவது போல இந்தப் பகவத் கீதையையுபதேசித்தான். பகவத் கீதை பதினெட்டு அத்யாயங்களைக் கொண்டது. மொத்தம்

எழுநூற்றொன்று சுலோகங்களாலாயது. கர்ம பக்தி ஞான யோகங்களைத் தெளிவாக விளக்குவதோடு பிரபத்தியின் சீர்மையையும் அறிவிப்பது. இதன் பெருமையை ஸ்ரீ சங்கரர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமத்வர் ஆகிய மதாசாரியர்கள் மூவரும் விரிவுரை செய்திருத்தலால் அறியலாம்.

1. தெய்வ வணக்கம்—கிருஷ்ண ஸ்துதி.

தொண்டுசெய் பவங்க ணீக்கித்
தொண்டனை யிடங்கர் நூறிப்
பண்டிப மளித்தல் போலப்
பாதுகாத் திடுதல் வேண்டும்
கொண்டனேர் வண்ண! நெய்பால்
கூவுக்கங் காந்த வாயோய்!
விண்டழன் மண்கா னீராய்
விளங்குவோய்! விமலை மார்பா!

(இ-ள்) கொண்டல் நேர் வண்ண!-மேகத்தையொத்த நிறத்தையுடையவனே! நெய்பால் கூவுக்கு-வெண்ணெய்க்கும் பாலுக்கும் பூமிக்கும், அங்காந்த வாயோய்!-திறந்த வாயினையுடையவனே! விண் தழல் மண் கால் நீராய் விளங்குவோய்-வான் தீ நிலம் காற்று நீர் ஆகிய பஞ்ச பூதங்களாய் இலங்குபவனே! விமலை மார்பா! - இலக்குமியை மார்பில் தரித்தவனே! தொண்டனை-உனக்கு அடியனான என்னை, தொண்டுசெய்-பிறருக்கு ஏவல் செய்கின்ற, பவங்கள் நீக்கி-பாவங்களைப் போக்கி, இடங்கர் நூறி-முதலையை யழித்து, பண்டு இபம் அளித்தல் போல-திரேதாயுகத்தில் [கஜேந்திரனாகிய] யானையைக் காப்பாற்றியது போல, பாதுகாத்திடுதல் வேண்டும்—; (எ. று)

பகவத்கீதை சருக்கமாதலின், கிருஷ்ணனைத் துதிக்கிறார். கூ-பூமி. ஒரு நாள், கிருஷ்ணன் குழந்தையாகிய தன்னை நீராட்டும்போது மஞ்சளாலே தனது மெல்லிய நாவை வழித்த யசோதைக்கு திவ்ய சக்ஷுசைக் கொடுத்துத் தன் வாயைத் திறந்து தன் வைபவத்தைக் காட்டியருள, அவள் அந்தப் பிள்ளையின் வாயினுள்ளே சகல லோகங்களையும் கண்டனள். "கையுங்காலும் நிமிர்த்துக் கடார

நீர்பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால், ஐயநா வழித்தாளுக் கங்காந்திட, வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே'' ''வாயுள் வையகங் கண்ட மடநல்லார், ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வம்'' என்றுர் பெரியாழ்வாரும். கிருஷ்ணன் இளம்பிராயத்தில் இடையர் வீடுதோறுஞ் சென்று வெண்ணெய் பால் தயிர் முதலியவற்றைக் களவாடியுண்பன் என்பது பிரசித்தம். நம்மாழ்வார் ''நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்'' என்றதையும் (6-9-1) ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா'' (6-10-10) என்றதையும் நினைக. எம்பெருமானை விட்டுப் பிறர்க் குத் தொண்டு செய்தல் பாவமாகும் என்பதனை ''பிறர்க்கே உழைத்து ஏழையானேன்'' என்ற திருமங்கை மன்னன் வாக்கினால் அறியலாம். மற்றும், ''உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்றுள் ஆண்டாளும். (திருப்பாவை, 29). ''இபம் அளித்தல் போல'' என்றது - கருடாருடனாய் வந்து காத்தல் வேண்டும் என்ற குறிப் பினது: ''தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன் றினையே'' என்றுர் நம்மாழ்வார். (திருவாய்: 3-1-9) திருமங்கை மன்னனும் ''ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று'' என்றுர் (பெரியதிரு: 2-3-9)

இபம் அளித்த கதை : இந்திரத்யும்நனென்னும் அரசன் மிக்க விஷ்ணு பக்தியுடையவனாய் ஒருநாள் விஷ்ணு பூசை செய்கையில் அகஸ்திய மகாமுனிவர் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூசிப்பதிற் செலுத்தியிருந்த தனால், அவ்விருடியின் வருகையையறிந்திடானாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன் தன்னை அரசன் அலட்சியஞ் செய்தானென்று மாறாகக் கருதிக் கோபித்து, ''நீ யானை போலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை'' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றின னாயினும், முன் செய்த விஷ்ணு பக்தியின் மகிமையால் அப்பொழு தும் விடாமல் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்து வருகையில் ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப் போய் இறங்கியபொழுது அங்கே (முன்பு நீர் நிலையில் நின்று தவஞ் செய்து கொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தால்) பெரிய முதலை யாய்க் கிடந்த ஹூஹூ என்னுங் கந்தருவன் அவ் யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ள முடி யாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாருடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்

தைப் பிரயோகித்து முதலேயைத் துணித்து யானையை அதன் வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள் செய்தனனென்பது.

இது முதல் பத்துக் கவிகள்—ஒன்று நான்காஞ் சீர்கள் விளச் சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகி வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (1)

2. செனமேசயன் வினவ வைசம்பாயனன் போர் நடக்கப்போகும் வகையினைக் கூறத் தொடங்கல்.

விற்சென மேமெச யப்பேர்
வேந்திவை விஞவி மீட்டும்
பற்கலை தோய்ந்த வைசம்
பாயனன் றன்னை யன்ஞேர்
நற்குரு கேந்தி ரத்தின்
நனியமர் நடாத்து நீர்மை
எற்குரைத் தருளென் றேத்த
இருடியு மிசைப்ப தாஞன்.

(இ-ள்) வில் செனமே செயப்பேர் வேந்து-ஒளி (புகழ்) பொருந்திய செனமேசெய மகாராசன், இவை விஞவி-இரு திறத்தினரும் போர் செய்ய நினைத்திருத்தலைக் கேட்டு அறிந்து, மீட்டும்-மறுபடியும், பல் கலை தோய்ந்த வைசம்பாயனன் தன்னை-பல கலைகளிலேயும் வல்ல வைசம்பாயன முனிவனை நோக்கி, அன்ஞேர்-அந்த இரு திறத்தினரும், நல் குருகேந்திரத்தில்-நல்ல குருக்ஷேத்திரத்தில், அமர் நனி நடாத்தும் நீர்மை-போரைச் சிறப்பச் செய்யப் போகும் வகையினை, எற்கு-எனக்கு, உரைத்தருள்-சொல்லுவீராக, என்று ஏத்த-என்று கூறிப் போற்ற, இருடியும்-வைசம்பாயன முனிவனும், இசைப்பது ஆஞன்-கூறுவதாயிஞன்; (எ.று)

வில்-ஒளி. ஒளியாவது-தாம் உளராய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. மெய்விளங்க வரும் குருநிலமாதலின், நல் என்ற அடை கொடுக்கப்பட்டது. நனி-உரிச்சொல். (2)

3. **திருதராட்டிரன் வியாசனை நினைக்க அவனும் வருதல்.**

மித்திரற் றெழுது வேந்தர்
வெம்படை யேந்தி நின்றார்
அத்தின புரத்துண் மேவும்
அந்தகன் அமருக் கெய்தும்
புத்திரர்க் கென்னோ வென்னாப்
புந்திநொந் தரிய வேத
வித்தக முனியை யுன்ன
விரைவினி லவனும் வந்தான்.

(இ-ள்) வேந்தர்-இருதிறத்து மன்னர்களும், மித்திரன் தொழுது-(மறுநாட் காலை) சூரியனை வணங்கி, வெம்படை ஏந்தி நின்றார்-கொடிய ஆயுதங்களையேந்தி (அணிவகுத்து) நின்றனர்: (அப்போது) அத்தினபுரத்துள் மேவும் அந்தகன்-அத்திநபுரியிலிருந்த குருடனாகிய திருதராட்டிரன், அமருக்கு எய்தும்-போர் செய்ய வரும், புத்திரர்க்கு-என் மைந்தர்களுக்கு, என்னோ-என்னவாகுமோ என்னா-என்று பயந்து, புத்தி நொந்து-அறிவு கலங்கி வருந்தி, அரிய வேத வித்தக முனியை-அருமையாகிய (சிறந்த) வேதத்தில் வல்ல வியாச முனிவனை, உன்ன-நினைக்க, அவனும்-அந்த முனிவனும், விரைவினில் வந்தான்-வேகமாக வந்து தோன்றினான்; (எ.று.)

வியாசன் தன்னை நினைத்தபோது வருவேனென்று கூறியிருத்தலின், திருதராட்டிரன் நினைந்தான். மித்திரன்-சூரியன். (3)

4. **வியாசன் திருதராட்டிரனுக்குக் கண்கள் உதவுதல்.**

தாதையை வணங்கிச் செய்யத்
தகுங்கட னியற்றி வேந்தன்
ஆதனத் திருத்தி ஐய!
அமர்முயன் றீன்ற மைந்தர்
போதலிற் பொறுக்க கில்லேன்
புலனிலைச் செலவு மெற்கென்
றோதலு முனிவன் கண்கள்
உதவின னமர்நோக் கென்றான்.

(இ-ள்) வேந்தன்-திருதராட்டிரன், தாதையை வணங்கி-தந்தையாகிய வியாசபகவானை நமஸ்கரித்து, செய்யத்தகும் கடன் இயற்றி-செய்யவேண்டிய (உபசாரக்) கடமைகளையெல்லாம் செய்து, ஆதனத்து இருத்தி-இருக்கையில் அமரவைத்து, ஐய!-பெரியோனே! ஈன்ற மைந்தர்-(நான்) பெற்ற பிள்ளைகள், அமர் முயன்று போதலின்-போரில் முனைந்து போதலால், பொறுக்ககில்லேன் - (என்னாகுமோ என்றஞ்சி) சகிக்க முடியாமல் தவிக்கிறேன், எற்கு - எனக்கு செலவும்-பார்வை செலுத்தவும் (பார்க்கவும்), புலன் இல கண்கள் இல்லை, என்று ஓதலும்-என்று கூறியவுடன், முனிவன் - வியாசன், கண்கள் உதவினன் - (தன் தவவலிமையால்) - கண்களைக் கொடுத்தான்:(கொடுத்து) அமர் நோக்கு என்றான்-போரினைக் கண்கொண்டு பார்ப்பாய் என்று கூறியருளினான், (எ,று)

இனி, முயன்று ஈன்ற மைந்தர் எனவுமாம். நூறு மைந்தரைக் கொண்ட கருப்பமாதலால் அப்பிண்டம் இரண்டுயாண்டுசென்றும், கெட்டியாயிருக்கவே காந்தாரி, குந்திமகவைப் பெற்றதிற் பொறாமை கொண்டு கல்லாலே வயிற்றை மோதிக்கொள்ள, அந்தக் கருப்பை குருதியோடு பூமியில் விழ, வியாசன் வந்து அந்தக் கோசத்தசையினை இழுதைக் கொண்ட நூறுதாழியிலும் இட்டு வைக்கச் சொல்ல, அந்தத் தசைகள் உறுப்பு நிரம்பித்தாமே அந்தத் தாழியைப் பிளந்து கொண்டு குழந்தைகளாக வெளிவந்தனவாதலின், 'முயன்று ஈன்ற என்றது. புலன்-கட்புலன். செலவு-தொழிற்பெயர். பொறுக்ககில்லேன்-எதிர்மறை வினைமுற்று: கில்-ஆற்றலுணர்த்தும் இடைநிலை. நோக்கு-முன்னிலையேவல். (4)

5. கிழ வயதில் போர் காணக் கண் வேண்டாமென்று வியாசனிடம் குருடனாகவே செய்ய வேண்டுதல்.

கட்புலன் தெரியப் பாரின்
காட்சிகள் நோக்கி மன்னன்
உட்புல னொடுக்கி னானை
யுற்பவ நாடொட் டில்லா
பெட்புறும் விழிகள் சாநாட்
பெற்றமர் நோக்க வாற்றேன்
வட்கமுன் னையிற்செய் கென்ன
மாற்றிநோக் கவன்வ குப்பான்.

(இ-ள்) மன்னன் - திருதராட்டிரன், கட்புலன் தெரிய-கண்களால் பார்வை பெறவே, பாரின் காட்சிகள் நோக்கி-பூமியிலுள்ள தோற்றங்களையெல்லாம் பார்த்து, (பின்பு) உட்புலன் ஒடுக்கினானை-மனத்தினைக் கட்டுப்படுத்தியவனாகிய வியாசமுனிவனை (நோக்கி) : உற்பவம் நாள் தொட்டு இல்லா - பிறந்த நாள் முதற்கொண்டு இல்லாத [குருடாகவே பிறந்து], பெட்புறும் விழிகள்-(இப்போது) ஆசைப்படுகின்ற [இந்தக்] கண்கள், சாம் நாள் பெற்று-இறக்கும் நாட்கள் நெருங்கும் இந்தக் கிழவயதில் பெற்று, அமர் நோக்க-(இந்தப்) போரினைக் காண்பதற்கு, ஆற்றேன்-தாங்க மாட்டேன்: முன்னையில்-முன்னிருந்தது போலவே, வட்கச் செய்க-கெடச் செய்க (இல்லையாக்குக), என்ன-என்று வேண்ட, அவன்-அந்த வியாசன், நோக்கம் மாற்றி-(அவன்) கண்களை யில்லையாக்கி, வகுப்பான்-கூறுவானாயினான்; (எ.று) அவன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

உட்புலன்-அந்தக்கரணம்: மனம் ஒடுக்கினான்—வினையாலணையும் பெயர். சா நாள்-சாகும் நாள். பெயரெச்சத் தொடர். வட்குதல்-கெடுதல், ஒளி மழுங்குதல். உள் + புலன் = உட்புலன் : நாள் + தொட்டு = நாடொட்டு'': "லள வேற்றுமையில் றடவும் அல்வழியவற்றோடு உறழ்வும்" என்பது விதி (நன்: மெய்யீற்று:24) செய்கென்னவியங்கோளின் அகரவீறு தொகுத்தல். கண் + புலன் = கட்புலன் "ணன வல்லினம் வரட் டறவும்" என்பது விதி (நன்: மெய்யீற்றுப்: 6) இல்லா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (5)

6. வியாசன் எல்லாம் சஞ்சயன் சொல்வான், விதி வழியே நடக்கும்' என்று சொல்லிப் போதல்.

சாற்றரு ஞான நாட்டம்
சஞ்சயற் களித்தேன் நாளும்
ஆற்றம ரியல்பு சொல்வான்
ஐயகேள் வென்றோர் தோற்பர்
தோற்றவர் வெல்வர் யாவர்
தொலையினும் இரங்கே லூழை
மாற்றிவாழ் குநர்யார் யாதும்
வரன்செய லென்று மீண்டான்.

(இ-ள்) சாற்று அரு ஞான நாட்டம் சொல்லுதற்கரிய [சிறந்த] அறிவுக் கண்களை (திவ்யசக்ஷுஸை), சஞ்சயற்கு அளித்தேன்-சஞ்சய முனிவனுக்குக் கொடுத்துள்ளேன், (அவன்) நாளும்-தினந்தோறும், ஆற்று அமர் இயல்பு சொல்வான்-(அவ்விருதிறத்தினரும்) செய்யும் போரின் போக்குத்தன்மையினையறிந்து (இங்குஉன்னிடம்) சொல்வான்: (மேலும்) ஐய கேள்:நீ நான் சொல்வதைக் கேட்பாயாக "வென்றோர்- இன்று வென்றவர், தோற்பர்-நாளை தோற்றுப் போகலாம்; (அதற்கு மாறாக) தோற்றவர்-இன்று தோற்றுப் போனவர், வெல்வர்-நாளை வெல்லலாம், யாவர் தொலையினும்-எந்தப் பக்கம் தோற்று அழிந்தாலும், (நீ) இரங்கேல்-வருந்தாதே: ஊழை-(அவரவர்க்கு விதிக்கப்பட்ட) தலை விதியை, மாற்றி-வேறுசெய்து, வாழ்குநர் யார்-வாழ்ந்தவர் யாவர்? (ஒருவருமிலர்) யாதும்-எல்லாம், வரன் செயல்- கடவுட் செயலாகும், என்று-என்று கூறி, மீண்டான்-(வியாச பகவான்) தன்னிருப்பிடம் திரும்பினான்; (எ.று)

ஞானநாட்டம்-ஞானக்கண்: அத்தினபுரி யரண்மனையிலிருந்து கொண்டே குருக்ஷேத்திரத்தில் நடக்கும் போர் நிகழ்ச்சிகளைக் கண்ணுற் கண்டறிந்து திருதராட்டிரனுக்குச் சஞ்சயன் கூறும்படி ஞானக்கண் ஈந்தான் வியாசன் என்க. வரன்-கடவுள், ஊழை மாற்றுதலரிது என்றதை "ஊழிற் பெருவலி யாவுள" என்ற குறளாலும் அறியலாம். வென்றோர் தோற்பர் தோற்றவர் வெல்வர் என ஏதுகாட்டி 'இரங்கேல்' என்றதால், ஏதுவணியின் பாற்படும், இரங்-கேல்-எதிர்மறை வினைமுற்று. வாழ்குநர்-ந், பெயரிடைநிலை. (6)

7. திருதராட்டிரன் சஞ்சயனைப் போர் செய்யும் இடம் யாதென வினவல்.

தந்தை சென்றிடலு மண்ணல்
சஞ்சயன் றன்னை யெங்கன்
மைந்தர் போர்க்கடைத லென்ன
மற்றவன் புகல்வன் வேந்தே!
இந்தமண் டலத்திற் றூய்மை
யெனுங்குருக் கேந்தி ரத்திற்
குந்திநந் தனரோ டுன்றன்
குமரர்போர்க் கடைந்த தென்றான்.

(இ-ள்) தந்தை சென்றிடலும்-வியாசன் போனபின்னர், அண்ணல்-திருதராட்டிரன், சஞ்சயன் தன்னை சஞ்சயனை நோக்கி, மைந்தர்-என் பிள்ளைகள், போர்க்கு அடைதல் எங்ஙன் என்ன-போரிடச் செல்லுதல் எந்த விடத்தில் என்று வினவ, அவன்-அந்தச் சஞ்சயன், புகல்வன்-கூறலானான்: வேந்தே!-மன்னனே! இந்த மண்டலத்தில்-இந்தப் பூவுலகத்தில், தூய்மை எனும் குருக்கேந்திரத்தில்-பரிசுத்தமான புனித தலம் என்று போற்றப்படுகின்ற குருஷேத்திரத்தில், குந்தி நந்தனரோடு—குந்தியின் மைந்தராகிய பாண்டவர்களோடு, உன்தன் குமரர்-உன்னுடைய பிள்ளைகளாகிய துரியோதனாதியர் நூற்றுவரும், போர்க்கு அடைந்தது-போரிடுதற்குச் சென்றுள்ள இடம், என்றான்-என்று பதில் கூறினான்'' (எ.று.)

''தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே'' என்றது பகவத் கீதையும், எங்ஙன் - எந்தவிடம்: ஙனம்-இடம்: அது ஙன்' எனக் குறுகிற்று. அடைதல்-அடைந்த இடத்திற் காகுதலால், தொழிலாகுபெயர். (7)

8-9. திருதராட்டிரன் ஈரேழுலகினியற்கையைப் பற்றி வினவ சஞ்சயன் சுருங்கக் கூறுதல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

என்னலு மவனை வேந்தன்
எவண்குரு பூமி யீரேழ்
பன்னுல கியற்கை முற்றும்
பகரென வவன்றீ வேழும்
பொன்னக மட்ட நாகம்
புணரியேழ் பிலமேழ் வானேழ்
மன்னுதி யளவுஞ் சீரும்
வகைவகை வகுத்து மீட்டும்.

(இ-ள்) என்னலும்-என்று (சஞ்சயன்) கூறியவுடனே, அவனை-அந்தச் சஞ்சயனை (நோக்கி), வேந்தன்-திருதராட்டிரன், குருபூமி-குருக்ஷேத்திரம், எவண் (பூவுலகத்தில்) எங்குள்ளது? ஈரேழ் பன்னுலகு இயற்கை முற்றும்-பதினான்கு என்று பேசப்படுகின்ற உலகங்

களின் தன்மைகள் முழுவதையும், பகர் என-(எனக்குச்) சொல்வாய் என்று கேட்க, அவன் - அந்தச் சஞ்சயன், தீவு ஏழும்-ஏழு தீவு களைப் பற்றியும், பொன் நகம்-பொன்மயமான மேருமலை, அட்ட நாகம்-எட்டு பர்வதங்கள், ஏழ்புணரி-ஏழுகடல்கள், ஏழ் பிலம் - ஏழு கீழுலகங்கள், ஏழ் வான் - ஏழு மேலுலகங்கள், (இவைகளினது) மன் - நிலையாகவுள்ள, நுதி அளவும் - நுணுக்கப் பரிமாணங்களைப் பற்றியும், சீரும்-சிறப்புக்களைப் பற்றியும், வகை வகை - முறை முறையாக, வகுத்து- பகுத்துச் சொல்லி, மீட்டும் - மேலும், (எ.று.)

ஏழுதீவுகள்-சப்த த்வீபங்கள் என்பர். அவையாவன) நாவலந்தீவு,(ஜம்பூத்வீபம்) இறலித்தீவு.(ப்லக்ஷத்வீபம்), இலவந்தீவு (சால்மலித்வீபம்), கிரவுஞ்சத்தீவு (பிப்பலத்வீபம்), குசைத்தீவு (குசத்வீபம்), தேக்கந்தீவு (சாகத்வீபம்), புட்கரத்தீவு(புஷ்கரத்வீபம்- என்பன. இறுதியிரண்டும் ஜலமயங்களாக அறியத்தக்கன. இவற்றுள் ஜம்பூத்வீபம்—ஸுதர்சனம் என்கிற நாவல் மரத்தை யுடையது. (ஜம்பூ—நாவல்) இந்த மரம் ஆயிரத்து நூறுயோஜனை உயர்ந்து வளர்ந்து ஆகாயத்தை அளாவிக் கொண்டிருக்கிறது. அதன்பழங்கள் தாமாகவே உடைந்து விழுகின்றபோது பெரிய ஒலியையுண்டுபண்ணுகின்றன. அ ன் சாறுகுடித்தவர்களுக்கு ஜரையானது வருத்துகிறதில்லை. அதனிடத்து ஜாம்புநதம் என்ற ஸ்வர்ணமானது உண்டாகிறது. இந்த ஜம்புத்வீபத்தைக் காட்டி லும் ப்லக்ஷத்வீபம் இரண்டு மடங்கு பெரிது சால்மலித்வீப மானது அதைவிட இரண்டு மடங்கு பெரிது. பிப்பலத்வீப மானது அதைக் காட்டிலும் இரண்டு மடங்கு பெரிது. குசத்வீபம் அதைவிட இரண்டு மடங்கு பெரிது. சாகத்வீபமானது நீண்டிருத் தலையும் குறுகியிருத்தலையும் பரிசீலனை செய்து ஜம்பூத்வீபத்தோடு சமானமாக எண்ணப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றிலும் சிறந்தது புஷ்கரத்வீபம். ஏனெனில், இதிலுள்ள பிரஜைகளுடைய பிரம்மசர்யத்தாலும், சத்யத்தாலும், மனவடக்கத்தாலும், ஆரோக்கி யத்தாலும் ஆயுள் பிராமணத்தாலும் மற்றத் தீவுகளைக் காட்டிலும் தர்மத்தால் இது இரண்டு மடங்கு மேன்மைபெற்றது.

பொன் நகம்—மேருமலை: (நகம்-மலை) இதனை ஸ்வர்ணமலை யென்பர். அது பூமியின் கீழே பதினாறாயிரம் யோசனை ஆழ்ந்த தென்றும் மேலே எண்பத்து நாலாயிரம் யோஜனை உயர்ந்ததென்றும் சிகரத்தில் முப்பத்திராயிரம் யோஜனை அகன்றதென்றும் எணணப் பட்டிருக்கிறது. அதன் தாழ்வரை எண்பத்து நாலாயிரம் யோஜனை பரப்புள்ளது. அந்த மேருவானது மேலும் கீழும் குறுக்குமாகப் பூமியைக் கவர்ந்து கொண்டிருக்கிறது- இதன் சீர்மை பேசுந்தர மன்று. இதனைச் சேர்ந்த காக்கையும் பொன்னிறமாகும். சூரிய சந்திரர்கள் வாயு இவர்கள் இதனைச் சுற்றிவருகிறுர்கள். தேவகணங்

கள், கந்தர்வர்கள், அசுரர்கள், ராக்ஷஸர்கள் அப்ஸரஸ்திரீகளுடைய கூட்டங்களோடு கூடியவர்களாக எப்பொழுதும் விளையாடுகிறார்கள். இங்கு பசுபதியானவர் விளையாடுகிறார். கங்கை இங்குள்ள மடுவிலிருந்துதான் உண்டாகிறது. அங்குள்ள மனிதர்கள் பொன்னிறமுடையவர்கள். அவர்கள் நோயும் துன்பமும் அற்றவர்கள். எப்பொழுதும் சந்தோஷமுள்ள மனத்தையுடையவர்கள்.

அட்டநாகம் - அஷ்டகுலபர்வதங்கள் : இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன. இமயமலையில் ராக்ஷஸர்கள் வசிக்கின்றார்கள்: மந்தரம் - இதனை மத்தாகக் கொண்டு பாற்கடல் கடைந்தனர். கைலாசம் - இது பார்வதி பரமேசுவரர் நித்யவாசம் செய்வது. விந்தியம் - மேருவினும் ஓங்கி வளர்ந்து சூரிய சந்திர கிரகங்களின் சஞ்சாரத்தைத் தடுத்து, பின்னர் தேவர் முனிவர் வேண்டுகோளால் அகத்தியர் இதனை மிதித்தடியினேறிக் குறுகச் செய்தனர் என்பது கதை. நிடதம் - இதில் சர்ப்பங்களும் நாகங்களும் வாசஞ் செய்கின்றன - (சர்ப்பம்-ஒருதலையுள்ளவை, நாகம்-பலதலையுள்ளவை) இங்கு, கந்தர்வர்களும் வாசஞ் செய்கின்றனர்; கோகர்ணம் என்னும், தபோவனமும் இருக்கிறது. ஏமகூடம்-இதில் குஹ்யகர்கள் வசிக்கின்றார்கள். அவர்களோடு கூட குபேரன் சந்தோஷமாயிருக்கிறான் என்பர். நீலம்-பிரம்ம ரிஷிகள் எப்போதும் வாசஞ் செய்கிறார்கள். கந்தமாதனம்-இங்கு வசிப்பவர்கள் பதினோராயிரம் வர்ஷம் எல்லையுள்ள ஆயுளையுடையவர்கள். அங்குப் புருஷர்கள் கறுத்தநிறமும், காந்தியும், அதிக பலமும் உள்ளவர்கள். பெண்டிர் தாமரை மலர் நிறம் போன்ற நிறமுடையவர்கள்: மிக்க இனிய தோற்றத்தையுடையவர்கள். இந்தக் கந்தமாதன மலைச்சிகரங்களிலும் குபேரன் ராக்ஷஸர்களோடுகூட சந்தோஷமாயிருக்கிறான் என்பர். ஏழு கடல்கள் - உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல். இவற்றைச் சப்தசாகரம் என்பர். பூமியின் கீழ் ஏழுலகங்கள் - அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாலம் என்பன. மேல் ஏழுலகங்கள்—பூலோகம், புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பன - நுதி-நுனி, கூர்மை: எனவே நுணுக்கம்,

9. நாவலந் தீவே யாகும்
நவகண்ட மதனு ளியாமும்
மேவுறு பரத கண்டம்
மேன்மையிப் பரதந் தன்னில்

பாவலர் புகழ்சி மந்த
பஞ்சக மந்நீர்ப் பாங்கே
தேவரும் புகழ் குருக்கேத்
திரமெனத் தெரிதி யென்றான்.

(இ-ள்) நாவலந்தீவே நவகண்டம் ஆகும்-ஜம்பூத்வீபம் என்பது ஒன்பது கண்டங்களையுடையதாகும்: அதனுள்-அந்த நவகண்டங்களுள், யாமும்-நாமும், மேவுறு-பொருந்தி வசிக்கின்ற, பரதகண்டம்-இந்தப் பரத கண்டமானது, மேன்மை-மிகவும் சிலாக்கியமானது: இ பரதம் தன்னில்-இந்தப் பரதகண்டத்தில், பாவலர் புகழ்-புலவர்களால் புகழப்படுகின்ற, சிமந்த பஞ்சகம்- ஸ்யமந்த பஞ்சகம் என்ற ஐந்து தடாகங்கள் உண்டு: அ நீர்ப் பாங்கே-அந்தத் தடாகங்களின் பக்கத்தில், தேவரும் புகழ்-தேவர்களாலும் புகழப் படுகின்ற, குருக்கேத்திரம் - குருக்ஷேத்திரம் இருக்கின்றது, என-என்று, தெரிதி-தெரிந்து கொள்வாயாக, என்றான்-என்று சஞ்சயன் கூறினான் (எ-று)

'குருபூமி எவண்? என்று திருதராட்டிரன் வினவியதற்கு விடையாகச் சஞ்சயன் கூறியபடி. நவகண்டங்களாவன-கீழ்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபால் விதேகம், தென்பால் விதேகம், வடபாலிரேபதம், தென்பாலிரேபதம், வடபாற்பரதம், தென்பாற்பரதம், மத்திம கண்டம் எனப் பூமியின் பிரிவாயமைந்துள்ள ஒன்பது கண்டங்கள். இவற்றுள் வடபாற் பரத கண்டத்தில் சியமந்தபஞ்சகமும் குருக்ஷேத்திரமும் உள்ளன. சியமந்தபஞ்சகம் — பரசுராமன் இருபத்தொருகால் அரசுகளைகட்டு (அதாவது, இருபத்தொரு தலைமுறை அரசர்களை யொழித்து) அவ்வரசர்களது இரத்த வெள்ளத்தால் ஸ்யமந்த பஞ்சகமென்று ஐந்து தடாகங்களை யேற்படுத்தி அவற்றில் தந்தையாகிய ஜமதக்னி முனிவனுக்குத் தருப்பணஞ் செய்திட்டான் என்பது பாகவதசரிதம். சியமந்த பஞ்சகம் புலவர்பாடும் புகழுடையது என்றபடி. தெரிதி-முன்னிலை வியங்கோள். (9)

10. சஞ்சயன் கௌரவ சேனையின் வளங்கண்டு கூறல்—பார்த்தன் சோகத்தினால் மனமுருகுதல்.

சொற்ற சஞ்சயனை வேந்தன்
சுதருழை நீசென் றப்போர்
உற்றவா றுணர்ந்தீண் டெய்தி
யுரையெனச் சுயோத னன்பான்
மற்றவ னெய்தித் தானை
வளங்கனுற் றிருந்தான் பார்த்தன்
புற்றர வுயர்த்தோன் சேனைப்
புணரிகண் டுருகிச் சொல்வான்.

(இ-ள்) சொற்ற சஞ்சயனை - [குருக்ஷேத்திரமுள்ள இடத்தைச்] சொல்லிய சஞ்சயனை, வேந்தன் - திருதராட்டிரன், நீ—, சுதர் உழை சென்று - மைந்தர்களிடம் போய், அ போர் உற்றவாறு உணர்ந்து- அந்தப்போர் நிகழப்போகின்ற விதத்தை யறிந்து, ஈண்டு எய்தி - இங்கே (என்னிடம்) வந்து, உரை என - (எனக்குச்) சொல்வாயாக' என்று கூற, அவன்-அந்தச் சஞ்சயன், சுயோதனன் பால் எய்தி-துரியோதனனிடம் வந்து, தானை வளம் கனுற்று—அவ னது சேனையின் அபிவிருத்தியை பார்த்து. இருந்தான்-தங்கியிருந் தான்: (இஃது இவ்வாருக) பார்த்தன்-அருச்சுனன், புற்று அரவு உயர்த்தோன்-புற்றில் வாழும் பாம்பினைப் படமாகக் கொடியி லெழுதியுயரத் தூக்கிய துரியோதனனின், புணரிகண்டு-சேனைக்கட லைப் பார்த்து, உருகி-மனம் கசிந்து. சொல்வான்-கூறுவாருயினுன்; (எ.று)

அருச்சுனன் துரியோதனன் சேனையைக் கண்டு மனமுருகியது என்னெனின், உற்றுரைக் கொல்ல வேண்டுமே யென்று கலங்கிய தாலாகும். இது மேலைக்கவியால் விளங்கும், உரை-முன்னிலையேவல்; சேனைப்புணரி—உருவகம். (10)

வேறு.

11. அருச்சுனன் போர் வேண்டேன் என, கண்ணபிரான் உண்மை யுபதேசிக்கத் தொடங்குதல்.

நின்றவர்போர்க் காசிரியர் துணைவர்பிதா
மகன்கிளைஞர் நிகழ்போர் தம்மிற்
கொன்றவனி யாம்பெறுதற் கொடும்பாவ
மாதலினாற் கொடும்போர் வேண்டேன்
என்றுபல பலவாய்மை யெழிற்றிருமா
லோடுரைக்க வெந்தை கேளா
நன்றுரைத்தாய் அமர்மாயை யாலறிவை
யுணராமல் நவிலக் கேண்மோ.

(இ-ள்) போர்க்கு-யுத்தஞ் செய்வதற்கு, *நின்றவர்*-எதிர்ப் பக்கத்தில் நின்றிருப்பவர்கள், ஆசிரியர்- (எனக்கு வில்வித்தை கற்பித்த) ஆசிரியராகிய துரோணாசாரியர், துணைவர்-தம்பியர், பிதா மகன்-பாட்டனாராகிய வீடுமன், கிளைஞர்-சுற்றத்தவர் (இன்னோராவர்): நிகழ்போர் தம்மில்-நடக்கப் போகின்ற யுத்தத்தில், கொன்று-[முற்கூறிய] அவர்கள் அத்தனை பேரையும் மடியவைத்து, யாம் அவனி பெறுதல்-நாம் பூமி (யாட்சியைப்) பெறுதல், கொடும்பாவம்-மிகக் கொடிய பாபகாரியமாகும்: ஆதலினால்-ஆகையால், கொடும் போர் வேண்டேன்-கொடியஇந்தப் போரைச் செய்ய விரும்பேன். என்று பல பல வாய்மை-என்று மிகப் பல வார்த்தைகளை, எழில் திருமாலோடு உரைக்க-அழகிய கிருஷ்ணனோடு சொல்ல, எந்தை-எம்பெருமானாகிய அந்தக் கிருஷ்ணன், கேளா-கேட்டு, அமர் மாயையால்-பொருந்திய மாயையினால், அறிவை உணராமல்-உண்மையான தத்துவத்தை யறிந்து கொள்ளாமல், நன்று உரைத்தாய்-நல்ல அழகாகச் சொன்னாய்! (அழகன்று என்றபடி): நவில-[இனி] யான் சொல்வதை, கேள்-நீ கேட்பாயாக; (எ.று.) மோ-முன்னிலையசை.

எதிர்வந்து நின்ற வீரர் யாவரும் தனக்குக் கல்வி பயிற்றிய ஆசாரியரும், தம்பியரும், நண்பர்களும், பாட்டனும், ஏனைய அண்ணன் மாமன் போன்ற சுற்றத்தாருமாக விருக்கக் கண்டு அருச்சுனன் மனம் மாறி, இப்போது போரினை மேற்கொள்ளேன் என்று கூறினான். அதற்கு உத்தரம் கூறுகிறான் கிருஷ்ணன் என்க.

மாயையாவது-உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவும் காட்டும் எம்பெருமானது ஒரு சக்தி. மனம் அந்த மாயைக்கு வசப்பட்ட போது பொருள்களின்

நிலையை உள்ளபடி அறியுந் தத்துவஞானம் தோன்றுவதில்லை. ஆகவே, நிலையுள்ள பொருள்களை நிலையில்லாதனவென்றும், நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளனவென்றும் மாறுபட அறியும் விபரீத ஞானம் தலையெடுக்கும். அதனாலேயே நித்தியமான ஆத்மாவுக்கு யாதொரு சம்பந்தமும் படாமல் அநித்தியமான தேகத்தையே பற்றிய தந்தை தாய் முதலியோரிடத்துச் சுற்றத்தவரென்ற பொய்யபிமானம் உண்டாகி நிலைநிற்கின்றது கேளா-உடன்பாட்டெச்சம். எந்தை-ஆசிரியரின் கிருஷ்ண பக்தியைக் காட்டுவது.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் உள்ள ஐந்து கவிகள்-முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும் மற்றையிரண்டும் மாச்சீர்களுமாய் வந்த கழிநெடிலடி அறுசீராசிரிய விருத்தங்கள். (11)

12-14. இது முதல் மூன்று கவிகள்—கண்ணன் அருச்சுனனுக்குத் தத்துவங்களையுபதேசித்தமையைக் கூறி, விசுவரூபங் காட்டியமையும் கூறும்.

ஊழிபுனற் கனல்வளியா லொழியாமற்
பூரணமா யுருவின் றென்றும்
வாழியநல் லறிவனைநீ வாளியினாற்
சேதிக்க வயமோ மாயை
ஏழையினா லறிவறியா திருவினையா
யெடுத்துடலம் இரண்டுந் துய்ப்பார்
சூழுமயல் துலைத்தறிவாஞ் சூழ்ச்சியறி
பவரேநற் றூயோ ராவார்.

(இ-ள்) ஊழி-நிலம், புனல்-நீர், கனல்-தீ, வளியால்-காற்று இவற்றால், ஒழியாமல்-அழிந்துபடாமல், பூரணமாய்-முழுமையுடையதாய், உரு இன்று-வடிவொன்றும் இல்லாததாய், என்றும் வாழிய-எப்போதும் நிலைத்திருக்கின்ற, அறிவனை-ஞானமென்கிற ஆன்மாவை, நீ—, வாளியினால்-(உனது) அம்பினால், சேதிக்க-துண்டாக்கியழிக்க, வயமோ-முடியுமோ? (முடியாது): மாயை ஏழையினால்-மாயை காரணமாகிய அறிவின்மையினால், அறிவு அறியாது-உண்மை ஞானம் இன்னது என்பதனையுணராது, இருவினையால்-நல்வினை தீவினைகளால், உடலம் எடுத்து-ஸ்தூல சரீரத்தை [தேகத்தை]யெடுத்து, இரண்டும் துய்ப்பார்—(அந்த சரீரத்தைக் கொண்டே மீண்டும்) அந்த இரண்டு வினைகளையும் செய்து

அவற்றின் பயனையநுபவிப்பர்: (அதனால்) சூழும் மயல் துலைத்து - சுற்றிக் கவிந்து கொள்ளும் மயக்கத்தையொழித்து, அறிவாம் சூழ்ச்சி அறிபவரே-அறிவாகிய ஆன்மாவின் நுணுக்கத்தைத் தெரிந்து கொள்பவரே, நல் தூயோர் ஆவார்-நல்ல பரிசுத்தமான ஞானி களாவார்கள்: (எ.று)

ஆன்மாவை ஆயுதங்கள் வெட்டுகிறதில்லை, நெருப்பு எரிக்கிற தில்லை, தண்ணீர் நனைக்கிறதில்லை, காற்று உலர்த்துகிறதில்லை என்ற கருத்துடைய ''நைனம் சிந்தந்தி சஸ்த்ராணி நைனம் தஹதி பாவக: ந சைனம் க்லேதயந் த்யாபோ ந சோஷயதி மாருத:'' என்ற கீதா சுலோகத்தையும் [II-23]

ஆன்மா வெட்டப்படத்தக்கவனுமல்ல, எரிக்கப்படத்தக்க வனுமல்ல, நனைக்கப்படத்தக்கவனுமல்ல, உலர்த்தப்படத்தக்கவனு மல்ல: நித்யனும், எங்கும் நிறைந்தவனும், ஸ்திர ஸ்வபாவமுள்ள வனும், சலிக்காதவனும், அநாதியாயுமிருக்கிறவன் என்ற கருத்து டைய

''அச்சேத்யோ அயமதாஹ்யோ அயம்
அக்லேத்யோ அசோஷ்ய ஏவ ச
நித்ய: ஸர்வகத: ஸ்தாணு: ||
ரசலோ அயம் ஸநாதன:

என்ற கீதா சுலோகத்தையும் (II-24)

ஓ! அர்ஜுனா! எவன் ஆன்மாவைப் பிறப்பற்றவன், குறைதலற் றவன், நாசமற்றவன், உயருதலற்றவன் என்பதாக அறிகிறானோ, அந்த மனிதன் யாரையாவது கொல்லவாவது கொல்லுவிக்கவாவது எப்படி முடியும்? என்ற கருத்துடைய

''வேதா விநாசினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம் |
கதம் ஸ புருஷ:பார்த்த கம் காதயதி ஹந்தி கம் ||

என்ற கீதா சுலோகத்தையும் (II-21) ஈண்டு அநுசந்திக்கவும். இந்த உடலம் ''வினையின் விளைவது, வினைக்கு உடலாவது'' என்றது மணிமேகலையும். மயல்—மயக்கம்: ஒன்றை மற்றொன்றாக மாறுபட அறியும் விபரீத ஞானம். தூயோர்-புத்திமான்கள், ஞானிகள். ஊழி. உலகம்: 'ஊழியேழான வொருவா போற்றி'' என்றது தேவாரம். (1160,8). இங்கே நிலம் (பிருதிவி) காட்டுவது. இனி, ஊழிக் காலத்தும் ஒழியாமல் என இயைத்துப்பொருள் கொள்ளினுமாம்.

(12)

13. உடுத்தகலை விடுத்தேவே றுடுப்பது போல்
வேறுடலி லுறுத லான்மா

நடத்துநரு மத்தாளுய் நாடில்பவம்
வேறெண்ணி நண்ணுநம் பாதம்

தடுத்தறிவை மாயைபுரி தன்மையினுல்
தந்தார்சேய் தாரஞ் சுற்றம்

அடுத்தபகை யுறவெனத்தோன் றம்மாயைப்
பிணிப்பவிழ்த்தால் அறிவே தோற்றும்.

(இ-ள்) உடுத்த கலை விடுத்து-(தான்) தரித்திருந்த ஆடையை நீத்து, வேறு உடுப்பது போல்-வேருெரு ஆடையை அணிவது போல, ஆன்மா-(இந்த உடல் தரித்துள்ள) ஆன்மாவானது, வேறு உடலில் உறுதல்-வேருெரு உடம்பிலே (இந்த உடல் போன பின்) சென்று சேர்தல் என்பது இயல்பு: (ஆகவே) நடத்துநரும்-அங்ஙனம் ஆன்மாவை இயக்குபவரும். அ தாளுய் நாடில் -(அந்தத்) தான் தான் என்று எண்ணுவாளுயின், பவம்-பாவமாகும் (குற்றமாகும்): (ஆதலின்) வேறு எண்ணி-அந்த ஆன்மாவை இயக்குபவனும் வேருெருவன் என்று எண்ணித் துணிந்து, நம் பாதம் நண்ணு-என்னுடைய திருவடிகளைக் கிட்டி அடைக்கலம் புகுவாய்: மாயை-மாயையாகிய விபரீத ஞானம், அறிவை-உண்மையான தத்துவ ஞானத்தை, தடுத்து-(ஓங்க விடாமல்) தடை செய்து, புரி-செய்கின்ற, தன்மையினுல்-இயல்பினுல், தந்தார்-பெற்றோர் (தாய் தந்தை), சேய்-பிள்ளை, தாரம்-மனைவி, சுற்றம்-உறவினர், அடுத்த பகை - நேர்ந்துள்ள பகைவர்கள், உறவு - நண்பர்கள், என தோன்ற-என்று சம்பந்தம் தோன்ற, (நாம்) அ மாயைப் பிணிப்பு அவிழ்த்தால்-அந்த மாயையின் கட்டினின்று விடுபட்டால், அறிவே தோற்றும்-உண்மை ஞானமே (தத்துவஞானம்) வெளிப்படும்; (எ.று).

"வாஸாம்ஸி ஜீர்ணனி யதா விஹாய
நவானி க்ருஹ்ணுதி நரோஅபராணி

ததா சரீராணி விஹாய ஜீர்ண -
ன்யன்யானி ஸம்யாதி நவானி தேஹீ

[மனிதன் எப்படிப் பழைய துணிகளை விட்டுவிட்டு வேறு புதிய துணிகளைக் கொள்கிருனே அப்படியே தேகத்தைக் கொள்ளும் ஆன்மாவானவன் பழைய உடல்களை விட்டுவிட்டு வேறு புதிய உடல்களை யடைகிருன்] என்ற கீதா சுலோகத்தின் கருத்து (II-22) ஈண்டு அநுசந்திக்கவும். ஆன்மாவை நடத்துபவன் பரமான்மாவாகிய சர்வேசுவரன் என்பது சித்தாந்தம்: ஆகையால் நடத்துபவன் தான் தான் என்று அகங்கரிப்பாளுயின் பாவமாகி நரகம் சித்திக்கும் என்றபடி. நித்தியமான ஆத்மாவுக்கு யாதொரு சம்பந்தமும் படாமல் அநித்தியமான தேகத்தையே பற்றிய தாய் தந்தை முதலியோரிடத்து நமரென்றும் சுற்றத்தவரென்றும் பொய்யபிமானம் உண்டாகி நிலைநிற்கின்றது மாயாகாரியம் என்பது உணர்க. மற்றும் எல்லாச் சீவான்மாக்களிடத்தும் பரமான்மா ஒருதன்மையாகவே பொருந்தியிருக்கையில் அவற்றில் சிலவற்றைப் பகையாகவும் சிலவற்றை நண்பாகவும் கருதுவது மாயாகாரியமாகும் என்பதும் உணரவேண்டுவது, அந்த மாயை நீங்குமாயின் தத்துவஞானம் நிலைப்படும் என்றபடி. "மம மாயா துரத்யயா மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே II ('VII, 14)

[என் மாயையைத் தாண்டுவது கடினம். எவர்கள் என்னையே சரணமடைகிருர்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டி விடுவார்கள்] என்றது நினைக.

'நண்ணு நம் பாதம்' என்றவிடத்து அறியவேண்டிய முக்கியமான கீதா சுலோகம்—"=ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அகம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச." என்பது - XVIII, 66 இது, சரம சுலோகம் எனப்பெரிதும் கொண்டாடப்படும். நண்ணு-முன்னிலையேவல். நடத்துநர், ந்- பெயரிடைநிலை. தந்தார் - வினையாலணையும் பெயர். தோன்ற+அம் மாயை=தோன்றவம்மாயை என வரவேண்டியது: அது தோன்றம் மாயை என வகரவுடம்படுமெய் கெட்டு வந்தது. முதலடியில் **உவமையணிகாண்க.**

(13)

14. தோற்றறறிவே யுயிர்கடொறுஞ் சுவைப்பால்நெய்
போன்றிருக்கும் தூயோய்! ஓர்தி
சாற்றரிய வவ்வறிவே யான்காண்டியென
வான்பிலமுந் தாளுய் நின்ருன்

ஏற்றரன்மால் அயனயிலோன் புரந்தரனு
தியர்முனிவர் யாவ ராலும்
போற்றரிய பேருருவி லிருந்திடக்கண்
டருச்சுனனும் போற்றி நின்றே.

(இ-ள்) தோற்று அறிவே-தோன்றுகின்ற (அத்தகைய தத்துவ) ஞானமே, உயிர்கள் தொறும்-எல்லா ஜீவான்மாக்களிடத்தும், சுவைப்பால் நெய் போன்றிருக்கும் - மிக்க ருசியையுடைய பாலி னிடத்து நெய் போல (விட்டுப் பிரியாது) உள்ளுறைந்து நிற்கும்: தூயோய்!-புனிதனாகிய பார்த்தனே! ஓர்தி - (இதனை) அறிந்து கொள்: சாற்ற அரிய-(வாய்விட்டு இப்படித்தெனச்) சொல்லுதற்கு இயலாத, அ அறிவே-அந்தத் தத்துவ ஞானமே, யான் - நான் ஆவேன்: காண்டி—(இதோ) கண்ணால் பார்ப்பாயாக, என - என்று உபதேசித்து, (ஸ்ரீகிருஷ்ணன்) வான் பிலமும்-ஆகாய முதல் பாதாளம் வரை, தானாய் - தான் ஒருவனேயாய் (ஏகனாய்), நின்றான் - பெருந் தோற்றமெடுத்து (விசுவரூபமெடுத்து) ஓங்கி நின்றான்: யாவராலும் - எவராலும், போற்ற அரிய பேர் உருவில் - துதித்தற்கு அரிதாகிய பெரிய உருவத்தில், ஏற்று அரன்-எருத்துக் கொடியையுடைய சிவன், மால்-விட்டுணு, அயன்-பிரமன், அயிலோன் - முருகன், புரந்தரன் ஆதியர் - இந்திரன் முதலானவர்கள், முனிவர் - இருடிகள், இருந்திடக்கண்டு - (அங்கமாக) இருத்தலைப் பார்த்து, அருச்சுனனும்—, (வியந்து அஞ்சி) போற்றி நின்று-ஸ்தோத்திரஞ் செய்து நின்று; (எ.று) பண்டையுருக் கொள்கென" என மேலைக் கவியில் இயையும்.

அறிவே உயிர்கள் தோறும் இருக்கும் என்றவிடத்து, 'அறிவு என்பது அறிவனைக் காட்டும். அறிவனாவது-சுத்த ஞான மென்கிற புருஷன்: பரமான்மா. இந்தப் பரமான்மா எல்லாச் சீவான்மாக்களிடத்தும் பாலில்படு நெய்போல் மறைய நிற்கும்: வில்லிபுத்தூரரும் "அந்த நல்லறிவன்....சராசரப் பொருள்கடோறும் வந்த ஆன் தீம்பால் நெய் போல் உயிர்க்குயிராகி வாழும்" என்று அருளிச்செய்தார். பால்நெய் - விட்டுப் பிரியாது உள்ளுறைதற்கு உவமம். "பரமான்மா யானே" என்ற தன் நிலையை விசுவரூப மெடுத்து அருச்சுனனுக்குக் காட்டித் தெளிவித்தான் என்றபடி. கீதையில் பதினோராவது அத்தியாயம் 'விச்வரூப தர்சனயோகம் எனப்படும். "இது" விச்வருபஸந்தர்சனயோகம்" என்றும் வழங்கப் படும். ஓர்தி, காண்டி - முன்னிலையேவல். சாற்றரிய, போற்றரிய- பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். ஏறு-இடபம், எருது: இதனைக் கொடியாகவும் வாகனமாகவும் கொண்டான் சிவன். "ஊர்திவால் வெள்ளேறே சிறந்த, சீர்கெழு கொடியும் அவ்

வேறென்ப" என்றது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துச் செய்யுள். (14)

15. உபதேசத்தால் தெளிந்த அருச்சுனன் செருச்செய்யச் சித்தனுதல்.

தண்டுளவோய்! அரிதாய தனியுருவை
யுளங்களிக்கத் தவத்தாற் கண்டேன்
பண்டையுருக் கொள்கெனத்தாட் பணிந்திடமுன்
போன்றமலன் பார்த்த! நீயும்
கொண்டமயக் கொழிகவெனக் கூறலுந்தத்
துவமனைத்தும் குனிவில் வல்லோன்
விண்டகல மாயையுள மிகத்தெளிந்து
மலைவான்கை விற்கொண் டானே.

(இ-ள்) தண் துளவோய்! - குளிர்ந்த திருத்துழாய் மாலை யுடையவனே! (நுமது) அரிதாய தனி உருவை-(காண்பதற்கு) அரியதாகிய ஒப்பற்ற விசுவரூபத்தை, உளம் களிக்க-(என்) மனம் மகிழுமாறு, தவத்தால் கண்டேன்-(முன் செய்துள்ள) தவப்பயனால் (இப்போது) பார்த்தேன்: (பயப்படுகிறேன்): பண்டை உரு கொள்க என-முன்னம் இருந்த அந்த ரூபத்தையே கொள்வீராக என்று பிரார்த்தித்து, தாள் பணிந்திட-(அவரது) திருவடிகளில் வணங்க, முன் போன்று-(தன் மேனி யொடுக்கி) முன்னம் இருந் தது போலவே யிருந்து, அமலன்-ஸ்ரீகிருஷ்ணன், (அருச்சுனனை நோக்கி) 'பார்த்த!-அருச்சுனனே! நீயும்—, கொண்ட மயக்கு ஒழிக என-மேற்கொண்டிருந்த மயக்கத்தை (விபரீதஅறிவை) விட்டொழிப் பாயாக என்று கூறி, (மேலும்) தத்துவம் அனைத்தும் கூறலும்-உண்மைப் பொருள்கள் எல்லாவற்றையும் உபதேசிக்கவும், (அது கேட்ட) குனி வில் வல்லோன்-வளைக்கின்ற வில்லின் வித்தையில் மிக்க வல்லமையையுடைய அருச்சுனனும், மாயை விண்டு அகல-(தன்னிடத்திருந்த) மாயை விட்டு நீங்க, உளம் மிக தெளிந்து-மனம் மிகவும் தெளிவடைந்து, மலைவான்-போரிடுதற்கு, வில் கைக் கொண்டான்-(தனது) காண்டீபத்தைக் கையிலெடுத்துக் கொண் டான்; (எ.று). ஏ-ஈற்றசை.

அரிதாய தனிஉரு-வேதங்களாலும், தவத்தினுலும், தானத்தி னுலும், யாகத்தினுலும் காண்பதற்கு அரியதாகிய பகவத் ஸ்வரூபம். 'தவத்தாற் கண்டேன்' என்றவிடத்து, ஸ்ரீகிருஷ்ணன் "அருச் சுனனே! நீ பார்த்த என்னுடைய இந்த விச்வருபமானது எவ்விதத் தாலும் ஒருவராலும் காண முடியாதது" என்று கூறினதை

நினைக்கவும். தத்துவமனைத்தும் கூறல்-கீதோபதேசம் செய்தல். ஈற்றடியில் ''நஷ்டோமோஹ ஸ்மிருதிர் லப்த த்வத் ப்ரசாதான்ம யச்சுத ஸ்திதோஸ்மி கத ஸந்தேகஹ; கரிஷ்யே வசனம் தவ'' என்ற கீதா சுலோகம் அநுசந்திக்கவும்.

கொள்கென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல் மலைவான்-வினையெச்சம். ஒழிக-முன்னிலையேவல், (15)

பகவத்கீதைச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

முதற்போர்ச் சருக்கம்

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்த பதினெட்டு நாளை யுத்தத்தில் முதல்நாள் யுத்தத்தைக் கூறும் பாகமென்று பொருள்.

வேறு.

1. **கிருஷ்ணன் பாண்டவருடன் வீடுமனைக் குறுகி. "நீ எதிர்ப்பின் எம்மால் வெல்ல முடியுமோ?" எனல்.**

போர்க்கிசைந் திடவிற் பார்த்தன்
புயல்வண னைவர் தம்மோ
டார்க்குமா நதிசேய் பாங்கர்
அடைந்தம ரவரோ டாற்ற
நேர்கொளத் தகுமோ வென்ன
நீத்தவன் புகல்வான் தன்மன்
பார்க்கர சாமு பாயம்
பகருவேன் கேண்மி னென்றே.

(இ-ள்) வில் பார்த்தன்-வில்லில் வல்ல அருச்சுனன், போர்க்கு இசைந்திட-போரிடுதற்குச் சம்மதிக்கவே, புயல்வணன்-மேகநிற வண்ணனாகிய கிருஷ்ணன், ஐவர் தம்மோடு-பாண்டவரை வருடன், ஆர்க்கும் மா நதி-ஆரவாரிக்கின்ற பெரிய கங்கா நதியின், சேய்-புதல்வனாகிய வீடுமனின், பாங்கர்-பக்கத்தில், அடைந்து-வந்து, (அவ் வீடுமனை நோக்கி) 'அவரோடு-உன் பௌத்திரர்களாகிய பாண்டவரோடு, அமர் ஆற்ற-போரினைச் செய்ய, (நீர்) நேர் கொளத் தகுமோ? - எதிர்த்து வருதல் நீதியோ? என்ன-என்று வினவ. (அதற்கு விடையாக) நீத்தவன்-உலகப் பற்றுக்களை விட்ட வீடுமன். 'தன்மன்-தருமபுத்திரன், பார்க்கு அரசு ஆம் உபாயம்-பூமிக்கு அரசனாகும் வழியை, பகருவேன்-கூறுவேன், கேண்மின்-

(நீங்கள்) கேட்பீராக, என்று-என்று சொல்லி, புகல்வான்-(வழி) கூறுவானாயினான்; (ட-று)

பெரியோரைப் பணிந்து அவரனுமதியும் ஆசியும் பெற்றுப் போர் புரிதலே வெற்றியை விளைக்கும் என்ற நூற்கொள்கை இங்கு அறியத்தக்கது, வீடுமன் தான் நினைத்தபொழுது உயிரை விடுதல் முதலிய பெரு வரங்களைப் பெற்றவனும், யாவராலும் வெல்ல முடியாத பராக்கிரமசாலியுமாதலால், அவனை வெல்லுதற்கு அவனையே உபாயங் கேட்குமாறு கிருஷ்ணன் இங்ஙனஞ் சென்று வினவினான். நதிசேய்-வீடுமன்: கங்கா நதியின் பெண் தெய்வம் பிரமசாபத்தினால் மானுட மகளாய்த் தோன்றியபோது அவ்வாறான சாபத்தினாலேயே சந்தனுவாகப் பிறந்த வருணதேவனுக்கு வீடுமன் புத்திரனாகப் பிறந் தானாதலால், அவனை 'நதிசேய்' என்றார். வீடுமன் தேவ விரதனாதலின் 'நீத்தவன் என்றது. தகுமோ, ஓ-வினா, எதிர்மறை குறிப்பது. பகருவேன்—தன்மையொருமை. கேண்மின், மின்-முன்னிலையசை.

இது முதல் நான்கு கவிகள்-ஒன்று நான்காஞ் சீர்கள் விளச் சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகி வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. வீடுமன் தன்னை வெல்லும் உபாயத்தைக் கூறல்.

முற்பகை கொண்டு வெல்வான்
  முயன்றிடுஞ் சிகண்டி யென்முன்
விற்படை வாங்கில் யான்கை
  விற்றொடேன் ஓரம் பொன்மேற்
பற்குனன் எய்யில் வீழ்வேன்
  பலிக்குறும் எண்ண மென்ன
நற்குணன் விடைகொண் டாசான்
  நணுகுழி யணுகிச் சொல்வான்.

(இ-ள்) முன் பகை கொண்டு-முற்பிறப்பிலேயே [அம்பை என்றபெயரோடிருந்து என்மீது] வயிரங்கொண்டு, வெல்வான் முயன்றிடும்-(என்னை) வெல்ல வேண்டுமென்று முயன்று வரு கின்ற, சிகண்டி- சிகண்டியென்பான், என் முன் வில் படை வாங்கில்- என் முன் (போரில்) வந்து (தனது) வில்லை வளைத்து

எய்யநிற்பாருகில்- யான்-நான், கை-(என்) கைகளால், வில் தொடேன்-வில்லைக் கீழேபோகட்டுவிடுவேன் (வெறுங்கையோடு நிற்பேன்):[அப்போது அந்தச்சிகண்டியை முன்னிட்டுக் கொண்டு] பற்குனன்-அருச்சுனன், என்மேல்-என்மீது, ஓர் அம்பு எய்யில்-அம்பொன்றைச்செலுத்துவாருயின், வீழ்வேன்-யான் தரையில் சாய்வேன்: (இப்படிச்செய்வீராயின்) எண்ணம் பலிக்குறும்-(நுமது)கருத்துமுற்றுப்பெறும், என்ன- என்று உபாயம் கூற, (அது கேட்ட பின்பு) நற்குணன்-நல்ல பண்புகளையுடைய கிருஷ்ணன், விடைகொண்டு-வீடுமனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, ஆசான் நணுகு உழி - ஆசிரியருகிய துரோணர் இருக்கும் இடத்தை, அணுகி-அடைந்து- சொல்வான் (அவரை நோக்கிக்) கூறுவாருயினுன்; (எ-று) கிருஷ்ணன் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

அம்பை தவஞ்செய்து யாகசேனனிடம் (துருபதனிடம்) சேர்ந்தபோது பெற்றபெயர் சிகண்டி யென்பது. முதலிற் பெண்ணுகப்பிறந்து பின்பு யக்ஷனது அருளால் ஆண்தன்மையைப் பெற்ற சிகண்டியுடன் வீடுமன் போர்செய்யவில்லை யென்க. சிகண்டியெய்த அம்பையுள்ளிட்டு அருச்சுனன் அம்பெய்வனுயின் நான் வீழ்வேன் என்றபடி, அம்பையை மணஞ்செய்து கொள்ள வீடுமன் மறுத்தபோது, அவள் 'இந்தவீடுமனை வெல்லும் சூரனுவேன்' என்று பெருந்தவமியற்றி, அவ்வடிவம் நீங்க இப்போது சிகண்டியாய்த் துருபதனிடம் தோன்றினளாதலின், "முற்பகை கொண்டு வெல்வான் முயன்றிடும் சிகண்டி" யென்றது. வெல்வான் - வானீற்று வினையெச்சம், தொடேன், வீழ்வேன்- தன்மையொருமை வினைமுற்றுக்கள். (௨)

3. துரோணன் தன்னை வெல்லும் உபாயங் கூறல்.

ஆரியன் சீடர் தம்மோ
டமரடா தெனமூ வைந்தாம்
போரினிற் றரும னென்சேய்
பொன்றின னென்று வந்தென்
நேரியம் பிடில்விற் பற்றேன்
நேரலன் திட்டத் தூய்மன்
கூரிய விசிகத் தாவி
கொண்மினென் றேவி னுனே.

(இ-ள்) ஆரியன்-துரோணாசாரியராகிய ஆசிரியர், சீடர்தம் மோடு- (தம்முடைய) மாணுக்கர்களாகிய பாண்டவர்களோடு, அமர் அடாது என-போர்செய்தல் தகுதியன்று என்று கிருஷ் ணன் சொல்ல, [அதற்கு உத்தரமாகத் துரோணர்] மூவைந்தாம் போரினில்- பதினைந்தாம் நாட்போரிலே, தருமன் - தருமபுத்திரன் 'என் சேய் பொன்றினன்' என்று - 'என்மகனுகிய அசுவத்தாமன இறந்திட்டான்' என்று, என் நேர் வந்து- எனக்குநேராக வந்து, இயம்பிடில்- கூறுவனேயாயின், வில் பற்றேன்- (அக்கணமே சோகத்தினுல், வில்லைப்போகட்டு வெறுங்கையனுயிருப்பேன்:(அப் போது) நேரலன் திட்டதுய்மன்-எனக்குப்பகைவனுயமைந்த திருஷ்டத்யும்நன், கூரிய விசிகத்து - கூர்மையான அம்பினுல், ஆவி கொண்மின்- என்உயிரைப்போக்கட்டும், என்று-என்று உபாயங்கூறி, ஏவினுன்-(அப் பாண்டவரைக்கிருஷ்ணனேடு) அனுப் பினுன்,(எ.று)

நேரில்விற்பிடித்து நிற்கையில் என்னைக்கொல்ல வல்லாரில்லை யாததால் நம்பத்தகுந்த புருஷனைக்கொண்டு எனக்குமிகவும் அநிஷ் டமான நிகழ்ச்சியொன்று நிகழ்ந்ததாகக் கூறின், கையிற்பிடித்த சாபத்தைச் சோகத்தினுல் விட்டிடுவேன்: அப்போது என்னைக் கொல்லலாமென்று உபாயங்கூறினுனென்று வியாசபாரதம் கூறும்.

"என்மகனே யென்முன் னிறந்தானெனு மாற்றம், மன்னவை யுட் கேட்பிக்க: வல்லையேல்—பின்னை, அடலுக வென்றிண்டோ ளம்புகவா வென்கை. யுடலுகவா வென்ற னுயிர்" என்பது, பாரத வெண்பா. துருபதன் துரோணனைக் கொல்லும்பொருட்டு ஒரு புத்திரனுண்டாகவேண்டுமென்று செய்த யாகத்தில் திட்டத்துய்மன் தோன்றினனுதலின், அதனை நினைந்து நேரலன் திட்டத்துய்மன் என்ருன். "இற்றைக்கு மூவைந்தா நாளி விகலமருட், கொற்றப் போர் மன்னவனே கூசாதே- வெற்றிகொளும், பாஞ்சாலன் புத்தி ரன் கைப்படுவே னென்றுரைத்தான், தான்சாயு மாறே தரித்து" என்றுர் பெருந்தேவனுரும்.

(3)

4. தருமன் தன்படையை வியூகம்வகுத்தபின், இருதிறத்துப்படை யும் எதிரிடச்செல்லுதல்.

குருவிடை கொடுசென் றேழக்
குரோணிவா கினியை யூகம்

அரவென நிறுவி வெல்வான்
ஐவரும் விந்தை தாழ்ந்தார்
உரகேக தறன்சேய் கைசாய்த்
துரைத்தல்கேட் டுபய தானை
கரையுடைந் திரண்டொன் றுய
கடலெனக் கலந்த தம்மா.

(இ-ள்) (அப்பாண்டவர்கள்) குரு விடை கொடு சென்று-துரோணனிடத்து உத்தரவு பெற்றுக்கொண்டு சென்று, ஏழு அக்குரோணி வாகினியை-ஏழு அக்ஷௌஹிணியென்னுந் தொகையுள்ள படையை, அரவு என யூகம் நிறுவி - பாம்பு மண்டலமிடுவது போல வளைவாக வியூகம்நிறுத்தி, வெல்வான் - போரில் சயம் பெறுவதற்காக, ஐவரும்-பாண்டவரைவரும், விந்தை தாழ்ந்தார்-(போர்க்களத்துக்குரிய தெய்வமாகிய) துர்க்கையை வணங்கினர்: (பிறகு) உரகேது - துரியோதனனும், அறன்சேய் - தருமபுத்திரனும், கைசாய்த்து-தமதுகைகளை ஒருபுறமாக வோட்டி, உரைத்தல்கேட்டு-(போர்செய்யும்படி) சொன்னதைக்கேட்டு, உபய தானை - இருபக்கத்துச் சேனைகளும், கரை உடைந்து இரண்டு ஒன்றுய கடல் என-கரையுடைந்துபோக இரண்டுசமுத்திரங்கள் ஒன்றுயிற்றென்பது போல, கலந்தது-(போரிட) நெருங்கின; (எ.று) அம்மா-வியப்பிடைச்சொல்.

யூகம். வியூகம்; படைவகுப்பு. அஃது எழுவகையுறுப்பிற்றுய் வகையால் நான்காய் விரியால் முப்பதாம். வகை நான்காவன-தண்டம், மண்டலம், அசங்கதம் (அஸம்ஹதம்), போகம் என இவை. அரவ வியூகமாக்குதலாவது - பாம்பு மண்டலமிடுவதுபோலச் சேனையை வளைவாக நிறுத்துவது. இது மண்டல வகையினது. விந்தை-கொற்றவை, துர்க்கை, சயமகள். கைசாய்த்தல்-கையையொருபுற மோட்டி முட்டவிடல். கலந்தது-சேனைகள் தலைமயங்கின என்றபடி. அக்குரோணி- அக்ஷௌஹிணி, அது-யானை இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, தேர் இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப்பத்து, காலாள் லட்சத்தொன்பதிஞயிரத்து முந்நூற்றைம்பது, ஆக, இரண்டுலட்சத்துப் பதினெண்ணுயிரத்து எழுநூறு கொண்டது. [தருமன்படை-ஏழு அக்குரோணி, துரியோதனன்படை - பதினொரு அக்குரோணி என்பது, குறிக்கொள்ளத்தக்கது].

வேறு.

5-10:-இதுமுதல் ஆறுகவிகள்- இருபுறத்தவரும் கைகலந்து பொரு தலைக் கூறும்.

குரைசெய் வார்கடற் கொண்டலொ லிகெட
உரைசெய் மூவுல கோர்செவி டுற்றிட
வரிசி லைக்குதை வாயொலி பல்லிய
முரசு சங்கமு ழங்கின வெங்குமே.

(இ-ள்) குரைசெய் - ஒலியைச் செய்கின்ற, வார்கடல் - நீண்ட கடல், கொண்டல்- மேகம், (இவற்றின்) ஒலிகெட- சத்தங்களும் கீழ்ப் பட,உரைசெய்- சிறப்பித்துப்பேசப்படுகின்ற, மூவுலகோர்-மேல் கீழ் நடுஎன்றமூன்றுலகத்தவர்களும், செவிடு உற்றிட-(தத்தமது) காது கள் செவிடுபட, வரிசிலைக் குதைவாய் ஒலி-வரிந்துகட்டப்பட்ட வில்லின் நாணிடத்தெழுகின்ற ஓசையோடு, பல் இயம்-பல வாச்சி யங்கள், முரசு-போர்முரசங்கள், சங்கம்-சங்குகள்,(இவை) எங்கும் முழங்கின - எல்லாவிடங்களிலும் சப்தித்தன. (எ.று).

கடலுக்கு ஒலிசெய்தல் இயல்பு: ஆர்கலி எனப்படும். மேகத் தின்ஒலி-இடியொலி.இவைகெட என்றது உயர்வுநவிற்சி.மூவுலகோர் காதுகள் செவிடாயின என்றது- மிகையுயர்வுநவிற்சி. குதைவாய், வாய்-ஏழனுருபு. குதை-வில்லின்நாண். நாணொலி-டங்காரத்தொனி எனப்படும். போரில் ஊக்கத்தையுண்டாக்கி மேலும் அதனைவளர்த் தற்பொருட்டு முரசம், பல்லியம், சங்கு முதலியன பேரொலிபட முழங்கினவென்க.

இதுமுதல் ஏழுகவிகள்- பெரும்பாலும் முதற்சீரொன்று மாச் சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (5)

இரத மோடிர தம்மிப மோடிப
மரித ஞேடரி யாளொடு மாள்களும்
வரித னுக்கொளு மன்னரு மன்னரும்
பொருதி ஞர்கட லுங்கடல் போலவே.

(இ-ள்) இரதமோடு இரதம் - தேருடனே தேரும், இபமோடு இபம்-யானையுடனேயானையும், அரி தஞேடு அரி-குதிரையுடனே

குதிரையும், ஆளொடும் ஆள்களும்- காலாளுடனேகாலாளும்- வரி தனு கொளும்- கட்டப்பட்ட வில்லினைக்கையிற்கொண்டுள்ள, மன்னரும் மன்னரும் - அரசர்களுடனே அரசர்களும், கடலும் கடலும் போல - ஒருகடல் மற்றொரு கடலுடனே மோதுவது போல, பொருதினர்-போரிட்டார்கள், (எ.று).

தேர் யானை குதிரைகள் இங்கு அவற்றின்மீது ஏறியுள்ள வீரர் களையுங்குறிக்கும், இரதமும் இபமும் அரியும் ஆளும், மன்னரும் பொருதினர் என்பதில்-இருதிணையும் கலந்து, சிறப்பினால் 'பொருதி னர்' என்னும் உயர்திணை முடிபைப்பெற்றன. ஈற்றடியில் உவமை யணி. அரி- குதிரை(பிங்கலந்தை) (6)

7. வில்லர் வில்லினர் வேலினர் வேலினர்
மல்லர் மல்லினர் வாளினர் வாளினர்
புல்லர் கொல்லும்பு கல்படை யாவையும்
வல்லர் வல்லவ கைவகை சாடினர்.

(இ-ள்) வில்லர்- வில்வீரர்கள், வில்லினர்- வில்வீரர்களோடும், வேலினர்-வேல் வீரர்கள், வேலினர் - வேல்வீரர்களோடும், மல்லர்- மல்வீரர்கள், மல்லினர்-மல்வீரர்களோடும் வாளினர்-வாள்வீரர்கள், வாளினர்-வாள்வீரர்களோடும், சாடினர்- தாக்கிப்போரிட்டார்கள், (இனி) புல்லர்- பகைவர்களை, கொல்லும்- அழிக்கும்என, புகல் படை யாவையும் வல்லர்- பேசப்படுகின்ற ஆயுதங்களெல்லாவற்றிலும் வல்லவீரர்கள், (தமது பகைவர்களை) வல்ல வகைவகை-(தாம்)திறம் பெற்றுள்ள பற்பல வகைகளையும் காட்டி, சாடினர்-தாக்கிப்போரிட் டார்கள், (எ,று)

'சாடினர்' என்றவினை முன்னரும் கூட்டப்பட்டது. ஒத்தவீரர் கள் ஒருவரோடொருவர் எதிர்த்தல் தருமயுத்தமாதலின், அதனை முதலிரண்டடிகளால் தெரிவித்தார், புல்லர்- புல்லார் என்பதன் குறுக்கல்: இதன் பின்னர் இரண்டனுருபு தொக்கது. வல்லர்-குறிப்பு வினையாலணையும்பெயர், மல்லர்-ஆயுதமின்றி உடல் வலிமை கொண்டு செய்யும் போரில் வல்ல வீரர். (7)

8. வெட்டி வெஞ்சமர் வென்றனர் பற்பலர்
கிட்ட வோடினர் கெட்டுரன் பற்பலர்
பட்டு வாளிப தைத்தனர் பற்பலர்
விட்டு மெய்யைவிண் மேவினர் பற்பலர்.

(இ-ள்) வெட்டி- (பகைவர்களை) வாளினால் வெட்டி, பற்பலர்- பலபேர்கள், வெம் சமர் வென்றனர்- கொடிய போரில் வெற்றி பெற்றனர்: உரன் கெட்டு-(போரில்) வலிமையிழந்து, பற்பலர்- பல பேர்கள், கிட்ட-தத்தமது பாசறையை நெருங்க, ஓடினர்-ஓடிப் போனார்கள்; வாளி பட்டு-அம்பு தைத்து, பற்பலர்- பலபேர்கள், பதைத்தனர்- துடித்தனர்: மெய்யை விட்டு- உடம்பை நீத்து, பற் பலர்- பலபேர்கள், விண் மேவினர்- வீரசுவர்க்கம் அடைந்தனர்; (எ.று).

ஈற்றடியில், பற்பலர் இறந்தனர் ஒன்றதைப் பிறிதினவிற்சியணி படக் கூறியது. பலர்-வீரர்கள். (8)

9. *சிரமி ழந்தனர் சிற்சிலர் வெம்படை*
கரமி ழந்தனர் சிற்சிலர் காறுடை
உரமி ழந்தனர் சிற்சிலர் ஓங்குவிற்
சரமி ழந்தனர் சிற்சிலர் தாமரோ.

(இ-ள்) சிற்சிலர்- சிலபேர்கள், சிரம் இழந்தனர்- (தம) தலைகள் துண்டிக்கப்பட்டனர்: சிற்சிலர்- சிலபேர்கள், வெம் படை கரம் இழந்தனர்- கொடிய ஆயுதங்களை யேந்தியிருந்த கைகள் துண்டிக் கப்பட்டனர்: சிற்சிலர்- சிலபேர்கள், கால் துடை உரம் இழந்தனர்- (தம) கால்கள் தொடைகள் மார்புகள் சிதைவுண்டனர்: சிற்சிலர்- (மற்றும்) சிலபேர்கள், ஓங்கு வில் சரம் இழந்தனர்- (தாம்பிடித் திருந்த) பெரிய விற்களும் அம்புகளும் துண்டிக்கப்பட்டு (க்கீழே) போகட்டனர்; (எ.று) தாம்-அசை.அரோ- ஈற்றசை.

தலை கை கால் தொடை மார்பு சிதைவுண்டனர் சிற்சில வீரர்கள் என்றபடி. கால்+துடை=காறுடை: "லள வலிவரின் அல்வழியில் அவற்றோடுறழ்வுமாகும்" என்பது விதி (நன்:மெய்யீற்: 24)காறுடையுரம், விற்சரம் - உம்மைத்தொகைகள். 'இழந்தனர்' என்ற சொல் ஓரேபொருளில் பலதரம்வந்தது- சொற்பொருட்பின்வரு நிலையணி. (9).

10:- தொந்தயுத்தம் புரிதல்.

வென்றி பேசியே வென்றிடத் தன்னெதிர்
நின்ற வன்றலை நீக்கலு மற்றுவீழ்
தன்ற லைக்கரந் தாங்கியன் னோன்றனைக்
கொன்ற வன்றலைக் கூவிழ வீசினான்.

(இ-ள்) வென்றி பேசியே- தான் சயிப்பதாகப் பேசிக் கொண்டே, வென்றிட-(தன்னை) வெல்வதாக, தன் எதிர் நின்றவன்- தன் எதிரிலே பொரவந்துநின்றவீரனது, தலை- சிரசை, நீக்கலும்- அறுத்தலும், அற்று வீழ் தன் தலை- அறுபட்டுவிழப்போகின்ற தனது சிரசை,கரம் தாங்கி-(அவ்வீரன்) தன் கைகளிலே ஏந்திப் பிடித்து,(பின்னர்) அன்னோன் அந்தத் தலையறுபட்டவன், தனை- தன்னை, கொன்றவன் தலை- கொன்றவனது சிரசை கூ, பூமியில், விழ- (சிதறி) விழும்படி, வீசினான்- (அறுபட்ட தன் தலையை) (எறிந்தான்; (எ.று).

தலையறுந்த முண்டம் அத்தலையைக் கையிலெடுத்து எறிந்து எதிரியின் தலையை அழித்தது என்றவாறு: இது அசம்பாவித மெனத் தோற்றலாம்: ஆனால் விரைந்து தொழில் செய்பவரது உடம்பு தலையறுபட்ட பின்பும் சிறிது பொழுது முன்னையதொழிலை விடாது செய்தல் இயல்பு; "கைகொடு கால்கொடு தம்மின் வெகுண்டு கவந்தம் மலைந்தனவே" தழல்விழி வாரணவீரர் முடித்தலை தடி வன சக்கரமே, அழலுமிழ் வாள்கள் சுழற்றின மீளவு மாவன சக்கரமே"கருமுகில் முட்டின பட்டவர் கட்கனல் காலுமரும் புகையே" என்ற வில்லிபாரதம் காண்க, (பதினாரும் போர்ச்: 58,52,60)கூ-பூமி. (10)

11. வீடுமற்கெதிராக அருச்சுனன் போர் தொடங்கலும் இருவர்க்கும் துணையாகச் சேனைகள் வருதலும் கூறும்:

இந்த வண்ணமி ருபடை யுஞ்சமர்
தந்த போதுத னஞ்செயன் சந்தனு
மைந்த னோடுவில் வாங்கலு மற்றவர்க்
குந்து சேனையு தவியா முற்றவே.

(இ-ள்) இருபடையும்- இருதிறத்துச்சேனைகளும், இந்த வண்ணம்-இந்தப்படியாக, சமர் தந்தபோது-போரைச் செய்யும் போது, தனஞ்செயன் -அருச்சுனன், சந்தனு மைந்தனோடு- சந்தனுராஜனின் மகனான வீடுமனோடு, வில் வாங்கலும்- வில்லினை வளைத்துப்போர் தொடங்கவும், (அப்போது) அவர்க்கு-அவ்விருவர்க்கும், உந்து சேனை -(துணையாகச்) செலுத்தப்பட்ட சேனைகள், உதவியாம்-உதவி செய்வதற்காக, உற்ற-வந்து சேர்ந்தன; (எ.று).

துணைச்சேனைகளை யுந்தியவர் முறையே தருமனும் துரி யோதனனும் ஆவர் உற்ற-பலவின்பால் வினைமுற்று. (11)

வேறு.

12. வீடுமன் அருச்சுனனிடம் தோற்க, அவ்வீடுமனுக்குத் துணை யாய்வந்தபடையை வீமன் பின்னிடச்செய்தல்.

செருசெய் வீடுமன் பணைப தாகையுந்
திறல்கொண் மெய்க்கவ சத்தையும்

கிருடி நீக்கவு மபிமன் வாளிநாற்
கிள்ளை நாலிழந் தேகினர்

அருகி லங்கவற் குதவி யாய்வரும்
அரசி ளைஞருஞ் சகுனியும்

வெருவின் மத்திர னிவர்கள் பின்றர
வீமன் வெஞ்சம ராடினன்.

(இ-ள்) செரு செய்- போரினைச்செய்கின்ற, வீடுமன்-பீஷ்மனது, பணைபதாகையும்- பனைக்கொடியையும், திறல் கொள் மெய் கவசத்தையும்- வலிமை கொண்ட உடற்கவசத்தையும், கிருடி-அருச்சு னன், நீக்கவும்-பிளந்துதள்ளவும், (அப்போது) அபிமன் வாளிநால்- அபிமன்யுவினது வாளினால், கிள்ளை நால் இழந்து-(தேரிற்கட்டிய) நான்குகுதிரைகளையும் (இறந்துபோகவே) இழந்து, ஏகினர்- வீடு மன் (போரொழிந்து) போய்விட்டார்: அங்கு அவற்கு அருகில்- அப்போர்க்களத்தில் அவ் வீடுமனுக்குப் பக்கத்தில் நெருங்கி, உதவியாய் வரும்- துணையாய் வந்த, அரசு இளைஞரும்- துரியோத னனது தம்பிமார்களும், சகுனியும் - சகுனிமாமனும், வெருவு இல்-அச்சப்படுதலில்லாத, மத்திரன்-சல்லியனும் (ஆகிய), இவர்கள் பின்தர- இவர்கள் பின்னிடும்படி, வீமன்- வீமசேனன், வெம் சமர் ஆடினன்- கொடிய போரினைச் செய்தான்; (எ.று).

"நினைப்பரிய கூர்வாளி நீள்வரைத்தோள் வேந்தன், பணைக் கொடிமேற் பன்னிரண்டு பாய்ச்சி - துணைப்பகழி, ஒன்பதுகொண் டாங்கவன்ற னெண்கவசத் திண்புறுத்தி, முன்பதிர வெய்தான் முனிந்து "என்றார் பாரதவெண்பாவிலும். பணைக்கொடி- தாலத்து வஜம். கவசம்- இரும்பு முதலியவற்றாலாகிய உடம்பின் மேற்சட்டை. கிரீடி என்பது 'கிருடி என எதுகைக்காகச் சிதைந்தது, பாசுபதம் பெற்றபின்பு அருச்சுனன் இந்திரலோகத்துக்குச்

செல்லும்போது அவ்விந்திரனாற் சுவர்க்கத்தில் இளவரசு முடிசூட்டப் பெற்றவனாதலின், கிரீடி என அருச்சுனனுக்குப் பெயர். ''பேரொலிநீர்க் கங்கை பெருஞ்சிறுவன் றேர் பூண்ட, போரொலிமா நான்கினையும் பொன்றுவித்தான்-கூரிய, வேல் வண்ணன் போர்முகத்து வெவ்வாளி நான்கினான், மால்வண்ணன் றங்கை மகன், என்பது பாரதவெண்பா, கிள்ளை - குதிரை (திவாகரம்). வெருவு- அச்சம்: இது'வெரு' எனவும் வரும்.

இதுமுதல்நான்கு கவிகள்- பெரும்பாலும் ஒன்றுமூன்றுஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும்,மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழி நெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள்- (12)

13. சல்லியன் உத்தரனைக்கொல்ல, வீமன் எதிரிகளை நூறித் துரியோதனனைத்தாக்குதல்.

மற்ற ரும்புய மத்தி ரன்குனி
வரிவில் தேரழிந் தவன்விடுங்

கொற்ற வேலினால் விழலு முத்தர
குமரன் மாருதி கதைகொடே

பற்ற லார்படை முற்ற நூறியே
பாய்ந்து மீவருஞ் சுயோதனன்

வெற்றி வீரவிற் றேர ழித்தமர்
வெந்கொ டேகவே மோதினன்.

(இ-ள்) அரும் புய மத்திரன்- அரிய தோள்வலிமையை யுடைய சல்லியனது, குனி வரி வில் - வளைவாகக் கட்டப்பட்ட வில்லினையும், தேர் - தேரினையும், அழித்து—, அவன் விடும் கொற்றம் வேலினால்- அச்சல்லியன் ஏவிய வெற்றிபொருந்திய வேலாயுதத்தினால், உத்தரகுமரன்- உத்தரகுமாரன், விழலும்- இறந்து வீழவும், (அதுகண்ட) மாருதி- வீமசேனன், கதைகொடு கதையைக் (கையிற்) கொண்டு, பற்றலார் படை- பகைவரது சேனைகள், முற்ற- முழுவதையும், நூறி - அழித்து, (பின்னர்) பாய்ந்து மீவரும் சுயோதனன்- பாய்ந்து தன்மேல் போரிடவந்த துரியோதனனது, வெற்றி வீர வில்- வெற்றிபொருந்திய வீரவில் லினையும், தேர்- அவன்ஏறிவந்த தேரினையும், அழித்து—, அமர்- (இட்ட) போரில், வெந் கொடு ஏக (அவன்) புறமுதுகிட் டோடும்படி, மோதினன்-தாக்கினான்; (எ.று)

சல்லியன் வேலையெடுத்து வீச, அதுபட்டவளவில் உத்தரன் இறந்தானென்பதாம். ஆசறுதோள்வலிக்கு மத்திரன் உவமையாதலின், 'அரும்புயமத்திரன்' என்றது. (13)

14· துரியோதனன் மைத்துனர் வீமன் கதையினால் இறக்க, சிவேதன் சல்லியனோடு பொருதல்.

அரசு பின்றரச் செருசெய் வீமன்மேல்

அணுகி மைத்துனர் விற்குழைத்

துரைசெ யங்கவன் கதையின் மாய்ந்தனர்

உத்த ரற்கொலு மத்திரர்க்

குரிசில் மீதெதிர்ந் தரன ளித்தவிற்

கோலி பல்கணைக் கோத்ததிர்

முரச மாதிபல் லியமெ ழப்படை

முதல்வன் வெஞ்சமர் முடுகினான்.

(இ . ள்.) அரசு பின்தர - துரியோதன ராசன் புறமுதுகிடவே செரு செய் வீமன்மேல் - போரிடுகின்ற வீமசேனன் மீது, மைத்துனர் - (அத்துரியோதனனது) மைத்துனன்மார்கள், அணுகி - நெருங்கி, வில் குழைத்து - வில்லை வளைத்து (அம்பெய்து), உரை செய் அவன் கதையின் - புகழப்படுகின்ற அந்த வீமன் கதையினால் (அடியுண்டு), அங்கு - அவ்விடத்து, மாய்ந்தனர் - இறந்து போயினர் : (இஃது இங்ஙனாக) படைமுதல்வன் - தருமன் படைக்குத் தலைவனாகிய சிவேதன், உத்தரன் கொலும் மத்திரர்குரிசில் மீது - (தன் தம்பியாகிய) உத்தரனைக் கொன்ற சல்லியன்மேல், எதிர்ந்து - எதிர்த்துச்சென்று, அரன் அளித்த வில் கோலி - சிவபெருமான் கொடுத்த வில்லினை வளைத்து, பல் கணை கோத்து - பல அம்புகளை (அதனில் வைத்து)த் தொடுத்து, அதிர் முரசம் ஆதி பல் இயம் எழ - ஒலிக்கின்ற முரசுமுதலாகிய பல வாச்சியங்கள் முழங்க, வெம்சமர் முடுகினான் - கொடிய போரினைச் செய்தான் ; (எ. று.).

மைத்துனர் - துரியோதனனது மனைவியான பானுமதிக்கு உடன்பிறந்த முறையாகுபவர். முன்னொருசமயம் சுவேதன் தேவ .

லோகத்திற் போயிருந்த பொழுது வசுக்கள் அவனை மயிலாகும்படி சபிக்க, அவன் மயிலாகிப் பறந்து சென்று தவஞ்செய்து சிவபிரா னருளால் சாபவிடை பெற்று வில் முதலிய ஆயுதங்களும் கவசங் களும் பெற்றன னென்ற வரலாறுபற்றி **'அரனளித்தவில்'** எனப் பட்டது. "சிவன்றன்னை நோக்கிச் சிவேதன் தவஞ்செய்தவாறும், அவ்வன்றனருளாற்பல வாயுதம் பெற்றவாறும்" என்றுர் வில்லியும். (விராட : வெளிப் : 19) கதையின், இன் - கருவிப் பொருளது : உருபுமயக்கம். கொலும் - கொல்லும் என்பதன் தொகுத்தல். (14)

15. அப்போது துரியோதனன் தம்பிமார் அறுவரைச் சல்லி யனுக்குத் துணையாக அனுப்ப, அவர்களைச் சிவேதன் வெல்லவே, துரியோதனன் மீண்டும் வீடுமனை யெதிர்க்க அனுப்புதல்.

ஒருவர் தம்பினே ரிலையெ னச்சமர்
உபய ருஞ்செயச் சல்லியற்
குரக கேதுதன் னிளைஞர் மூவிரு
வோரை யேவிடச் சிவேதனும்
பொருது மேலிடு மறுவர் வெங்கொளப்
பொருது மன்னரைத் திரளொடும்
விரைவி னூறல்கண் டரசு மீளவும்
வீடு மன்றனை யேவினுன்.

(இ-ள்) உபயரும் - சிவேதன் சல்லியன் ஆகிய இருவரும், ஒருவர் - வேறொருத்தர், தம்மின் - தமக்கு, நேரிலை என - சமான மில்லையென்னும்படி, சமர்செய - யுத்தத்தைச் செய்ய, (அப்போது) உரககேது - துரியோதனன், சல்லியற்கு - சல்லியனுக்கு உதவியாக, தன் இளைஞர் மூவிருவோரை - தன் தம்பியர் ஆறுபேரை, ஏவிட - அனுப்ப, சிவேதனும் —, பொருது - (தன்னோடு) சண்டையிட்டு, மேலிடும் - மேல்வருகின்ற, அறுவர் - ஆறுபேரும், வெந் கொள - புறமுதுகிட்டோட, பொருது - (தான்) போரிட்டு, மன்னரை - (தன் மேல்வந்த) அரசர்களை, திரளொடும் - தமது சேனைகளோடும் விரைவின் - அதிவேகமாக, நூறல்கண்டு - அழித்தலைப் பார்த்து, அரசு - துரியோதனராசன், மீளவும் - மறுபடியும், வீடுமன்தனை -

பீஷ்மனை, ஏவினான் - (சிவேதனோடு போரிட்டு வெல்ல) அனுப்பினான் ; (எ. று.).

'அறுவர் வெங்கொளப் பொருது 'என்ற விடத்து, ''அறுவர்'' சிலையினையு மாறிரண்டு கூறுக்கி'' என்ற பாரத வெண்பா நினைக. முன்னர்ச்செய்யுள் 12-இல் வீடுமன் ''இழந்துஏகினார் என்றுகூறியதால், இங்கு ''மீளவும்'' என்றது. (15)

வேறு.

சிவேதன் வீடுமனோடு பொருதல்.

16. சல்லியனை விட்டுமிசை சார்ந்தநதி மைந்தன்
வில்லையுமி ரண்டுபட வெட்டவல்சு வேதன்
வல்லையவன் மீளவொரு வார்சிலையெ டுத்தே
கொல்லவிடு கோலுயர்கொ டிச்சிலைய றுத்தான்

(இ - ள்) வல் சுவேதன் - வலிய சுவேதன், சல்லியனைவிட்டு- சல்லியனோடு பொருதலைவிட்டு, மிசை சார்ந்த நதிமைந்தன் - (தன்) மேல்வந்த வீமடுனது, வில்லையும் —, இரண்டுபட-இரண்டு துண்டாகும்படி, வெட்ட-துணிக்க, அவன்- அந்த வீடுமன், வல்லை- விரைவாக, மீள-மறுபடியும், ஒரு வார் சிலை எடுத்து-ஒரு நீண்ட வில்லினையெடுத்து, கொல்ல விடு கோல்- கொல்லுதற்காக ஏவிய அம்பினால், (சுவேதனது) கொடிச்சிலை அறுத்தான்- கொடிச்சீலையை அறுத்துத் தள்ளினான்; (எ.று).

கொடிச்சிலை- கொடியாடை. சீலை சிலையெனக் குறுகிற்று.

இதுமுதல் ஐந்துகவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்றுமாச்சீரும், மற்றவை மூன்றும் காய்ச்சீர்களுமாகிவந்த **கலிவிருத்தங்கள்.** (16)

17. வீடுமன் பொருது இளைக்கவே. துரியோதனன் பல அரசரையும் தம்பியர் ஐவரையும் பக்கபலமாக அனுப்புதல்.

காங்கயனி ளைத்திடுதல் கண்டரச னேவ
ஓங்குமுடி மன்னர்பல ருற்றவரி ளைத்தார்
வேங்கையன வைந்தனுசர் மீளவர சேவ
ஆங்கவரும் வ்ாங்குவில ழிந்துபுற மிட்டார்

(இ - ள்) காங்கயன் - வீடுமன், இளைத்திடுதல் கண்டு - சோர்வடையும் நிலைமையைப் பார்த்து, அரசன் - துரியோதனன்; ஏ - அனுப்ப, ஓங்குமுடிமன்னர் பலர் உற்றவர் - நீண்ட கிரீடத்தையுடைய அரசர்கள்பலர் (உதவ) வந்தவர்கள், இளைத்தார் - (சிவேதனோடு போரிட்டுத்) தளர்ந்தார்கள் : (அதுகண்டு) அரசு - துரியோதனன், மீள - மறுபடியும், வேங்கை அன ஐந்து அனுசர் ஏவ- வேங்கைப் புலியைப்போன்ற வலிய ஐந்து தம்பிமார்களை யனுப்ப, ஆங்கு - அப்போது அவ்விடத்து, அவரும் - அந்தத்தம்பியர் ஐவரும், வாங்கு வில் அழிந்து - (தாங்கள்) வளைத்த விற்கள் சிதைந்து, புறமிட்டார் - முதுகுகாட்டித் தோற்றனர் ; (எ. று).

காங்கயன் - காங்கேயன் என்பதன் சிதைவு : கங்கையின் மகன் ; தத்திதாந்தநாமம். உற்றவர் - வினையாலணையும்பெயர். அன - அன்ன : உவமவுருபு : (17)

18. சிவேதன் வீடுமனையெதிர்த்து மேம்படுதல் கண்டு தேவர்கள் வியத்தல்.

வீடுமனும் மீளவொரு விற்கொடமர் செய்தந்
நீடனுவு மிற்றுதளர் வுற்றநிலை காணு
ஏடிதழி சூடிவிலெ டுத்திடு சுவேதன்
ஆடமர் ஆண்மைசுர ராதியர்வி யந்தார்.

(இ. ள்.) வீடுமனும் - பீஷ்மனும், மீள - மறுபடியும், ஒரு விற்கொடு - ஒரு வில்லினைக்கொண்டு, அமர் செய்து - போரிட்டு

அ நீள் தனுவும் இற்று - அந்த நீண்ட வில்லும் அறுந்து, தளர்வுற்ற நிலை காணு – சோர்வுற்ற நிலைமையைப் பார்த்து, சுவேதன் - சிவேதன், ஏடு இதழி சூடி - இதழ்களோடு கூடிய கொன்றைப்பூவைச் சூடிய சிவபிரான், வில் எடுத்து - (கொடுத்த) வில்லினையெடுத்து, இடு -வளைத்து, ஆடு – செய்கின்ற, அமர் ஆண்மை-போரிற்காட்டிய வீரத்தைக்கண்டு, சுரர் ஆதியர்-தேவர்கள் முதலானவர்கள், வியந்தார் - அதிசயித்துப் பாராட்டினர் ; (எ. று.).

வீடுமன் வில் இருமுறை அறுபட்டுத் தளர்வுற்ற நிலைமை கண்டு சிவேதனின் வில்லாண்மையைத் தேவர்கள் மதித்தனரென்பது. பூமியில் போர்நடக்கும் பொழுது அக்காட்சியைத் தேவர்கள் வானிலிருந்து காணுதல் இயல்பென்ப, காணு - உடன்பாட்டெச்சம். சூடி - ஆண்பாற் பெயர் ; இ - பெயர்விகுதி. (18)

19. வீடுமன் சிவேதனை வஞ்சனையால் வெல்ல நினைந்து 'வில்லன்றி வேறுபடை உனக்குத் தெரியாதோ ? என, சிவேதன் வாளெடுத்தல்.

வஞ்சனையி னுவிகொளு வானதிய ளித்தோன்
செஞ்சிலைய லாதுபடை தேர்ந்திலைகொ லென்று
விஞ்சடல்சு வேதனொடி யம்பலும்வெ குண்டே
மிஞ்சொளிகொள் வாளுருவி மேலவன டந்தான்.

(இ - ள்) நதியளித்தோன் - கங்காபுத்திரனாகிய வீடுமன் வஞ்சனையின் ஆவி கொளுவான் - வஞ்சனைவழியில் (அநியாய வழியில்) சிவேதனது உயிரைக்கவரும் பொருட்டு விஞ்சு அடல் சுவேதனொடு - (தன்னினும்) மிக்க வலிமையுடைய சிவேதனுடன்' 'செம் சிலை அலாது படை தேர்ந்திலைகொல்' -சிறந்த வில்லின் தொழில்மாத்திரத்தையேயன்றி வேறு ஆயுதத் தொழில்களை அறிந்தாயில்லையோ, என்று இயம்பலும் - என்று சொல்லவும், வெகுண்டு - (சிவேதன்) கோபித்து. மிஞ்சு ஒளி கொள் வாள் உருவி - மிக்கபிரகாசத்தைக் கொண்ட வாளாயுதத்தையுருவியெடுத்து, அவன் மேல் நடந்தான் - அந்தவீடுமன்மீது சென்றான்

சுவேதனுக்கு ரோஷமுண்டாய் அவன்வில்லை விட்டு வேறு படைக்கலத்தை எடுக்கச் செய்யும் பொருட்டு வஞ்சனையாக இவ் வாறு கூறினன் வீடுமன். சுவேதனுக்கு வெற்றிதருவது சிவன் வில்லேயாதலின், 'செஞ்சிலை' என விசேடித்தது கொல் - வினுப் பொருளிடைச்சொல். (19)

20. சுவேதனை வீடுமன் அம்பினாற்பொருது கொல்லுதல்.

நீடனுகொள் வீடுமனெ டுங்கணைக ளேவி
வாடொடும்வி ராடன்மகன் வாகுவைய றுத்தான்

தோடுணிய மற்றொருகை சுவேதனசி கொண்டே
சாடவெதிர் தாவிவிருத் தன்கணையின்
மாய்ந்தான்.

(இ - ள்) நீள் தனு கொள் வீடுமன் - நீண்ட வில்லையேந்திய பீஷ்மன், நெடும் கணைகள் ஏவி - நீண்ட அம்புகளைச்செலுத்தி, வாள் தொடும் விராடன்மகன் - வாளையுருவிவந்த சிவேதனது, வாகுவை - ஒரு தோளை, அறுத்தான் - துண்டித்தான்; தோள் துணிய - தோள் துண்டிக்கப்படவே, சுவேதன் - சிவேதன், மற் றொரு கை - வேறொருகையினால், அசி கொண்டு - வாளைக் கொண்டு, சாட -தாக்கியழிக்கும் பொருட்டு, எதிர் தாவி - எதிரிலே பாய்ந்து, விருத்தன் கணையின் - கிழவனாகிய வீடுமன் விட்ட அம்பினால்,மாய்ந்தான் - இறந்துபோனான்; (எ . று).

முதலில் வலக்கையால் வாளையெடுத்துவந்தவன் அவ்வலக்கை வீடுமனால் அறுக்கப்பட்டவளவில் இடக்கையால் வாளையேந்தினன் என்பதாம். அப்பொழுதும் வில்லையேந்தாமல் வாளையேயேந்தினன், வீடுமனது பழிப்புக்கு இடங்கொடாமைப்பொருட்டென்க. இது 'அசி கொண்டே' என்பதால் பெறப்படும். விருத்தன் கணையென் றது, பிரமாஸ்திரம் என்றது பாரதவெண்பா: "சென்று திசை வணங்கத் தெய்வப் படைநினைந்து, துன்று நெடுஞ்சிலைநாண் தோளலைப்ப - மன்றுலகில், மன்னுயிரைத் தான்படைத்தான் மந்திரத்தால் மற்றவன்றன், இன்னுயிரைப் போக்கினனெய்து" என் பது அது. (20)

வேறு.

21. படுகளச் சிறப்புக் கூறும்.

பகீரதியின் சுதன்தொடையாற் பாண்டவர்தம்
படைத்தலைவன் பட்டு வானோர்
நகரடைந்தா னெனவார்த்தார் நள்ளார்பாண்
டவர்முதலோர் நலிவுற் றார்கள்
மகரவா ரிதிபோல வருங்குருதி
நதிமூழ்கி மாந்தி மேதை
அகலுமமர்க் களந்தோறு மலகைகரம்
புடைத்துநட மாடிற் றம்மா.

(இ-ள்.) பகீரதியின் சுதன் தொடையால் - கங்காபுத்திரனாகிய வீடுமன் அம்பினால், பாண்டவர்தம் படைத்தலைவன் பட்டு - பாண்டுகுமாரர்களது சேனாதிபதியான சிவேதன் இறந்து, வானோர் நகர் அடைந்தான் என - தேவலோகத்தை யடைந்தானென்று சொல்லி, நள்ளார் - பகைவர்களாகிய துரியோதனனாதியர், ஆர்த்தார் - மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். (அதேசமயத்தில்) பாண்டவர் முதலோர் - பாண்டவர் முதலானவர்கள், நலிவுற்றார்கள் - துன்பப் பட்டார்கள் : மகர வாரிதி போல - மீன்களைக்கொண்டுள்ள கடல் போல, வரும் குருதி நதி மூழ்கி - பொங்கிவருகின்ற இரத்தவாற்றிலே குளித்து, மாந்தி - அந்த இரத்தத்தைக் குடித்து, அலகை - பேய்கள், மேதை அகலும் அமர்க்களம் தோறும் - நிணக்கொழுப்பு பரவும் போர்க்களத்தினிடமெங்கும், கரம் புடைத்து - கைகளைத்தட்டிக் கொண்டு, (குதூகலத்தால்) நடமாடிற்று - கூத்தாடின ; (எ. று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

வானோர் நகர் - வீரசுவர்க்கம் : போரில் பின்வாங்காது இறந்தவர் வீரசுவர்க்கம் அடைந்து இன்புறுவர் என்பது வழக்கு. இரத்தம் செந்நீராதலால், 'குருதிநதி' எனப்பட்டது. மேதை - கொழுப்பு. பேய்கள் தமக்கு உணவுகிடைத்தமைபற்றி மகிழ்ச்சியால் போர்க்களத்துக் கூத்தாடும் என்ப. பகீரதி - பகீரதனால்

கொணரப்பட்டது பற்றிக் கங்கை ''பாகீரதி'' எனப்படும். வானோர் நகரடைந்தான் - இறந்தான் : பிறிதினவிற்சி.

இதுவும் அடுத்தகவியும் - பெரும்பாலும் ஈற்றுச் சீரிரண்டும் மாச்சீரும், மற்றைநான்கும் காய்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள் இவற்றில் ஆருஞ்சீர் தேமாச்சீராகவே நிற்கும். (21)

22. சூரியாஸ்தனமாக, புத்திரசோகமுற்ற விராடனுக்குக் கண்ணன் முதலோர் தேற்றரவுகூறி இரவுகழிக்கச் சூரியோதயமாதல்.

இருவருக்கத் தவர்பாடி யில்லடைந்தார்
களம்போன்மெய் யினிது சேப்ப
வருமருக்கன் அத்தகிரி வயினடைந்தான்
மான்முதலோர் மடிந்த மைந்தர்
இருவருக்கா யிடுக்கணுறும் விராடன்பா
லெய்திதுய ரேகத் தேற்றி
மருவிருக்கை யடைந்துதுயின் மன்னியெழக்
குணதிசைச்சூர் வந்த தம்மா.

(இ - ள்) இரு வருக்கத்தவர் - [பாண்டவர்கௌரவர் ஆகிய] இருபக்கத்தினரும், பாடி இல் அடைந்தார் - தத்தமது படை வீட்டினைச் சேர்ந்தார் ; (அப்போது) களம் போல் — போர்க்களம் குருதியால் (சிவந்திருப்பதுபோல), மெய் - தனது வடிவுடம்பு, இனிது சேப்பவரும் அருக்கன் - நன்கு சிவந்து வருகின்ற சூரியன், அத்தகிரி வயின் அடைந்தான் - அத்தமன பர்வதத்தைச் சேர்ந் தான் : (அத்தமித்தான் என்றபடி) : (பிறகு) மால் முதலோர் - கண்ணபிரான் முதலான வேந்தர்கள், மடிந்த மைந்தர் இரு வருக்கா - (போரில்) இறந்துபோன இருபுத்திரர்களுக்காக, இடுக் கண் உறும் - (சோகத்தால்) வருந்துகின்ற, விராடன்பால் எய்தி - விராடராசனிடத்து வந்து, துயர் ஏக தேற்றி - (அவன்) துன்பம் நீங்கும்படி (உபசார மொழிகூறித்) தேற்றி, (பின்பு) மருவு இருக்கை அடைந்து - தாங்கள் தங்கியுள்ள இருப்பினைச் சேர்ந்து, துயில்

மன்னி எழ - தூங்கி விழித்தெழும்படி, சூர் - சூரியன், குணதிசை வந்தது - கிழக்குத் திக்கிலே உதயமாயினன் ; (எ.று.) அம்ம- ஈற்றசை.

அந்திப்பொழுதில் மிக்குத்தோன்றுகின்ற சூரிய மண்டலத்தின் செந்நிறத்தைப் போர்க்களம் இரத்தத்தாற் சிவந்திருப்பதற்கு உவமித்தார் : தற்குறிப்பேற்றவுவமையணி. ஆ - ஆக என்பதன் ஈறு கெட்டது. இருக்கை - குடியிருப்பு. (22)

முதற்போர்ச் சருக்கம் முற்றிற்று.

மூன்றுவது

இரண்டாம்போர்ச் சருக்கம்

வேறு.

1. திட்டத்து ய்மனே நோக்கி, ஸ்ரீகிருஷ்ணன் 'நீ சேனாபதியாகுப் பொருக' என்றுபணிக்க' அவன்சேனையுடன் போர்க்களஞ்சேர்தல்.

உதய காலைக் கடனி யற்றி யுலக ளந்த மாறிரட்
பதியு மாகி சமர்செய் கென்று பகர திட்ட தூய்மனும்
மதிய மொத்த குடைகொண் மன்னர் வகைகொ டானை நாலையுங்
கொதி யளக்கர் போன டத்தி குருநி லத்தி லெய்தினுன்.

(இ - ள்) உதய் காலைக்கடன் இயற்றி - சூரியோதயகாலத்தில் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தபின், உலகு அளந்த மால் - திரிவிக்கிரமனுகிய மூவுலகளந்த திருமாலாகிய கிருஷ்ணன், (திருஷ்டத்யும்நனை நோக்கி) திரள் பதியும் ஆகி - சேனைத் தொகுதிக்குத் தலைவனுகி, சமர்செய்க என்று - போரிடுவாயாக என்று, பகர - சொல்ல, திட்டதூய்மனும் - திருஷ்டத்யும்நனும், மதியம் ஒத்த குடைகொள் மன்னர் - சந்திரனையொத்த வட்டக் குடையைக்கொண்ட அரசர்கள், வகைகொள் தானை நாலையும் - பகுதிப்பட்ட நால்வகைப் படைகளையும், கொதி அளக்கர் போல் நடத்தி - பொங்கிவருகின்ற கடலலைகளைப் போலச் செலுத்திக் கொண்டு, குருநிலத்தில் - குருக்ஷேத்திரத்தில், எய்தினுன் - வந்து சேர்ந்தான் ; (எ. று,).

திரள்பதி - சேனுபதி. தானைநான்கு - ரதகஜதுரக பதாதிகள். மதியமொத்தகுடை, அளக்கர்போல் நடத்தி - உவமையணி. செய் கென்று - அகரவீறு தொகுத்தல். அளக்கர் - அலைக்கு இலக்கணை.

இதுமுதல் நான்கு கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியச்சந்த விருத்தங்கள். (1)

2. வீடுமன் அணிவகுத்துநிற்ப, இருதிறத்துச் சேனையும் கைகலத்தல்.

அணிவ குத்து திட்ட தூய்மன் அமர வங்கு வீடுமன்
பணிகொள் கேது படையொ டெய்தி படுக
ளத்தி லணிவகுத்
திணையி லாது நிற்ப வாளி யிடைய ருமலேவியே
பணைமு ழங்க தானை யோடு தானை சென்று பாய்ந்தவே.

(இ - ள்) திட்டதூய்மன் - திட்டத்துய்மன், அணி வகுத்து அமர - படைவகுப்புச்செய்துதங்க, அங்கு - அக் குருக்ஷேத்திரத்து, வீடுமன் - பீஷ்மன், பணிகொள்கேது (ஒடு) - துரியோதனனோடும் படையொடு - சேனைகளோடும்,எய்தி - வந்து, படுகளத்தில் அணி வகுத்து - போர்க்களத்தில் படைகளை வகுத்து, இணை இலாது நிற்ப - ஒப்பில்லாது நிற்க, இடையருமல் வாளி ஏவி - இடைவிடா மல் (தொடர்ச்சியாக) அம்புகளைச்செலுத்தி, பணை முழங்க - வாச்சியங்கள் ஒலிக்க, தானையோடு தானை சென்று பாய்ந்த - சேனையோடு சேனை நெருங்கிப்பாய்ந்தன; (எ . று)

'ஒடு கேதுவொடும் கூட்டப்பட்டது. (2)

3. திட்டத்துய்மனும் துரோணனும் பொர, திட்டத்துய்மன் தோற்றேடுதல்.

சிங்க மன்ன திட்டத் தூய்மன் சிலைவ ரோணன்
மேனடந்
தங்க வன்கை விற்பொ ழிந்த வாசு கத்தின்
மாரியாற்

செங்கை வில்லி ழந்து நொந்து செருறிந்து
போகலாற்
றங்கு தானை நிலைகு லைந்து தாறு மாறு மானவே.

(இ - ள்) சிங்கம் அன்ன திட்டத்துய்மன் - சிங்கம்போன்ற திருஷ்டத்யும்நன், சிலை வல் துரோணன்மேல் - வில்லில் வல்ல துரோணாசாரியன்மேல், நடந்து - போரிடச்சென்று, அங்கு - (சென்ற) அவ்விடத்து, அவன் கை வில் பொழிந்த - அவனது கையிலிருந்த வில் செலுத்திய, ஆசுகத்தின் மாரியால் - அம்பு மழையினால், செம் கை வில் இழந்து - அழகிய கையிலிருந்த வில் துணிபட்டு, நொந்து - (மனம்) வருந்தி, செரு முறிந்து போகலால் - போரில் தோற்றுப் பின்னிட்டதால், தங்கு தானை நிலை குலைந்து - (போர்க்களத்தில்) இருந்த சேனைகள் நிலைகெட்டு, தாறு மாறும் ஆன - (அங்குமிங்குமாகச்) சிதறியோடின; (எ . று)
ஆசுகத்தின் மாரி - உருவகம். (3)

4. துரோணனோடு வீமசேனன் உக்கிரமாகப்பொரவே, கலிங்க மன்னன் அவனையெதிர்த்தல்.

திரண டுங்க வமர்செய் துரோணன் சேனை யோடு
தினகரற்
கிருண டுங்கி யிரிதல் போல விரிய போர் செய்
வீமன்மேற்
றரை நடுங்க மன்க லிங்கர் தந்தி தானை கொண்டுகை
வரிநெ டுங்கார் முகம்வ ளைத்து வாளி தூவி
வருதலும்.

(இ - ள்) திரள் நடுங்க - திருஷ்டத்யும்நன்படை மிகஅஞ்சும் அமர்செய் - போர்செய்கின்ற, துரோணன் - துரோணாசாரியன் தினகரற்கு - சூரியனுக்கு (எதிர்நிற்கமாட்டாது), இருள் நடுங்கி இரிதல்போல - இருட்டு அஞ்சியோடிச்சிதறுதல்போல, சேனையோடு இரிய - (தன்) படையோடு சிதறும்படி, போர்செய் வீமன்மேல் -

போரிடுகின்ற விமசேனன்மேல், தரை நடுங்க - இந்தப்பூமி நடுங் 'கும்படி, கலிங்கர்மன் - கலிங்கதேசத்து மன்னனாகிய சக்ரதேவன் தந்தி தானை கொண்டு - யானைப்படைகளைக்கொண்டு, கை - தன் கையிற்பிடித்த, வரி நெடுங் கார்முகம் வளைத்து - வரிந்துகட்டப் பட்ட (கெட்டியாகக் கட்டப்பட்ட) நீண்ட வில்லினை வளைத்து, வாளி தூவி வருதலும் - அம்புகளை (எங்கும்) சொரிந்து வரவும், (எ . று)

கலிங்கமன்னன் பெயர் - சக்ரதேவன் என்பதை வில்லிபாரதத் தால் உணரலாம். கலிங்கதேசம் யானைப்படைக்குப் புகழ்பெற்றது. இரண்டாமடியில் உவமையணி காண்க. (4)

வேறு.

5 - 6 : வீமன் யானைகளைச் சிதைத்தல்.

இருகவிகள்–ஒருதொடர்.

பரிகொடேர் விட்டுமண் பாய்ந்து மாருதி
வருகரிக் கெலாமொரு மறலி யாகியே
இருகையா லெடுத்தெடுத் தெறிந்து வானுற
பொருகரி களையுயிர் போக்கி னனரோ.

(இ - ள்) மாருதி - வீமசேனன், பரிகொள் தேர் விட்டு - குதிரைகள் பூட்டிய தேரினைவிட்டு, (தரையில்) பாய்ந்து -குதித்து, வரு கரிக்கு எலாம் - தன்மேல் தாக்கவந்த யானைகளுக்கெல்லாம், மறலி ஆகி - யமனாகி, இருகையால் - (தனது) பெரிய இரண்டுகை. களால், எடுத்து எடுத்து - தூக்கித்தூக்கி, வானுறஎறிந்து - ஆகாயத் தில்பொருந்த வீசியெறிந்து, (அவையிறக்க) பொரு கரிகளை - (மேலும்) போரிடவந்த யானைகளை, உயிர்போக்கினன் - கொன் ருெழித்தான்; (எ . று) அரோ - ஈற்றசை.

மாருதி - தத்திதாந்தநாமம் : மருத் - வாயு. வீமன் பதினாயிரம். யானைபலங்கொண்டவனாதலால், இங்ஙனம் எளிதிற்செய்தான் (5)

6. பலகயம் தோல்களாய்ப் பாரில் வீழவும்
பலகய மென்பதாய்ப் பட்டு வீழவும்
பலகயங் குழம்பிசெந் நீரிற் பாயவும்
பலகய முருவறப் பாய்ந்து குத்தினன்.

(இ - ள்) பல கயம் - பல யானைகள், தோல்களாய் - தோல்களாய் (உடலுள்ளீடு சுவறிப்போய்), பாரில் வீழவும் - பூமியில் இறந்து விழவும், பல கயம் - பல யானைகள், என்பு அது ஆய் - எலும்புமாத்திரமாகி (மெலிந்து), பட்டு - இறந்து, வீழவும் - விழவும், லப கயம் - பல யானைகள் குழம்பி - [தமது அங்கங்கள் சிதைந்தும் நீர்ப்பிண்டமாகி, செந்நீரில் பாயவும் - இரத்தமாகமாறிப் பெருக்கெடுக்கவும், பல கயம் - பல யானைகள், உரு அற - தமது உருவ] தெரியாதபடி சிதையவும், (வீமன்) பாய்ந்து - தாவிப்பாய்ந்து, குத்தினன் - (அவற்றைத்) தனதுகைகளால் குத்தினன்; (எ . று)

கயம் - யானை: 'தோல்' என்றலும் யானை: "புரைத்தோல் வரைப்பின்" (மலைபடு:88) தோல் தோல்களாய் வீழ்ந்தன என்று நயம்காணலாம். செந்நீர் - இரத்தம்: பண்புத்தொகை. (6)

7. கலிங்கமன்னன் பொருதழிய வீடுமன் வீமன்மீது எதிர்த்து வருதல்.

தந்தியும் வந்திடுந் தளம ழிந்தமா
முந்திய கலிங்கர்கோன் முறித னேக்கியே
புந்திநொந் ததுபொருப் புனித கங்கையாள்
நந்தன்மா ருதிமிசை நடந்து ளானரோ.

(இ-ள்) (இவ்வாறு) தந்தியும் - யானைகளும், வந்து—, இடும் - போரிட்ட, தளம் - படை, அழிந்த -சிதறுண்டன : மா முந்திய கலிங்கர்கோன் - (தன்) யானையோடு முற்பட்டுச்சென்ற கலிங்கர் மன்னனாகிய சக்ரதேவன், முறிதல் நோக்கி - அழிந்து போனதைப் பார்த்து, புனித கங்கையாள் நந்தன் -பரிசுத்தமான கங்காதேவியின் புத்திரனாகிய வீடுமன், புந்தி நொந்து - மனம் வருந்தி, அது பொரு -

(அவன் அழிந்த) துக்கம் பொறுக்கமுடியாமல், மாருதி மிசை - வீமன் மேல், நடந்துளான் - எதிர்த்து வந்தான் ; (எ. று.). அரோ - ஈற்றசை.

தளம் - (யானைப்) படை, முறிதல் - மாய்தல். நந்தன் - புத்திரன். (7)

வேறு.

8. **வீமன் வீடுமனுடன் கடும்போர்புரிதல்.**

மாருதி புகுந்திரத மேஏவொரு வேலவனு மற்றவயி லோடிரதமும்
பாரில்விழ வெட்டவுரு மேறெனவ திர்த்துகதை பற்றிநதி புத்திரன் ரதச்
சாரதித டிந்தெதிரும் வீரரொடு நாலுவகை தானைபடச் சாடி சமர்செய்
வீரமுறு வீமன்மிசை மீளபல தானைபட வீடுமனெ திர்ந்த பொழுதே.

(இ-ள்) மாருதி - வீமன், இரதம் புகுந்து - தேரிலேறி, ஒரு வேல் ஏவ - ஒரு வேலாயுதத்தைவிட, அவனும் - அந்த வீடுமனும், அற்ற அயிலோடு - (தான்) துண்டித்த வேலாயுதத்தோடு, இரதமும் பாரில் விழ - (வீமனது) தேரும் தரையில் முறிந்து விழும் படி, வெட்ட - (அதிற்பூட்டியுள்ள) குதிரைகளைத்துணிக்க, (அது கண்ட வீமன்) உரும் ஏறு என அதிர்த்து - ஆணிடியென்னுமாறு ஆரவாரஞ்செய்து, கதை பற்றி - [தன்னுடைய சத்துருகாதிநி யென்னும்] கதாயுதத்தைக் கையிலெடுத்து, நதிபுத்திரன் ரதச் சாரதி தடிந்து – கங்காபுத்திரனாகிய வீடுமனது தேர்ச்சாரதியைக் கொன்று, எதிரும் வீரரொடு – (மேலும்) தன்மேல் எதிர்த்துவந்த வீரர்களோடு, நாலுவகை தானை பட சாடி – நான்கு பகுதிப்பட்ட சேனைகளையும் அழியும்படி மோதியடித்து, சமர் செய் – போர்செய்த, வீரம் உறு வீமன் மிசை- வீரம்செறிந்த வீமசேனன்மீது, வீடுமன் - பீஷ்மன்,மீள - மறுபடியும், பல தானை பட - (தனது) பல சேனை களும் அழிந்துபோகும்படி, எதிர்ந்த பொழுது – எதிர்த்து வந்த

பொழுது ; (எ, று.) "அபிமன் இரதநேர்கடவி" என மேலைக்கவியில் இயையும்.

உருமேறென அதிர்த்து - உவமையணி.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் மூன்றுகவிகள் - பெரும்பாலும் முதலைந்துசீரும் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறு ஏழாவது மாச்சீர்களுமாகிய எழுசீராசிரியவிருத்தங்கள். (8)

9\. அபிமன் கடுமையாகப் பொர அவனையும் வீமனையும் துரியோதனன் ஏவலாற் பல அரசர் வளைந்து கொள்ள, அப்போது அருச்சுனன் உதவிக்குக் குறுகுதல்.

வாளபிமன் மாவிரத நேர்கடவி தூவுபல
வாளியிலெ திர்ந்த வரெலாம்
மாளவும்வெ குண்டரவ கேதனன்வி டுப்பமுடி
மன்னர்பலர் தானை யுடன்வந்
தாளியுயர் கேதொடபி மன்னுவைவ ளைந்திடல
றிந்துகவி யின்கொ டிகொடேர்
காளையுமு ருத்திவுளி தேரையுந டத்திவிடு
கார்முகவ னற்க ணைகளால்.

(இ - ள்) வாள் அபிமன் - வாளாயுதத்தில் வல்ல அபிமன்யு, மா இரதம் நேர் கடவி - சிறந்த (தனது) தேரினை நேரராகச்செலுத்தி, தூவு பல வாளியில் - வீசியபல அம்புகளால், எதிர்ந்தவரெலாம் மாளவும் - எதிர்த்துவந்த வீரர்களெல்லாம் இறந்துபோகவும், (அது கண்டு) அரவகேதனன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், வெகுண்டு - கோபித்து, முடிமன்னர் பலர் விடுப்ப - கிரீடம்தரித்த அரசர்கள்பலரை யனுப்ப, (அவர்கள்) தானையுடன் வந்து - (தமது) சேனைகளோடு வந்து, ஆளி உயர் கேதொடு - சிங்கக்கொடியை யுயர்த்திய வீமனோடு, அபிமன்னுவை வளைந்திடல் அறிந்து - அபிமன்யுவையும் சூழ்ந்து கொண்டதையறிந்து, கவியின் கொடி கொள் தேர் காளையும் - குரக்குக்கொடியைக் கொண்ட தேரினையுடைய அருச்சுனனும், உருத்து - கோபித்து, இவுளி தேரையும் நடத்தி -

குதிரைகள் பூட்டிய (தனது) தேரையும் செலுத்தி, விடு - எய்த, கார்முகம் அனல் கணைகளால் - வில்லினின்று சொரிந்த நெருப்பு அம்புகளால் ; (எ. று.). "பட்டனர் பற்பலர்" என மேலைக்கவியில் தொடரும்.

ஆளி - சிங்கம் : சிங்கக்கொடியையுடையவன் வீமன், கவி - குரங்கு : குரங்குக்கொடியையுடையவன் அருச்சுனன், அனற் கணை - ஆக்னேயாஸ்திரம் : நெருப்பைச் சொரியும் அம்புகள். (9)

10:- அருச்சுனன் கணைகளால் அரசர் கெட்டுச்சிதற, சூரியாஸ் தமனத்துப் படைஞர் தம் படைவீடுபுக, மறுநாட்காலை சூரி யோதயமாதல்.

பட்டனர்கள் பற்பலர்ப தைத்தனர்கள் பற்பலர்ப
யந்தமரில் பற்ப லர்கள்வென்
னிட்டனர்கள் அங்குதய னத்தமுற
ஐவர்வய மெய்தியிட மெய்தி னர்புகழ்
விட்டவிறை நாளையமர் பார்த்தனபி
மன்னுவையும் வேறுமென மன்னு ழிபுகத்
துட்டனுரை சென்றறிவ மென்றுகுண குன்றின்மிசை
தோற்றினன் பனிப்ப கைவனே.

(இ - ள்) பற்பலர் பட்டனர்கள் - பலபேர்கள் இறந்துபோயி னர் : பற்பலர் பதைத்தனர்கள் - பலபேர்கள் துடித்தனர் :அமரில் பயந்து - போரிடுதலில் பயந்து, பற்பலர்கள் வென் இட்டனர்கள் - பலபேர்கள் முதுகுகாட்டியோடினர் : அங்கு -[அப்போது] அவ் விடத்து, உதயன்- சூரியன், அத்தமுற- அஸ்தமிக்க, ஐவர் - பஞ்ச பாண்டவர், வயம் எய்தி - (தாம்) வெற்றிபெற்று, இடம் எய்தினர் - தம் பாசறைக்குத்திரும்பிவந்தனர் : புகழ் விட்ட இறை - புகழைக் கைக்கொள்ளாத துரியோதனராசன், நாளை அமர் - நாளையபோ ரில், பார்த்தன் அபிமன்னுவையும் வேறும்-அருச்சுனனையும் (அவன் மகன்) அபிமன்யுவையும் வெல்லுவோம், என - என்று கூறி மனோர தித்து, மன் உழி புக - தான் தங்கியிருந்த பாசறையிடத்துப்புக,

(இரவுகழிய) பனிப் பகைவன் - பனிக்கு எதிரியாகிய சூரியன், துட்டன் உரை சென்று அறிவம் என்று - கொடியதுரியோதனன் சொன்னவார்த்தையின் உண்மையினைப் போய்த்தெரிந்து கொள்வோம் என்று, குண குன்றின்மிசை -கிழக்குத்திக்கிலுள்ள உதய கிரியின் உச்சியில், தோற்றினன் - உதயமாயினான்; (எ . று)

புகழ்விட்ட - இகழ்ச்சியே பெற்ற என்றபடி. வேறும் - தன்மைப் பன்மை வினைமுற்று: வெல் - பகுதி, றும் - விகுதி. ஈற்றடி - ஏதுத்தற் குறிப்பேற்றம். அறிவம் - தன்மையொருமை. குணதிசை - கிழக்குத் திசை. பனிப்பகைவன் - பகைப்பொருளில் வந்த நான்கனுருபு தொக்கது. (10)

இரண்டாம் போர்ச் சருக்கம் முற்றிற்று.

நான்காவது

மூன்றும் போர்ச்சருக்கம்

வேறு.

1. இருதிறத்துச் சேனைகளும் பொர, வீடுமன் துரோணன் முதலியோர் அருச்சுனனை வளைத்துக்கொள்ள, துரியோதனன் முதலியோர் வீமனை வளைத்தல்.

மூன்று மமருக் கிருபடையும்
　　முனைவெங் களம்வந் தியமார்ப்ப
மான்றேர் கரிமா வயவர்களும்
　　மலைந்தார் வானோர் தானவர்போல்
தேன்றார் விசயன் றனையேற்றார்
　　சேனா பதியா ரியன்முதலோர்
ஈன்றா னிகர்வீ மனைவளைந்தார்
　　இறையோ டியாரு மிளைஞருமே.

(இ-ள்) மூன்றும் அமருக்கு - மூன்றும்நாள் போரிடுதற்கு, இருபடையும் - பாண்டவ கௌரவ சேனைகளிரண்டும், வெம் களம் முனை வந்து - கொடிய (குருக்ஷேத்திர) போர்க்கள முனையிடத்து வந்து, (அணிவகுத்துநிற்ப, இயம் ஆர்ப்ப - போர்ப்பறைகள் முழங்க, வானோர் தானவர் போல் - தேவாசுரர்கள் போரிடுவது போல (அதிமும்முரமாக), மான் தேர் கரி மாவயவர்களும் - (அவற்றிலுள்ள) ரதகஜதுரகபதாதியாகிய நாற்படைவீரர்களும், மலைந்தார் - (தமக்குள்) போரிட்டனர் ; (அப்போது) சேனாபதி ஆரியன் முதலோர்- வீடுமன் துரோணன் முதலியோர், தேன் தார் விசயன் தனை ஏற்றார் - தேன்சொரியும் மாலையைத்தரித்த அருச்சுனனை எதிர்த்

தார்கள் ; (அதே சமயத்தில்) இறையோடு - துரியோதனராசனோடு, இளைஞர்யாரும் - (அவன்) தம்பியரனைவரும், ஈன்றோன் நிகர் வீமனை - தந்தையாகிய வாயுதேவனை யொத்த வீமசேனனை, வளைந்தார் - சூழ்ந்து கொண்டனர் ; (எ. று.)

மான் - குதிரை : "ஆ மா கோ னவ்வணையவும் பெறுமே" என்றது நன்னூல். (உருபுபுணரியல், 9) மான்தேர் - குதிரைகள் பூட்டப்பட்ட தேர். வானோர் தானவர்போல் - உவமையணி வானோர் பாண்டவசேனைக்கும், தானவர் கௌரவசேனைக்கும் உவமையாவர், ஈன்றோன் - வினையாலணையும்பெயர் - வாயுதேவன் பேராற்றலுக்கும் விரைவாகத் தொழில் புரிதற்கும் வீமனுக்கு உவமையென்க.

இதுமுதல் மூன்று கவிகள் - மூன்று ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய, விருத்தங்கள். (1)

2. வீமன் கடும்போர் புரிய, கடோற்கசனம்புகளால் துரியோதனன் மூர்ச்சித்து வீழ, வீடுமன் அருச்சுனனை விட்டுவந்து துரியோதனன் மூர்ச்சையைத் தெளிவித்தல்.

சூழ்ந்து சாபங் குழைத்தெய்யுந்
தொடையாற் றேகையி றனைபுவி
வீழ்ந்து மடிந்த கடோற்கசனெய்
விசிகத் தகிகே திரதம்போய்
போழ்ந்து கவச மார்புருவி
புவிவீழ்ந் திடவும் நரனையொரீஇ
ஆழ்ந்த நதிசே யுற்றெடுத்தா
தரித்தா னரச னயர்வொழிந்தான்.

(இ-ள்) சூழ்ந்து - [வீமனைச்] சூழ்ந்து கொண்டு, (அவ்வீமன்) சாபம் குழைத்து எய்யும் தொடையால் - (தனது) வில்லைவளைத்துச்

செலுத்துகின்ற அம்புகளால், தொகை இல் தானை - (பகைவரது) அளவற்ற சேனை, புவி வீழ்ந்து மடிந்த - பூமியின்மேல் விழுந்து இறந்துபோயின : (அதேசமயத்தில்) கடோற்கசன் எய் விசிகத்து - கடோத்கசன் விடுத்த அம்பினுல், அகி கேது - பாம்புக்கொடியை யுடைய துரியோதனன், இரதம் போய் - தேரிழையிழந்து, கவசம் போழ்ந்து - (தான் அணிந்திருந்த) கவசம் பிளக்கப்பட்டு, மார்பு உருவி - மார்பினூடே பாய்ந்துசென்று, புவி வீழ்ந்திடவும் - தரையிலே (மூர்ச்சித்து) விழுந்திடவும், (அதனைக்கண்ட) ஆழ்ந்த நதி சேய் - ஆழமான கங்காநதியின் புத்திரனாகிய வீடுமன், நரனை ஒரீஇ - (தான் போரிட்டுக்கொண்டிருந்த) அருச்சுனனை விட்டு நீங்கி, உற்று - (துரியோதனன் வீழ்ந்த இடத்தை) அடைந்து, எடுத்து ஆதரித்தான் - (கையால்) தூக்கியெடுத்துக் காப்பாற்றினுன் : அரசன் - துரியோதனனும், அயர்வு ஒழிந்தான் - மூர்ச்சை நீங்கித் தெளிவு பெற்றான்; (எ . று)

கடோற்கசன் என்னும் வடமொழிக்கு - குடம்போலும் பெரிய மயிர்முடியையுடையவனென்று காரணப்பொருளுரைப்பர் : கட உத்கசம் அன் எனப்பிரியும் : கடம் - குடம், உத் - அதிகம், கசம் - மயிர்முடி ஒரீஇ -சொல்லிசையளபெடை. (2)

3. வீடுமன் வீமன் பின்னிடக் கடும்போர்புரிய, ஸ்ரீ கிருஷ்ணன் சக்கர மெடுத்தல்.

துரியோ தனனை யணியுணிறீஇத்
துணைக்கட் சேப்பச் சிலையேந்தி
கரியோ டிகலும் அரிகேதைக்
காயா வைவர் கடற்றுனை
எரியோ டெதிருஞ் சருகதுபோல்
எரியப் பொருதும் வீடுமன்மேற்
பரியோ டிரதம் விட்டமலன்
படர்ந்தான் ஆழிப் படையெடுத்தே.

(இ - ள்) துரியோதனனை —, அணியுள் நிறீஇ - படைவகுப்பி லேநிறுத்தி, (பின்னர் வீடுமன்) துணைக்கண் சேப்ப - இரண்டுகண் களும் [கோபத்தினால்] சிவப்படைய, சிலை ஏந்தி - வில்லினைப் பிடித்து, அரியோடு இகலும் அரிகேதை - யானைகளோடு போரிட் டுக்கொண்டிருந்த வீமனை, காயா - கோபித்து, (அவனோடு) ஐவர் கடல்தானை - பஞ்சபாண்டவருடைய கடற்போறபரந்த சேனையை, எரியோடு எதிரும் சருகு அது போல் - நெருப்போடு எதிரிடுகின்ற உலர்ந்த வற்றிய இலையைப்போல, எரிய - அழிந்துபோகும்படி, பொருதும் - போரிடுகின்ற, வீடுமன் மேல் - பீஷ்மன்மீது, அமலன் - கிருஷ்ணபகவான், பரியோடு இரதம் விட்டு - (பூட்டிய) குதிரைக ளோடு [தான்ஏறிச் சாரத்தியம்செய்த] தேரினைவிட்டு (த்தரையிற் குதித்து), ஆழிப்படை எடுத்து - (தனது) சக்கரப்படையை ஏந்தி யருளி, படர்ந்தான் - எதிர்த்துச்சென்றான்; (எ.று)

நிறீஇ -நிறுவி : சொல்லிசையளபெடை : நிறுவு - பகுதி : அரி கேது - சிங்கக்கொடி : அதனைக் கொடியிலுடையானுக்கு - வேற்று மைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. காயா - காய்ந்து ; உடன்பாட்டெச்சம். மூன்றாமடியில், **உவமையணி :** எளிதில் அழிதற்கு உவமை, பொருதும் - பொரும் : பெயரெச்சம். (3)

வேறு.

4. **அப்போது கிருஷ்ணன் போர்புரியாதபடி அருச்சுனன் அவன் கழல் பணிந்து தொழுதல்.**

வீடும னைக்கொல வாழிகொ டெய்திய
　　வித்தகனைக் கிரிடி
ஓடிப ணிந்துத கைந்திட நின்றிலன்
　　உற்றிட மேலவனும்
வாடிந டுங்குபு தேரிழி யாவெதிர்
　　வந்தடி யன்பொருளாய்
நாடிப டைத்தொட ஞாய முனக்கில
　　நாதவெ னத்தொழுதான்.

(இ - ள்) வீடுமனை கொல - பீஷ்மனைக் கொல்லும்பொருட்டு, ஆழிகொடு எய்திய வித்தகனை - சக்கரப்படையைக் கையிலேந்தி வந்த அற்புதசக்தியுடைய கிருஷ்ணனை, கிரிடி - அருச்சுனன், ஓடி - (இரதத்தினின்று குதித்து) ஓடிப்போய், பணிந்து - நமஸ்கரித்து, தகைந்திட - தடுக்க, நின்றிலன் - (தடைபட்டு) நிற்காதவனாய், உற்றிட - மேல் வருதலைச் செய்ய, (அதுகண்டு) மேலவனும் - வீடுமனும், வாடி நடுங்குபு - ஒளியிழந்து அச்சமுற்று, தேர் இழியா - (தான் ஏறிவந்த) தேரினின்று (தரையில்) இறங்கி, எதிர் வந்து - (கிருஷ்ணனுக்கு) எதிராக வந்துநின்று, அடியன் - தாசனான என்னை, பொருளாய் நாடி - ஒருபொருட்டாக மதித்து, படை தொட - சக்கராயுதத்தை யெடுத்துவிட, நாத -தலைவனே ! உனக்கு ஞாயம் அல - உனக்கு நியாயமாகாது, என - என்று சொல்லி, தொழுதான் - நமஸ்கரித்தான்; (எ. று.)

"போரிற்படையெடேன்'' என்று முன் துரியோதனனுக்குக் கூறியிருந்த சபதம் தவறுதலால் கிருஷ்ணன் அருச்சுனன் தகைந்தான் : வாக்குத்தத்தஞ்செய்ததை இங்ஙனம் தவறலாமோ கிருஷ்ணன் எனின் - போரில் ஆயுதமெடுப்பதில்லை யென்று கிருஷ்ணன் கூறியதைக் கேள்விப்பட்டு வீடுமன் கண்ணனைத் தான் போரில் ஆயுதமெடுப்பிப்பதாகத் துரியோதனனுக்குமுன் பிரதிஜ்ஞை செய்திருந்தனனுதலால், எம்பெருமானுகிய கிருஷ்ணன் 'தனதுசபதம் தவறினும் தவறுக: தனது அன்பனுகிய வீடுமனது சபதம் பொய்க்கலாகாது' என்று தன் திருவுள்ளத்திலெழுந்த திருவருளால் இப்படிச்செய்தான், மேலும், பரமாத்மாவாகிய கிருஷ்ணன் விரதம் தவறினுல் அவனுக்கு வருவதொரு குற்றமில்லை. ஏனெனில், அவன் அகர்மவசியனும் நிரங்குசஸ்வதந்திரனுமாவன். ஆனுல் ஆத்மகோடிகளில் ஒருவனுன வீடுமன் விரதம் தவறினுலோ அத்தீவினையால் மறுமையில் யமதண்டனைக்கு உள்ளாவன் : ஆதலால், தனது சிறந்த பக்தனுகிய வீடுமனை ஊழ்வினையொழித்துப் பரமபதத்துச் சேர்ப்பிக்கவேண்டுமென்ற பெருங்கருணையே இங்ஙனம் வரம்புகடந்ததற்கு ஏற்ற காரணமாம். இதனுல், தனது வாய்மை தவறியாயினும், அடியார்களுக்கு வருகிற ஆபத்தைப்போக்கிக் காத்தருளுகிற பகவானது பேரருளுடைமை விளங்கும். வாடிநடுங்குதல், அச்சமென்னும் சுவைக்குரிய மெய்ப்பாடாம், 'பொருளாய்நாடி' என்றது -

அடியனை உனக்கு ஏற்ற ஒரு லக்ஷியமென்று கருதியோ என்றபடி. ஞாயம் - நியாயம் என்பதன் முதற்போலி வித்தகன் - வல்லவன்; அதிசயசக்தியுடையவன், கிரிடி - கிரீடீ என்பதன் குறுக்கல், நின்றிலன் - முற்றெச்சம் நடுங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இழியா - இழிந்து : செய்யாவென்னும் வாய்ப்பாட்டு உடன்பாட்டெச்சம்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள மூன்று கவிகள் - பெரும் பாலும் ஈற்றுச்சீரொன்று கூவிளங்காய்ச்சீரும், மற்றையைந்தும் விளச்சீர்களுமாகிய அறுசீராசிரியச் சந்தவிருத்தங்கள். (4)

5. அருச்சுனன் கடுமையாகப்போரிடவே பகையரசர் அஞ்சி யோடுதல்.

தொழுதலும் வெஞ்சின மங்குத ணிந்தரி
துாண்டுத லும்பரிதேர்
பழுதறு பற்குனன் அமரின்மு னைந்துபல்
பகழிதொ டுத்திடலால்
விழிதழ லாற்படு முப்புர ராமென
மேவலர் தானையெலாம்
அழிதலு மன்னவர் மன்னனு மன்னரு
மஞ்சின ரோடினரே.

(இ-ள்) தொழுதலும் - வீடுமன் நமஸ்கரித்தலும், அரி - கிருஷ்ணனும், அங்கு - அப்போது, வெம் சினம் தணிந்து - கொடிய கோபம் நீங்கி, பரி தேர் தூண்டுதலும் - குதிரைகள் கட்டிய தன் தேரை விரைந்து செலுத்துதலும், பழுது அறு பற்குனன் - குற்றமற்ற அருச்சுனன், அமரின் முனைந்து - போர்செய்தலில் மூண்டு, பல் பகழி தொடுத்திடலால் - பல அம்புகளைப் பிரயோகஞ்செய்தலால், விழிதழலால் படும் - (சிவபிரானின்) நெற்றிக்கண் தீயினால் இறந்து பட்ட, முப்புரர் ஆம் என - திரிபுரங்கொண்டு சஞ்சரித்த அசுரர் மூவர் என்றுசொல்லும்படி, மேவலர் தானையெலாம் அழிதலும் - பகைவர்களது சேனைகளெல்லாம் அழிந்துபடவும், மன்னவர் மன்ன

னும் - துரியோதனனும், மன்னரும் - அவனுக்கு உதவியாகவந்த அரசர்களும், அஞ்சினர் ஓடினர் - பயந்து ஓடிப்போனார்கள்; (எ று.).

அருச்சுனனுக்குப் பழுதாவது - போரொழிந்து நிற்பது. முப்புரர் - தாரகாட்சன், கமலாட்சன், வித்யுந்மாலி என்னும் அசுரர்கள் மூவர். இவர்கள்முறையே வெண்பொன் கரும்பொன் பசும்பொன்களால் வகுக்கப்பட்ட அரண்களைக்கொண்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மையுள்ள மூன்று பட்டணங்களைப்பெற்றுப் பலவிடங்களிலும் பறந்துசென்று அவைகளைப் பாழாக்கி வந்தனர். அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர்முனிவர் முதலியோரது வேண்டுகோளால் சிவபெருமான் தாமே புன்சிரிப்புச் செய்து அசுரரனைவரையும் தமது நெற்றிக்கண்தீயினால் பட்டணங்களோடு எரித்தருளினனென்பது ஈண்டு அறியவேண்டுவது. "முப்புரராமென" என்றது - அடியோடு எல்லோரும் எல்லாமொடும் அழிந்தமைக்கு ஒப்பு. (5)

6. வீடுமனும் அருச்சுனனும் தத்தம் பாசறை சேர்தல்.

பற்குன னேவிய விற்கணை யாற்றிரள்
பட்டிடல் கண்டுமமர்
முற்குறு காதிட மெய்தினன் யாரொடும்
மூரிவில் வீடுமனும்
நற்குண மன்விச யத்தொடு பாசறை
நண்ணினன் மன்னரொடும்
விற்கதிர் மேற்றிசை புக்குகு ணக்கினில்
மீளவு தித்தனனே.

(இ - ள்) பற்குனன் ஏவிய வில்கணையால் - அருச்சுனன் செலுத்திய வில்லினது அம்பினால், திரள் பட்டிடல் கண்டும் - தனது சேனையின் தொகுதி அழிதலைப் பார்த்தும், அமர் முன் குறுகாது - போரில் மேற்செல்லாமல், மூரி வில் வீடுமனும் - வலிய

வில்லை யேந்திய பீஷ்மனும், யாரொடும் [துரியோதனனுள்ளிட்ட] அனைவரொடும், இடம் எய்தினன் - தனது பாசறையிடத்தைச் சேர்ந்தான் : நல் குண மன் - நல்லகுணத்தையுடைய தருமராசன் விசயத்தொடு - வெற்றியோடு, மன்னரொடும் - துணைவேந்தரொடும், பாசறை நண்ணினன் - தனது படைவீட்டினையடைந்தான் ; (அப்போது) வில் கதிர் -ஒளிவீசிய சூரியன், மேல்திசைபுக்கு - மேற்குத்திக்கினில் சேர்ந்து, மீள - மறுபடியும், குணக்கினில் - கிழக்குத்திசையில், உதித்தனன் - தோன்றினான் ; (எ. று.)

மன் - அரசன் ; தலைவன், நற்குணமன் என்றதால் தருமனைக் காட்டிற்று. வில் - ஒளி. (6)

மூன்றும்போர்ச் சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது

நான்காம் போர்ச் சருக்கம்.

வேறு.

1. இருசேனையும் போர்ப்பறை முழங்க அமரிடல்.

பார்க்கரற் றொழுகடன் பலவு முற்றிமைக்
கார்க்கட லெனவியங் கறங்க நாற்பகல்
போர்க்கள மிருதிறத் தவரும் புக்குவிண்
போர்க்கவெங் கணையமர் புரிந்திட் டாரரோ.

(இ - ள்) பார்க்கரன் தொழுகடன் பலவும் முற்றி - சூரியனை வணங்குகின்ற காலைக்கடன்கள் பலவற்றையும் செய்து முடித்து மை கார்க்கடல் என இயம் கறங்க - மிக்ககரியகடல் ஒலித்தது போலப் போர்ப்பறை முழங்க, இருதிறத்தவரும் - இருபக்கத்துச்சேனையிலுள்ளாரும், நாற்பகல் - நாலாம்நாள், போர்க்களம் புக்கு - போர் செய்யும் இடத்தைச்சேர்ந்து, விண் போர்க்க - ஆகாயத்திடம் முற்றும் சூழும்படி, வெம் கணை அமர் - கொடிய அம்புப் போரினை, புரிந்திட்டார் - செய்தார்கள்; (எ. று.) அரோ - ஈற்றசை.

இரண்டாமடியில் உவமையணி. என - உவமவுருபு கணையமர் - வாளிப்போர்.

இதுவும் அடுத்தகவியும் - பெரும்பாலும் மூன்ருஞ்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (1)

2. வேழப்படைவேந்தர் வீமனை வளைதல்

பற்குனன் வன்னிமேற் பாய்ந்த னன்றழல்
உற்பவன் விற்குரு வுடனெ திர்ந்தனன்
பற்பல மதகரிப் படையின் வேந்தர்கண்
மற்புய வீமனை வளைந்துற் றாரரோ.

(இ-ள்) பற்குனன் - அருச்சுனன், வன்னிமேல் - வீடுமன்மீது பாய்ந்தனன் - (போரிட) விரைந்தனன்; (அதேசமயத்தில்) தழல் உற்பவன் - திருஷ்டத்யும்நன், விற்குருவுடன் - துரோணாசாரியருடன், எதிர்ந்தனன் - எதிரிட்டுச்சென்றான்: பல் பல மதகரி படையின் வேந்தர்கள் - பலப்பலவாகிய மதயானைப்படைகளை நடாத்தும் அரசர்கள், மல் புய வீமனை - வலிய தோள்களையுடைய வீமசேனனை, வளைந்து உற்றார் - சூழ்ந்து கொண்டார்கள்; (எ. று.) அரோ - ஈற்றசை.

வன்னி - பிரமசாரி: வீடுமன். (2)

வேறு.

3. வீமன் கடுமையாகப் பொருதல்கண்டு துரியோதனன் அவன் மீது சேறல்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

வடநாகநி கர்க்கும்பரி மாத்தேரிழிந் தாடும்
படநாகவி னத்துக்கொரு பறவைப்பதி போல
கடநாகமி குத்தானடல் கண்டாரவ கேது
தடநாகரு நவமெய்திடத் தனுகைக்கொடு தாவி.

(இ-ள்) வடநாகம் நிகர்க்கும் - வடக்கேயுள்ள மேருமலையை யொக்கும், பரி மா தேர் இழிந்து - விரைந்துசெல்லும் குதிரைகள் கட்டிய தேரினின்றிறங்கி, ஆடும் படம் நாகம் இனத்துக்கு - எடுத்

தாடுகின்ற படத்தையுடைய நல்லபாம்பின் சமூகத்திற்கு, (எதிரியாகும்) ஒரு பறவைப்பதி போல - கருடனாகியதோர் பட்சியைப் போல, கடம் நாகம் இகுத்தான் அடல் கண்ட - மதஜலம் ஒழுகும் *யானைகளையழித்தவனுடைய* வலிமையைக்கண்ட, அரவகேது - துரியோதனன், தட நாகரும் - பெரிய தேவர்களும், நவம் எய்திட - பூமியில்வந்து காணும்படி, தனு கைக்கொடு தாவி - வில்லைக்கையிற் கொண்டு பாய்ந்து ; (எ. று.) - 'கடா' என மேலைக்கவியிற்குளக மாய்த் தொடரும்.

நாகம் என்றஒரே சொல் முறையே மலை, பாம்பு, யானை, மேலிடம் (ஆகாயம்) என்ற பொருளில் நான்கடிகளிலும் வந்துள்ளது. சொற்பின்வருநிலையணி. வட பட கட தட என்ற அடைகளால் அப்பொருள்களைக் குறிப்பாற்காட்டினவாதலின் பிறகுறிப்பின் பாற்படும். பறவைப்பதி - பட்சிராஜன் : கருடன். பாம்புக்குப்பகை கருடன் என்பது நான்கனுருபு பகைதொடர்பொருளில்வருதற்கு உதாரணமாகக் காட்டப்படுவதுமரபு. ஈண்டும் 'இனத்துக்கு' என்றவிடத்து நான்கனுருபு பகைப்பொருளில் வந்துளது. கண்ட + அரவகேது = கண்டாரவகேது : "அ முன் அ வரின் அவ்விரண்டும்கெட ஓர் ஆகாரம் தோன்றும்" என்பது. தட - உரிச்சொல். நாகம் - தேவலோகம் : நாகர் - தேவர். நவம் - பூமி. போர்காண அமரர் பூமிக்கிறங்கி ஆகாயத்தினின்றே காண்பர் என்பது வழக்கு. இனி 'நவம் எய்திட' என்பதற்கு - புதுமைகண்டு அதிசயிக்க எனவுமாம், இரண்டாமடியில் உவமையணி : எளிதில் அழித்தலில் உவமை.

இதுமுதல் நான்குகவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும், மற்றவை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிவந்த கலிவிருத்தங்கள். (3)

4:- துரியோதனன் செயலற வீமன் அவனது யானைச்சேனையைச் சிதைத்தல்.

அடலத்திக டாகையுற அவைமேல்வரு வோரும்
குடலத்திகை தலைவாலடி குத்திக்குலை குலைய
படவத்திபு ரிந்தார்த்தனன் பவனன்றரு குமரன்
வடவத்தியிற் புழுவொத்தன வருவாரண மன்னே.

(இ - ள்) அடல் அத்தி கடா - வலிமை பொருந்திய (தன்) யானையைச்செலுத்தி (த்துரியோதனன்). கையற - செயலற்றுப் போக, அவைமேல் வருவோரும் - அத்தகைய யானைகளின் மேல் வந்த பிறமன்னர்களும், குலை குலைய - பதறும்படி, பவனன்தரு குமரன் - வாயுபுத்திரனுகிய வீமசேனன். [அவர்களேறிவந்த யானைகளின்] குடல் - குடலிலும், அத்தி - எலும்பிலும், கை - தும்பிக்கையிலும், தலை - தலையிலும், வால் - வாலிலும், அடி - பாதத்திலும், குத்தி - (தன் கை ஆயுதங்களால்) குத்தி, பட - அவையிறக்கும்படி, அத்தி புரிந்து - கொன்று, ஆர்த்தனன் - (வெற்றி) ஆரவாரஞ்செய்தான்: (இங்ஙனுக) வரு வாரணம்-(இறந்துபடாதுஎஞ்சிய) வந்த யானைகள் வடவத்தியில் - வடவாமுகாக்னியில் (வீழ்ந்த), புழு ஒத்தன - புழுக்களைப் போல் துடித்து இறந்தன: (எ. று.) மன் ஓ - ஈற்றசை.

இரண்டாமடியில், அத்தி- அஸ்தி : வடசொல் (எலும்பு). மூன்ருமடியில் அத்தி - ஹத்தி: வடசொல்: (கொல்லுதல், கொலை). வடவத்தி - வடவைத்தீ என்பதன் சிதைவு ; 'தீ' என்ற நெடில் குறுகி 'தி' என வந்தது, கடா - கடாவி என்பதன் கடைக்குறை, குடலத்திகைதலைவாலடி - உம்மைத்தொகை. (4)

5. பலதுணைவேந்தர் தனது தம்பிமாரோடு திரண்டு உதவ வர, துரியோதனன் வீமனுடைய வில்லும் கவசமும் பொடியாக்குதல்.

தந்திக்கண மாளப்படை தரியாதிரி தரல்கண்
டந்தப்படை யொடுமன்னவ ரனுசத்திர ளொடுவந்
துந்தங்கத முயர்த்தோ னெரிந் தூடவைச்சுத னெடுபோர்
தந்தன்னவன் கவசத்தொடு தனுவும்பொடி செய்தான்

(இ-ள்) தந்திக்கணம் மாள - யானைக்கூட்டங்கள் இறந்துபடவே, படை தரியாது - எஞ்சியசேனைகள் நிலைபெருது குலைந்து,

இரிதரல்கண்டு - பின்னிடுதலைப்பார்த்து, அந்தப்படையொடு - பின்னிடுகின்ற அந்தச்சேனைகளோடு, மன்னவர் - (துரியோதனன் பக்கத்துத்)துணைவேந்தர்கள், அனுசர் சிரளொடு வந்து - அந்தத் துரியோதனனது தம்பிமார்களோடும் சேரவந்து, உந்த - [போரிட] மூள, (அதுகண்டு) அங்கதம் உயர்த்தோன் - பாம்புக்கொடியை யுயரத்தூக்கிய துரியோதனன், எரிந்து - (தானும்) மிகக்கோபங் கொண்டு, உலவைச்சுதனொடு - வாயுபுத்திரனான வீமனோடு, போர் தந்து - போரிட்டு, அன்னவன் - அந்தவீமசேனனின், கவசத்தொடு தனுவும் - (உடம்புக்குப் பாதுகாப்பாகவுள்ள) கவசத்துடன் அவன் பிடித்தவில்லையும், பொடிசெய்தான் - துகளாக்கினான் ; (எ. று.).

அங்கதம் - பாம்பு. உலவை - காற்று. இரிதரல் - தொழிற் பெயர். (5)

6. வீமன் நொந்தானென்று பல வேந்தர் துணைபுரியவர, துரியோ தனன் பக்கத்தும் பலமன்னர் துணையாகத் திரளுதல்.

வாயுச்சுதன் அரவக்கொடி மண்வீழ்த்தவ னேவாற்
சீயக்கொடி தேர்போயயர் செயல்கண்டவற் குதவி
யாயுற்றனர் பலவேந்தர்க ளனிகத்தொடு மன்பால்
தேயத்தவர் பலர்மொய்த்தனர் திரணான்கொடுமம்மா.

(இ - ள்) வாயுச்சுதன் - வாயுபுத்திரனாகிய வீமன், அரவக் கொடி மண்வீழ்த்து - [துரியோதனனது] பாம்புக்கொடியைத் தரையிலே விழும்படிதள்ளி, (பின்) அவன் ஏவால் - அத்துரி யோதனன் [செலுத்திய] அம்பினால், சீயக்கொடி தேர்போய் - சிங்கக்கொடிகட்டிய தனது தேர் சிதைந்து, அயர் செயல் கண்டு - சோர்வுற்ற செய்கையைப்பார்த்து, அவற்கு - அந்தவீமனுக்கு, உதவி யாய் - துணையாக, பலவேந்தர்கள் - பலமன்னர்கள், அனிகத் தொடு உற்றனர் - [தத்தம்] சேனைகளோடும் வந்துசேர்ந்தனர் : (அதேசமயத்தில்) மன்பால் - துரியோதனராசனிடத்தும், பலர் தேயத்தவர் - பலதேசத்து மன்னர்கள், திரள் நான்கொடும் - (தத்தம்) நால்வகைப்படைத் தொகுதிகளோடும், மொய்த்தனர் - சூழ்ந்துவந்தனர் ; (எ. று.) அம்மா - வியப்பிடைச்சொல்: அசை யெனினுமாம்.

சீயம் - சிங்கம் : சிங்கக்கொடி விமனுக்குரியது. (6)

வேறு.

7:- இருபடையிலும் பலமன்னர் பொருது ஆவியிழக்க வீமன் துரியோதனனுடைய தேரினைச் சிதைக்க, அவன் தரையில் விழ, அவனைச்சகுனி முதலியோர் எடுத்தணைத்தல்.

பொருதார் சமர மிருதிறத்துப்
　　பூபா லர்களும் பொழிகணையாற்
பரிதேர் கரிமா வாள்களொடு
　　பட்டார் களத்திற் பலவேந்தர்
துரியோ தனன்மா ருதிகணையால்
　　துரங்கத் தொடுதேர் துணிந்துவிழ
சரமார் புருவத் தரைவிழுந்தான்
　　சகுனி முதலோ ரெடுத்தணைத்தார்.

(இ - ள்) இரு திறத்துப் பூபாலர்களும் - இருபக்கத்து வேந்தர்களும், சமரம் - போரில், பொருதார் -சண்டையிட்டார்கள் : (அதனில்) பொழி கணையால் - பெய்த அம்புமழையால், பரிதேர் கரி மா ஆள்களொடு - விரையுங்குதிரை தேர் யானை காலாள் ஆகிய இவற்றோடு, களத்தில்பட்டார் பலவேந்தர் - பலமன்னர்கள், போர்க்களத்தில் இறந்து போனார்கள் : (அப்போது) துரியோதனன்—, மாருதிகணையால் - வீமனது அம்பினால், துரங்கத் தொடு தேர் துணிந்து விழ - குதிரைகளோடு [அவைகட்டப்பட்ட] தேரும் பிளவுபட்டுத்தரையில் விழ, சரம் மார்பு உருவ - (மற்றொரு) அம்பு தனது மார்பில் புகுந்துபாய, தரை விழுந்தான் - பூமியின்மேல் விழுந்தான் ; (அதுகண்டு) சகுனிமுதலோர் - சகுனி முதலானவர்கள், எடுத்து அணைத்தார் - அவனைத் தூக்கியெடுத்துத் தழுவிக்கொண்டார்கள் ; (எ.று.)

தேர்கரிமாவாள்கள் - ரதகஜதுரகபதாதிகள் : உம்மைத்தொகை. பரி - தேருக்கு அடை: பரி - விரையுஞ் செலவு. மா - குதிரை-ஆள் - காலாள்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள பதினொருகவிகள்— மூன்றுஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (7)

8. வீமன் துரியோதனன்தம்பிமார் ஐவரைக் கொன்றொழிக்க, தருமன்பக்கத்து ஏனையோர் ஆங்காங்குப்போர்புரியவே துரியோதனன் சேனை உடைய, அப்போது பகதத்தன் பாண்டவர் சேனையை எதிர்த்தல்.

முன்னோன் றளரத் தரித்திலராய்
முனிந்து வீர மிகமொழிந்து
பின்னோ ரைவ ரெதிர்ந்தனிலன்
பெற்றோன் றொடையாற் சிலைத்தேர்போய்
பொன்னா டடைந்தார் மன்னரொடும்
புதல்வ ரொடும்பாண் டவர்மோதச்
சின்னா பின்னம் படவரசன்
சேனை யெதிர்ந்தான் பகதத்தன்.

(இ-ள்) முன்னோன் தளர- தமையனாகிய துரியோதனன் சோர்ந்து விழவே, தரித்திலராய்- (அதனைக்காணச்) சகியாதவராய், முனிந்து - கோபித்து, வீரம் மிக மொழிந்து - வீரவார்த்தைகள் பல பேசி, ஐவர் பின்னோர் - ஐந்து தம்பிமார்கள், எதிர்ந்து - எதிரிட்டு வந்து, அனிலன் பெற்றோன் தொடையால் - வாயுவினால் பெறப்பட்ட வீமன் பாணத்தால், சிலை தேர் போய் -வில்லையும் தேரையும் இழந்து, பொன் நாடு அடைந்தார் - சுவர்க்கலோகத்தைச் சேர்ந்தார்கள் (இறந்தார்கள்) : (பின்னர்) பாண்டவர் -ஏனையபாண்டவர், மன்னரொடும் - தமக்குத் துணையாக வந்த வேந்தர்களோடும், புதல்வரொடும் - (தமது) பிள்ளைகளோடும், மோத- தாக்கிப்போரிட, (அதனால்) அரசன் சேனை -துரியோதனராசனின் படைகள், சின்னா பின்னம் பட - கண்டதுண்டமாக அழிய, (அதுகண்ட) பகதத்தன்—, எதிர்ந்தான் - [பாண்டவர்சேனையை] எதிர்த்துவந்தான் ; (எ, று.)

ஐவர் தம்பியர் பெயர்கள் - சேனாவிந்து, சுதக்கணன், பிங்கலசன், சலாசந்தன், வீமவாகு என்பது வில்லிபாரதம். ஸேநாபதி, ஸுஷேணன், ஸுலோசநன், ஜலஸந்தன், பீமபாஹு என வடநூலிற் பெயர் காணப்படுகிறது. அனிலன் - வாயு, காற்று. பொன்னாடடைந்தார்-பிறதினைவிற்சி. மன்னவர் - பாஞ்சாலன், உத்தமோசா, போன்றோர். புதல்வர் - கடோற்கசன், இராவான், அபிமன்யு ஆவர். பாண்டவர் -விசயநகுலசகதேவர். பகதத்தன் - துரியோதனன் துணையரசன். வீரம் - வீரச்சொற்களுக்கு ஆகுபெயர். (8)

9:- பகதத்தன் செய்த கடும்போரால் பாண்டவர் தளர்வுநிலை கண்டு கடோற்கசன் அவன் மேல் விரைதல்.

வில்லான் மல்லாற் சேவகத்தால்
 விறலால் பலர்க்கும் வென்கொடுக்கான்
புல்லார் பணிதாட் பகதத்தன்
 புழைக்கைக் கரிமேற் புகுந்திருபாற்
செல்லா வேழப் படைவந்து
 செருச்செய் தைவர் தம்படையும்
வெல்லா நிலைகண் டிடும்பிமகன்
 வெகுண்டங் கவன்மேல் விரைந்தானே.

(இ-ள்) வில்லால் -வில்வல்லமையினால், மல்லால்-தோள்வலிமையினால், சேவகத்தால் - வீரச்செயலினால், விறலால்-பராக்கிரமத்தால், பலர்க்கும் - (தன்பகைவர்) அனைவர்க்கும், வென் கொடுக்கான் - முதுகுகாட்டமாட்டான் (தோற்கமாட்டான்) : (அத்தகைய) புல்லார் பணி தாள் பகதத்தன் - பகைவர்கள் வணங்கும்படியான பாதங்களையுடைய பகதத்தன், புழைக்கை கரிமேல் புகுந்து - துளையுடைய தும்பிக்கை கொண்ட (சுப்பிரதீகம் என்னும் தன் பட்டத்து) யானை மேலேறிப்போரில் முனைந்து, இருபால் செல்லா - [தனதுவலம்இடம் ஆகிய] இரண்டுபக்கங்களிலும் நடந்துவரும், வேழப்படை வந்து - யானைச்சேனையோடு வந்து, செரு செய்து - போரிட்டு, (அதனால்) ஐவர்தம் படையும் - பாண்டவருடைய வேழப்படையும், வெல்லா நிலை கண்டு - தோற்ற நிலைமையைப்பார்த்து, இடும்பி மகன் - கடோற்கசன், வெகுண்டு - கோபங்கொண்டு, அங்கு - அவ்விடத்து - அவன்மேல் விரைந்தான் - அந்தப் பகதத்தன்மீது வேகமாகச்சென்றான் ; (எ. று.)

வெந் - (வென்) முதுகு. வெல்லா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
(9)

10:- கடோற்கசன் தன் மாயா வீரர்களோடு பகதத்ன்மேற்சென்று போரிட்டு வெல்லுதல்.

தந்தி யாவு மீதாளுஞ்
சரம்வில் லெவையுந் தானுகி
வந்தங் கவுணன் மாயையினுல்
வரிவிற் குழையர் வாளிமழை
சிந்தி யவனே டெதிர்ந்தெந்தத்
திசையுந் தாளுய்ச் செருச்செய்தான்
புந்தி கலங்கிப் பகதத்தன்
போர்க்காற் றலனுய்ப் புறமிடவே.

(இ - ள்) தந்தி யாவும் - எல்லா யானைகளும், மீது ஆளும் - அவற்றையேறிச்செலுத்தும் பாகர்களும், சரம் வில் எவையும் தானுகி - அம்புவில் எல்லாப்படையும்தானெருத்தனேயாகி, வந்து- போர்க்களத்துவந்து, அங்கு-அவ்விடத்து, அவுணன் மாயையினுல்- கடோற்கசனுகிய அரக்கன் (தனது) மாயாசக்தியால் ஆக்கிய, வரிவில் குழையர் - வரிந்து கட்டப்பட்ட வில்லினை வளைத்தவராய வீரர்கள், வாளி மழை சிந்தி - அம்புமழையைக் சொரிந்து, அவனேடு – அந்தப் பகதத்தனேடு, எதிர்ந்து - எதிரிட்டுநிற்ப, (அப்போது அந்தக் கடோற்கசன்) எந்த திசையும் தானுய் - எல்லாத் திக்குக்களிலும் தானெருத்தனேயாய், (சென்று) செருச்செய்தான்- போரிட்டான் : (அதுகண்டு) பகதத்தன்—, போர்க்கு ஆற்றலனுய்- சண்டையிட வியலாதவனுய், புந்தி கலங்கி – அறிவு மயங்கி, புறமிட்டான் - முதுகுகாட்டியோடினுன் ; (எ. று.)

பலர்க்கும் வெந்கொடாதவன் புறமிட்டது புந்திகலங்கியதால் என்ருர். போரிடும் யானைகள், போரிடும் கருவிகள், போரிடும் வீரன் எல்லாம் தானுகி என்றது - மாயாசக்தியால் என்க. குழையர்- குறிப்புவினையாலணையும்பெயர் : (குழைதல் - வளைத்தல்) "வென்ருரன்றே வீமன்மகன் சேனையில் வீரர்" என்றது வில்லி பாரதம், (வீட்டும : நான்காம் : செ : 36) இனி, இதனை முற்றெச்சமாக்கி, கடோற்கசனையே குறிப்பதாக்கொள்ளலுமாம், வாளிமழை - உருவகம். (10)

11. பகதத்தன் அகன்றுபோக, சூரியன் அத்தமிக்க, பாண்டவர் வெற்றியொடு பாசறைசேர்தல்.

விற்ருங் கியகை பகதத்தன்
வேழப் படைதோற் றரசருயி
ரற்ரு ரொழிய வுற்ருரோ
டகன்ரு னைவர் தமைவெல்ல
முற்ரு தெனமற் றதைக்கண்டோ
முளரிக் கிறையும் புறமிட்டான்
பெற்றே வாகைப் பாடிநகர்
புக்கார் பாண்டு பெற்றவரே.

(இ - ள்) விற் தாங்கிய கை பகதத்தன் - வில்லையேந்திய கையையுடைய பகதத்தன், வேழப்படைதோற்று - (தனது) யானைச்சேனையையிழந்து, அரசர் உயிர் அற்ருர் ஒழிய - இறந்து போன அரசர்கள்தவிர, உற்ருரோடு - ஏனைய (பிழைத்த) அரசர்களோடு, அகன்ருன் - (களம்விட்டுச்)சென்ருன் ; (அதே சமயத்தில்) முளரிக்கு இறையும் - தாமரைக்குத்தலைவனுகிய சூரியனும், ஐவர்தமை வெல்ல முற்ருது என - பஞ்சபாண்டவர்களை (யாவராலும்) வெல்ல முடியாது என்று, அதைக்கண்டு ஓ- அந்த முடிவுக்குவந்தோ, புறமிட்டான் - (தானும் பகதத்தன்போல) முதுகு காட்டினுன்(அத்தமித்தான்);(அத்தமனமாகவே)பாண்டு பெற்றவர்- பாண்டவர்கள், வாகை பெற்று - வெற்றிசூடி, பாடிநகர் புக்கார் - (தமது) பாசறையைச் சேர்ந்தார்கள் ; (எ. று.)

போரில் வெற்றிபெற்ருேர் வாகைப்பூ சூடுதல் மரபு. "கண்டோ, ஓ - ஐயவினு : வியப்பிடைச்சொல் எனினுமாம்.

முளரி - தாமரை. தாமரைக்கணவன் என்பர் சூரியனை; சூரியனைக்கண்டால் தாமரை மலரும் ஆதலின். மூன்ருமடியில் - தற்குறிப்பேற்ற ஐயவணி. அற்ருர் - உற்ருர், பெற்றே - பெற்ற, - சொன்னயம் காண்க.
(11)

12. வீடுமனும் பாசறை சேர்ந்து துரியோதனனைத்தேற்றப்புக, அங்கே கர்ணன்வந்து கூறுதல்.

மந்தா கினிசேய் யாவரொடும்
வதியும் பாடிப் புகுந்தரசன்
சிந்தா குலந்தீர்த் திடவவன்பாற்
சேர்ந்த பொழுதங் கினன்மதலை
வந்தா காருக் கானவனை
வலிசெய் தெனைவிட் டனுசாபட
நொந்தா யழுந்தா ழரசவென
நுவன்றா னெவர்க்கு மவனுவல்வான்.

(இ-ள்) மந்தாகினி சேய் - கங்காபுத்திரனாகிய வீடுமன், யாவரொடும் - தன்படைஞரனைவரோடும், வதியும் - (தாங்கள்) தங்கியிருக்கும், பாடி புகுந்து - படைவீட்டினைச் சேர்ந்து, அரசன் - துரியோதனராசனது, சிந்தாகுலம் தீர்த்திட - மனக்கவலையைப்போக்குதற்கு, அவன்பால் சேர்ந்தபொழுது – அவனிடத்துச்சென்றபோது, அங்கு - அவனிடத்து, இனன் மதலை வந்து - சூரியகுமாரனை கர்ணனும் வந்து, [துரியோதனனைநோக்கி] 'அரச-மன்னனே ! ஆகாருக்கு ஆனவனை - பகைவராகிய பாண்டவர்க்கு நன்மை செய்ய வேண்டுபவனை, எனை விட்டு - என்னைப்புறக்கணித்து, வலிசெய்து - பலாத்காரமாகச் சேனாபதியாக்கி, அனுசர் பட - உன் தம்பிமார்ஐவர் இறந்துபட, (இப்போது) நொந்தாய் - வருந்துகின்றாய் ; அழுந்து ஆழ் - நன்றாக (துயரத்தில்) மூழ்கியனுபவி : என - என்று, நுவன்றான் - கூறினான் ; (அதனைக்கேட்ட) அவன் - அத்துரியோதனன், எவர்க்கும் - [தன்பக்கத்தார்] அனைவர்க்கும், நுவல்வான் - (இதனைக்) கூறுபவனானான் ; (எ. று) அவன் நுவன்றதை மேலைக்கவியிற்காண்க.

வலிசெய்தல் - வலிமையீதல் : சேனாபதியாக்கியமையால். அழுந்துதல் - அநுபவப்படுதல். ஆகாருக்கானவன் - முரண், ஆகார் - பகைவர். (12)

13. துரியோதனன் கூறியது.

பாயு மமருக் கைவரெதிர்
　　படருந் திறத்தோ ரிலையிளைஞர்
தேய நிருப ரொடுமிறந்தார்
　　செயல்யா தினியா தவனுளைச்
சாயு முனம்பற் குனற்சாய்த்தோர்
　　தமக்கென் வாழ்வு தருவனென
ஆய பொழுது வீடுமனீ
　　தறைவான் யாரு மறிகெனவே.

(இ - ள்) பாயும் அமருக்கு – மோதிச்செய்யும் போருக்கு, ஐவர் எதிர் படரும் திறத்தோர் இலை - பாண்டவர்கள் எதிர்சென்று பொரும் வலியுடையோர் ஒருத்தரும் (நம்மிடம்) இல்லை, இளைஞர் (என்) தம்பிமாரில் ஐந்துபேர், தேயம் நிருபரொடும் - பலதேசத்து மன்னர்களோடும் இறந்தார் - மடிந்தார்கள் : இனி - இனிமேல், செயல் யாது - (நாம்) செய்யவேண்டியது என்ன ! ஆதவன் நாளை சாயும் முனம் - சூரியன் நாளைக்கு அத்தமிப்பதன் முன், பற்குனன் சாய்த்தோர் தமக்கு - அருச்சுனனை வீழ்த்தியவர்க்கு, என் வாழ்வு தருவன் என - என்னுடைய அரசவாழ்க்கையைக் கொடுப்பேன் என்றுசொல்ல, ஆய பொழுது - அப்போது, வீடுமன் - பீஷ்மாசாரியன், யாரும் அறிக என - அனைவரும் அறிவீராக என்று பீடிகையிட்டு, ஈது அறைவான் - இந்தவார்த்தைகளைக் கூறினான் ; (எ. று.) வீடுமன் கூறியதை மேலைக் கவியிற்காண்க.

அறிகென - அகரவீறு தொகுத்தல். தருவன் - தன்மையொருமைவினைமுற்று. (13)

14. வீடுமன் கூறியது கேட்டுக் கர்ணன் தற்பெருமை கூறல்.

வென்ற திதுகா றியார்நரனை
　　வெல்வ தரிதன் றுரைத்ததலால்
இன்றும் உரைத்தேம் இகலொருவி
　　இனிபா ரவரோ டாளுதனன்

றென்று புகல வென்றுயிர்த்தோன்
எனக்குன் பதம்வந் திடிற்செகுப்பான்
நின்றே னெனவங் கவனுளை
நீவென் றிடினல் குவனென்முன்.

(இ- ள்) இதுகாறு - இதுவரையில், யார் நரனை வென்றது - அருச்சுனனை வென்றவர் யாவருளர்? (ஒருவருமிலர்) : (அவனை) வெல்வது அரிது - செயிப்பதென்பது முடியாதது : அன்று உரைத்தது அலால் - (விதுரன் வில்முறித்த) அன்றைப்போது கூறிய தோடல்லாமல், இன்றும் - இன்றைத்தினம் இப்போதும், உரைத்தேம் - (வலியுறுத்திக்) கூறினேன் : (ஆகவே) இகல் ஒருவி - பகைமை விட்டு, இனி - இனிமேல். அவரோடு பார் ஆளுதல் நன்று - (இந்தப்) பூமியை அந்தப்பாண்டவரோடு கூடி (ஒருசேர) ஆட்சிபுரிதல் நலமாகும், என்று புகல - என்று (நற்புத்தி) கூற (அதுகேட்டு) என்று உயிர்த்தோன் - சூரியகுமாரனுகிய கர்ணன் (வீடுமனை நோக்கி) எனக்கு உன் பதம் வந்திடில் - எனக்கு உன்னுடைய சேனைத்தலைமைப்பதவி வந்தால், செகுப்பான் நின்றேன் - (நான் அருச்சுனனைக்) கொல்லுதற்குச் சமைந்தேன் : என - என்று (தற்பெருமை) கூற, அங்கு - அப்போது, அவன் - அந்த வீடுமன். (கர்ணனை நோக்கி) நாளை நீ வென்றிடில் - நாளைய தினம்செய்யும் போரில் நீவெல்வாயாளுல். நல்குவன் -(என்) சேனைத் தலைமையைக் கொடுத்திடுவேன், என்முன் - என்று மறுமொழி கூறினான் ; (எ. று.)

வீடுமன் கூறிய நற்புத்தி மெச்சத் தகுந்தது, காறு - கால வளவுகுறிக்கும் இடைச்சொல், உரைத்தது - தொழிற்பெயர். உரைத்தேம், நல்குவன் - தன்மையொருமை. என்று - சூரியன். செகுப்பான் - பானீற்று வினையெச்சம். (14)

15:- அசுவத்தாமனும் துரோணனும் கர்ணனைக் கண்டித்தல்.

சொல்லால் வெல்வை வில்லமரின்
சூட்ச முணராய் தொறுமீட்பான்
செல்லா வமரிற் ருேற்றமைநீ
செகத்தோ ரறிவர் என்றுரைத்தான்

வில்லா ரணன்சேய் அரசுளத்தை
வேருக் கிடுமா துலனீயும்
புல்லா ரைவ ரன்றெனவே
புகன்றான் யாரும் புகழாசான்.

(இ - ள்) சொல்லால் வெல்வை - பேச்சினால் (நீ) செயிப்பாய் : வில் அமரின் சூட்சம் - விற்போரின் திறங்களை, உணராய் - அறிய மாட்டாய் : தொறு மீட்பான் - (கவர்ந்த) ஆநிரைகளை மீட்டு வரும்பொருட்டு, செல்லா அமரில் - (விராடநகர்ப்புறம்) சென்று செய்த போரில், நீ —, தோற்றமை - தோல்வியடைந்தமையை, செகத்தோர் அறிவர் - இவ்வுலகத்தோர் அனைவரும் தெரிந்துள்ளார், என்று —, வில் ஆரணன் சேய் - வில் வித்தையில் வல்ல பிராமணனாகிய துரோணாசாரியரின் புதல்வனாகிய அசுவத்தாமன், உரைத்தான் - சொல்லினான் : (அப்போது) யாரும் புகழ் ஆசான் - அனைவராலும் புகழப் படுகின்ற ஆசிரியனாகிய துரோணனும், 'அரசு உளத்தை வேருக்கிடும் மாதுலன் (உம்) நீயும் - துரியோதனராசனது மனத்தை மாறுபடச்செய்யும் (தீநெறிப்படுத்தும்) மாமனாகிய சகுனியும் நீயும், புல்லார் - (அவனுக்கு) பகைவராவீர் : ஐவர் அன்று - பஞ்சபாண்டவர்களல்லர், என - என்று, புகன்றான் - (இடித்து) உரைத்தான் ; (எ. று.) சூட்சம் - சூட்சுமம். ஆரணன் - வேத மோதும் அந்தணன். வில் ஆரணம் - தநுர்வேதம், வில்வித்தை. மாதுலன் என்றதன்பின் உம்மை தொக்கது. சகுனியும் கர்ணனும் தமது துர்ப்போதனையால் அவ்வப்போது துரியோதனனின் உளத்தைக் கலங்கச்செய்து தீநெறிப்படுத்துவராதலின், அவர்களை அவனுக்கு உண்மையில் பகைவராவர் என்றது. (15)

16:- துரியோதனன், அசுவத்தாமன் கர்ணன் இருவரையும் தமக்குள் மாறுபடுதலால் வெறுத்தல்.

கொடையான் என்மொய்ம் பிகழ்ந்தவரைக்
கொல்வ னெனவாள் கொண்டெழவெள்
விடையான் எனவச் சுவத்தாமன்
வெகுண்டங் கவனோ டேற்றிடலும்

தடையா மரவத் துவசனெதிர்
　　தடுத்தங் கிருத்தி நந்தமினும்
படையாற் றிடிலெங் ஙனம்வெல்வம்
　　பாண்டு சுதரை யெனவெறுத்தான்.

(இ - ள்) கொடையான் - கர்ணன், என் மொய்ம்பு இகழ்ந்த வரை - எனது வலிமையையிழித்துப் பேசுபவரை, கொல்வன் என - கொன்றுபோடுவேனென்று, வாள்கொண்டு எழ - வாளாயுதத்தைக் கையிற்கொண்டு சண்டைக்கு எழ, (அதுகண்டு) வெள் விடையான் என - வெண்மையான இடபத்தை ஏறிச்செலுத்துகின்ற சிவபிரான் என்னும்படி, அச்சுவத்தாமன் - அசுவத்தாமன், வெகுண்டு - கோபித்து, அங்கு - அவ்விடத்து, அவனோடு - அந்தக்கர்ணனோடு, ஏற்றிடலும் - எதிர்த்து வருதலும், தடையாம் - ஆட்சேபிக்கின்ற, அரவத்துவசன் - துரியோதனன் எதிர் தடுத்து - எதிரில்வந்து தடுத்து, அங்கு இருத்தி – அவ்விடத்திலேயே (இருவரையும்) அமரச்செய்து, நந்தமில் நாம் படை ஆற்றிடில் - நமக்குள்ளேயே நாம் சண்டையிடுவோமானால், பாண்டு சுதரை எங்ஙனம் வெல்வம் - பாண்டவர்களை எப்படிச் செயிப்போம், என என்று கூறி, வெறுத்தான் - அருவருத்தான் ; (எ. று.)

அசுவத்தாமன் சிவனருளால் தோன்றியவனாதலின், அச்சிவனை அவனுக்கு உவமை கூறினார் என்க. படையாற்றுதல் - கருவி கொண்டு பொருதல். (16)

17:- துரியோதனன் திறத்தார் பாசறை புகுத, புதல்வர் ஐவர் இறந்ததற்குத் திருதராட்டிரனும் காந்தாரியும் வருந்த, மறு நாள் சூரியன் உதயமாதல்.

பைந்தா ரரசன் விடைநல்கப்
　　பலருமிருக்கை புகுந்தனர்போர்
மைந்தார் குமர ரைவருயிர்
　　மாண்டா ரெனச்சஞ் சயனகரில்
வந்தோ திடக்கேட் டரசுமவன்
　　மனையும் வருந்திப் புலம்புற்றார்
ஐந்தாம் பகற்போர் காண்பான்போல்
　　அடைந்தா னுதயன் தடந்தேர்மேல்,

(இ - ள்) பைந்தார் அரசன் - பசிய நந்தியா வட்டமாலையை யணிந்த துரியோதனன், விடை நல்க - அனுமதிகொடுக்க, பலரும் - படைவீரர்கள் பலரும், இருக்கை புகுந்தனர் - தத்தமதிருப் பிடம் சேர்ந்தனர் : போர் - நிகழ்ந்த சண்டையில், மைந்து ஆர் குமரர் ஐவர் – வலிமை பொருந்திய ஐந்து புதல்வர்கள், உயிர் மாண்டார் - உயிரொழிந்தார்கள், என - என்று, சஞ்சயன் - சஞ்சயமுனிவன், நகரில் வந்து ஓதிட - அரண்மனைக்கு வந்து சொல்ல, அரசும் அவன் மனையும் கேட்டு - திருதராட்டிரமன்னனும் அவனது மனைவியான காந்தாரியும் கேட்டு, வருந்தி - துயருற்று, புலம்புற்றார் - அழுதார்கள் : (இஃது இங்ஙனமாக) உதயன் - சூரியன், ஐந்தாம் பகல் போர் காண்பான் போல் - ஐந்தாம் நாள் யுத்தத் தைப் பார்ப்பவன்போல, (மறுநாள்) தட தேர்மேல் அடைந்தான் - பரியெ தேரின்மேலேறி வந்தான் ; (எ. று.)

ஈற்றடி - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. தார் - மாலை : நஞ்சா வட்டை (நந்தியாவட்டம்) மாலை துரியோதனனுக்கு உரியது, மைந்து - வலிமை, பலம். நகர் - அரண்மனை. தடந்தேர் - உரிச் சொற்றொடர். (17)

நான்காம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஆருவது

ஐந்தாம் போர்ச் சருக்கம்

வேறு.

1. **வாச்சியப்பேரொலியோடு இருதிறச்சேனையும் பொர எதிருறுதல்.**

இலகாத வன்றோன்றி யுறுமுன்
கடன்செய் திகற்சேனையோ
டொலிதாரை முரசூது வளைகாள
மெழுமூழி யுவராழிபோல்
உலகோர்கள் செவிடெய்த வொலிசெய்ய
விருபாலு முளமன்னர்கள்
பலபேய்க ணடமாடு களமுற்றெ
திர்ந்தார்கள் பகைநாடியே.

(இ - ள்) இலகு ஆதவன் தோன்றி உறுமுன் - விளங்குகின்ற சூரியன்வந்து உதயமாவதற்குமுன் (அதிகாலையில்), கடன்செய்து - கடமைகளைச் செய்துமுடித்து, இருபாலும் உள மன்னர்கள் - இரண்டுபக்கத்திலும் உள்ள அரசர்கள், இகல் சேனையோடு - மாறுபடுகின்ற படைகளோடு, ஒலி தாரை - சப்திக்கின்ற தாரை யென்னும் ஊதுகருவியும், முரசு - பேரிகையும், ஊது வளை - ஊதுகின்ற சங்கங்களும், காளம் - எக்காளமென்னும் ஊதுகருவியும், ஊழி எழும் உவர் ஆழி போல் - யுகாந்தகாலத்துப் பொங்கியெழும் உப்புக்கடல்போல, உலகோர்கள் செவிடு எய்த - நிலவுலகத்தவர் காதுகள் செவிடாகும்படி, ஒலிசெய்ய - பேரொலி செய்ய, பலபேய்கள் நடமாடு களம் உற்று - பலபிசாசுகள் கூத்தாடுகின்ற போர்க்களத்தைச் சேர்ந்து, பகைநாடியே - பகைவர்களைக்கிட்டியே, எதிர்ந்தார்கள் - எதிரிட்டார்கள் ; (எ. று.)

தாரைவளைகாளம் - ஊதுகருவிகள். முரசு - அடிக்கப்படும் வாச்சியம். காளம் - காகளம் எனவும்படும். இரண்டாமடியில் உம்மைத்தொகை. ஆழிபோல் ஒலிசெய்ய - உவமையணி. பிணங்களைத்தின்னப் பேய்கள் நடமாடும்.

இதுமுதல் ஐந்துகவிகள் - பெரும்பாலும் முதல் நான்குசீரும் மாங்காய்ச்சீர்களும், ஈற்றுச்சீரொன்று மாங்கனிச்சீருமாகிய நெடிலடி நான்குகொண்ட கலிநிலைத்துறைகள். (1)

2. வீடுமனோடு பொர அவனின்றவிடத்துக் கிருஷ்ணன்தேர் செலுத்த அதுகண்டு கலிங்கேசர்முதலோர் நரனை எதிரிட்டு இறத்தல்.

குதிகொண்டு கவியாடு கொடிவையம்

அரிசங்கு கொண்டூதிவிண்

நதிமைந்த னுறுதேரி னெதிர்கொண்டு

விடவந்து நரனேற்றலும்

அதுகண்டெ திர்ந்தேக லிங்கேசர்

முதலான வடன்மன்னர்கள்

நுதிகொண்ட நரனேவி லுடல்விண்டு

சென்றூர்சு வர்க்கத்தரோ.

(இ - ள்) குதிகொண்டு - குதித்துக்கொண்டு, கவி ஆடும் - (அனுமனாகிய) குரங்கு ஆடுகின்ற, கொடி - கொடிகட்டிய, வையம் - தேரினை, அரி - ஸ்ரீகிருஷ்ணன், சங்குகொண்டு ஊதி - (பாஞ்சசன்னியம் என்னும் தன்) சங்கினை முழக்கிக்கொண்டு, நதிமைந்தன் உறு தேரின் - கங்காபுத்திரனாகிய வீடுமன் ஏறிவந்த தேரினுக்கு, எதிர்கொண்டு விட - நேரே எதிராகக் கொண்டு நிறுத்த, நரன் வந்து ஏற்றலும் - அருச்சுனன் முன்னேவந்து எதிரிடவும், அதுகண்டு - அவன் எதிர்த்தலைப்பார்த்து, கலிங்க ஈசர் முதலான அடல் மன்னர்கள் - கலிங்க தேசத்தலைவர்கள் முதலாகிய வலிய அரசர்கள், எதிர்ந்து - (தாங்களும்) எதிரிட்டு, நுதிகொண்ட - கூரியமுனையைக்கொண்ட, நரன் ஏவில் - அருச்சுனனது அம்பினால், உடல் விண்டு - தேகம் பிளக்கப்பட்டு, சுவர்க்கத்து சென்றார் - வானுலகத்துப்போய்ச் சேர்ந்தார்கள் (இறந்தார்கள்) ; (எ. று.) அரோ -ஈற்றசை.

குரக்குக்கொடி அருச்சுனனுக்குரியது. கவி = கபி = குரங்கு. வையம் -தேர், வந்து - சொல்விழுக்காடுமாம், கலிங்க + ஈசர் = கலிங்கேசர் : குணசந்தி. சுவர்க்கம்சென்றார் - பிறிதினவிற்சி. (2)

3. கலிங்கேசர் இறந்ததுகண்டு வீடுமன் அருச்சுனனையெதிர்த்து வில்முதலியன அறுபட்டு மீள, வீமனுடன் பலமன்னர்பொருது தோற்றமை கூறும்.

நரனேவி லமர்செய்க லிங்கேசர்
பலர்மாள நதிநந்தனன்
எரிகால விழிவாளி பலதூவி
யவனேவி லெய்வாளிவில்
வரிநாணு நடுவற்று மிகவெய்த்து
மீள்காலை வலிவீமன்மேல்
ஒருபாலி னமர்செய்து பலமன்னர்
அவனாலு டைந்தாரரோ.

(இ - ள்) *நரன் ஏவில்* - அருச்சுனனுடைய அம்பினால், *அமர்செய் கலிங்கேசர் பலர் மாள* - போர்செய்த கலிங்கதேசமன்னர்கள் பலர் இறந்துபட, *நதிநந்தனன்* - வீடுமன், *விழி எரிகால* - கண்களில் தீப்பொறி கக்க, *வாளி பல தூவி* - பல அம்புகளைச் சொரிந்து, *அவன் ஏவில்* - அந்த அருச்சுனன் (மாறுக விட்ட) அம்பினால், *எய் வாளி வில் வரி நாணு நடு அற்று* - [தான்] எய்த அம்பு வில் கட்டப்பட்ட நாண்கயிறு (வில்லின்) நடுப்பகுதி முதலியன அறுபட்டு, (மேலும்) *மிக எய்த்து* - மிகவும் இளைத்துப் போய், *மீள்காலை* - (களத்தினின்று) திரும்பும்போது, *வலி வீமன் மேல்* - பலம்பொருந்திய வீமசேனன் மீது, *பல மன்னர்* - பல அரசர்கள், *ஒரு பாலின் அமர் செய்து* - ஒரு பக்கத்துப் போரிட்டு, *அவனால் உடைந்தார்* - அவ் வீமனால் தோற்றுப்போனார்கள்; (எ. று.) *அரோ* - ஈற்றசை.

விழியெரிகால என மாறுக. ஏவில் - இல் ஐந்தனுருபு ஏதுப் பொருளது. (3)

4. தம்பிமார்முதலோர் முதுகிட்டுவருதல்கண்டு துரியோதனன் வீமன்மேற்சென்று அவன்கவசத்தைப் பிளத்தல்.

தன்தம்பி மார்மைந்தர் நன்மாமன்
முதலான தரைவேந்தர்தன்
மன்றம்பி யாம்வீமன் விடுமேவில்
வென்னிட்டு வரல்கண்டெரிந்

திர்ருவி கொள்வே னெனச்சீறி
அகிகேத னிகல்வீமன்மேற்
சென்றேபல் கணைகொண்டு கவசம்பொ
டித்தே செருச்செய்தனன்.

(இ-ள்) தன் தம்பிமார் - (துச்சாதனன்முதலிய) தனது தம்பியர்கள், மைந்தர் - (அவர்களுடைய) புத்திரர்கள், நல் மாமன் முதலான தரை வேந்தர்-சகுனி முதலாகிய நிலவுலகமன்னர்கள், தன்மன் தம்பியாம் வீமன் விடும் ஏவில் - தருமன் தம்பியாகிய வீமசேனன் விடுத்த அம்பினால், வென் இட்டு -முதுகிட்டு, வரல் கண்டு - ஓடி வருதலைப்பார்த்து, அகிகேதன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், எரிந்து - மனங்கொதித்து, (வருந்தி) 'இன்று ஆவி கொள்வேன்' என சீறி- இன்றைத்தினம் (அந்தவீமனுடைய) உயிரைக்கவர்வேன் என்று கோபித்து, இகல் வீமன்மேல் - பகைமை பாராட்டும் வீமன்மீது, சென்று - பாய்ந்து, பல் கணை கொண்டு - பல பாணங்களைக்கொண்டு, கவசம் பொடித்து - (அவனிட்டிருந்த) கவசத்தைப்பிளந்துபொடியாக்கி, செரு செய்தனன் - (உக்கிரமாகப்) போரிட்டனன் ; (எ. று.)

சகுனி காந்தாரதேசத்தரசனாகிய சுபலனது மகனாதலின் 'தரை வேந்தன், எனப்பட்டான். நல் என்றது பிறகுறிப்பு. (4)

5. **துரியோதனன் வலிகெடுதல்கண்டு பூரிசிரவா வீமன்மீது பொர வர, அதுகண்டு சாத்தகி அவனையெதிர்த்தல்.**

கவசம்பொ டித்தான்றன் மருமத்தி
லொருவாளி கதையோன்விட
அவசம்பி றந்தங்க வன்றேரின்
விழல்கண்ட தாற்றுவரித்
துவசன்ற னுடனெற்ற வடல் பூரி
சிரவாவி சொர்க்கத்திலித்
திவசம்பு கச்செய்வ னெனவந்
தெதிர்ந்தான் திறற்சாத்தகி.

(இ - ள்) கவசம் பொடித்தான்தன் மருமத்தில் - (தன்) கவசத்தைப்பிளந்து பொடிசெய்த துரியோதனனது மார்பினில், கதை

யோன் - வீமன், ஒரு வாளி விட - ஓரம்பினைச் செலுத்த, (அதனால்) அவன் - அத்துரியோதனன், அவசம் பிறந்து - தன் வசந்தப்பி, அங்கு தேரின் விழல் கண்டு - அவ்விடத்துத் தன் தேர்த்தட்டில் விழுதலைக்கண்டு, ஆற்று - பொறுக்கமுடியாமல், அடல் பூரிசிரவா - வலிமைமிக்க பூரிசிரவசு, அரித்துவசன் த(ன்)னுடன் எற்ற - சிங்கக்கொடியையுடைய வீமனோடு எதிர்த்துமோத, (அப்போது) திறல் சாத்தகி-பராக்கிரமமிக்க சாத்தகி, 'இத் திவசம் ஆவி சொர்க் கத்தில் புகச்செய்வன்' என வந்து - இன்றையதினம் (இந்தப்) பூரிசிரவாவின் உயிரை வானுலகம் புகும்படிசெய்வேன்' என்று வீரம்பேசி வந்து, எதிர்ந்தான் - எதிரிட்டுப்பொருதான்; (எ. று.)

பூரிசிரவா - இவன் சோமதத்தனென்பவனதுமகன் : இவன் துரியோதனன்பக்கத்து அதிரதவீரரில் ஒருவன். சாத்தகி கிருஷ்ணனுக்குத் தம்பிமுறையான். [குறிப்பு:- பதினான்காம் நாட் போரில் சாத்தகி இந்தப் பூரிசிரவாவைக் கொன்றான்]. பொடித் தான் - வினையாலணையும் பெயர். பூரிசிரவா + ஆவி = பூரிசிர வாவி : ''ஆமுன் ஆவரின் அவ்விரண்டும்கெட ஓர் ஆகாரம் தோன்றும்'' என்பது : சதா + ஆநந்தம் = சதாநந்தம் என்பது போல. திவசம் - நாள். (5)

வேறு.

6. சாத்தகியும் பூரிசிரவாவும் முதலில் விற்போர்புரிந்து பிறகு வாட்போர்புரிதலைக்கூறும்.

தரைமீவலர் யாமேயெனச்
சரம்விட்டவர் சமரம்
புரிபோதிரு வர்கள்சாபமும்
பொடியாயுக மீட்டும்
இருகேடய மீர்வாளமும்
எடுத்தேயமர் செய்தார்
வருசேனையிற் பரிதேர்கரி
மாவீரர்கள் படவே.

(இ - ள்) தரை மீ வலர் யாமே என - பூமியின்மீது வல்லமை படைத்தவர்கள் நாங்கள் இருவருமே என்று சொல்லும்படி, சரம்விட்டு - அம்புகளைப்பிரயோகித்து, அவர் சமரம் புரிபோது - சாத்தகி பூரிசிரவா ஆகிய அவர்கள் போரிடும்பொழுது, இருவர்கள்

சாபமும் பொடியாய் உக - இருவடைய விற்களும் இற்றுப்பொடியாய்ச்சிந்த, மீட்டும் - மறுபடியும், (அவ்விருவரும்) இருகேடயம் - இரண்டு கேடகங்களும், ஈர் வாளமும் - இரண்டு வாளாயுதங்களும், எடுத்து - (இருகையிலும்) எடுத்துக் கொண்டு, வரு சேனையில் - தம்முடன்வந்தபடைகளில், பரி தேர் கரி மாவீரர்கள் பட - [நால்வகையினவாகிய] ரதகஜதுரகபதாதிகள் அழியும்படி, அமர் செய்தார் - போரிட்டார்கள் ; (எ. று.)

கேடயம் - தன்மேற் பிறர் எறியும் படைக்கலங்களைத் தடுப்பதொரு கருவி, பரிசை : (Shield). வாளம் - வாள் : அம் - சாரியை. பரிதேர்கரிமாவீரர்கள் - உம்மைத்தொகை, மீ - மீது.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுள்ள மூன்றுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட **கலிவிருத்தங்கள்.** (6)

7:- **படுகளச்சிறப்பும், இருதிறத்துச்சேனைகள் பாசறை புகுதலும்** கூறும்.

ஆடும்பல பேயோடுட
ஞடும்பல கவந்தஞ்
சூடும்படை கலஞடைகள்
துணிதேர்கரி பரியா
ளோடும்பொழி செந்நீர்நதி
யோடுங்கள மொருவிச்
சாடுந்திற லிருசேனைகள்
தத்தம்முழி யுற்ற.

(இ - ள்) ஆடும் பல பேயோடு - கூத்தாடுகின்ற பலபேய்களோடு, பல கவந்தம் - பல உடற்குறைகள், உடன் ஆடும் - கூடநின்றுகூத்தாடுவன: (இஃது இங்ஙனுக) சூடும் படை கலன் ஆடைகள் - தரித்திருந்த ஆயுதங்கள் ஆபரணங்கள் வஸ்திரங்கள், (இவைகளோடு), துணி-துணிக்கப்பட்ட, தேர் கரி பரி ஆளோடும் - ரதகஜதுரகபதாதிகளோடும், பொழி - பெருகுகின்ற, செந்நீர் நதி - இரத்தவாறுனது, ஓடும் களம் ஒருவி - ஓடுகின்ற படுகளத்தை விட்டு நீங்கி, சாடும் திறல் இரு சேனைகள் - மோதிப்போரிடும் வல்லமை படைத்த இருதிறத்துப்படைகளும், தத்தம் உழி உற்ற - தங்கள் தங்களது பாசறையிடத்தை யடைந்தன; (எ. று.)

கவந்தம் - தலையரியுண்ட உடல்கள் : தலைநீங்கிய உடல் முன் தொடர்ச்சியால் சிறிதுநேரம் கைகால்களையசைத்துத் தொழில் செய்தலையும் பதைபதைத்துத் துடிப்பதையுமே 'ஆடும்' என்றது. இனி 'பேரொத்த வாயிரம்பேர்மடிந்தாற் பிறக்குங் கவந்தம், நேரொத்தவாடும்' என்றபடி, ஒத்தஆயிரம் வீரர்மடிந்தால் கவந்த மெழுந்து ஆடுமென்று கூறுதலுமுண்டு, கவந்தம் ஆடும்பொழுது பேய்கள் உடன் ஆடுவது, அவற்றைத் தாம் உண்ணலாமென்ற களிப்பினாலென்க, தரித்திருந்த படைக்கலங்கள் அணிகள் ஆடைகள் இவைகளோடு சிதைக்கப்பட்ட தேர்கரிபரியாள் இவைகளும் ஓடும் இரத்த நதி வெள்ளத்தில் அடித்து வருவன எனப் படுகளச் சிறப்புக் கூறியபடியென்க. இரண்டாமடியில் உம்மைத்தொகை. *செந்நீர் -* இரத்தம் : பண்புத்தொகை. *உழி -* இடம். (7)

8:- சூரியன் அத்தமிக்க, இரவுவந்துசெல, மறுநாள் சூரியோதயமாதல்.

நிலமன்னவர் பலர்விண்புக
நெருக்குற்றிட லாலே
தலமன்னுவ மிடமிங்கிலை
தானென்றின னத்த
மலைமன்னினன் பலமாதிய
மலர்விண்டன கங்குற்
செலவென்றிட வரல்போற்கதிர்
தேர்மீதி லுதித்தான்.

(இ - ள்) *நில மன்னவர் பலர் விண் புக -* பூவுலகஅரசர்கள் பலபேர் (இறந்து) வானுலகு புக, (அதனாலே வானுலகு) *நெருக்குற்றிடலால் -* (சிறிதும் வெற்றிடம் இல்லாதபடி) நெருக்கமடைந்ததால், *இனன் -* சூரியன், *இடம் இங்கு இலை -* நமக்கு இவ்வானிடத்து இடமில்லை, (ஆகவே) *தலம் மன்னுவம் -* (மேற்குத்திசையிலுள்ள) நம்இடத்திற்குப் போவோம், *என்று -* என்றுமுடிவுகட்டி, *அத்தமலை மன்னினன் -* அஸ்தகிரியையடைந்தான் : (அப்போது) *பலம் ஆதிய, மலர் விண்டன -* கருநெய்தல் முதலாகிய பூக்கள் வாய்நெகிழ்ந்தன (மலர்ந்தன) : *கங்குல் -* இராப்போதினை, *செல -* (தோற்றுப்) போகும்படி, *வென்றிட வரல் போல் -* வெற்றிபெற வருபவன் போல, *கதிர் -* சூரியன், *தேர்மீதில் -* தேரின்மேல் ஏறி, *உதித்தான் -* தோன்றினான் ; (எ.று.).

போரிலிறந்து விண்ணுலகடைந்த வீரர்களால் நெருங்கியிருத்தலாலே அங்கு எங்குந் தனக்கு இடமில்லையென்று துணிந்து மேற்கிலுள்ள அத்தமனகிரி தன்னதாதலின், அதனை இடமாக் கொண்டு சூரியன் அங்குச் சேர்ந்தான் என உத்பிரேக்ஷித்தது, தற்குறிப்பேற்றவணி. பலம் - உற்பலம் என்பதன் முதற்குறை : உற்பலம் - கருநெய்தல். 'ஆதிய' என்றதால் இரவில்மலரும் பூக்களைக் கொள்க. வென்றிடவரல்போல், என்றது ஏதுத்தற்குறிப்பேற்றவணி. தேர் - சூரியனது தேர் ஓராழித்தேர் ஆகும். (8)

ஐந்தாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஏழாவது

ஆறும் போர்ச்சருக்கம்

வேறு.

1. பாண்டவர் சேனையைத்திருஷ்டத்யும்நன் மகரவியூகமாக வகுக்க, வீடுமன் தன்சேனையைக் கிரௌஞ்சவியூகமாகவகுக்க, இருபடைவீரர்களும் நெருங்கிப்பொருதல்.

இருமூன்றும் பகலமருக் கனிகத் தோடும்
இருதிறத்து மன்னரும் பல்லியங்க ளார்ப்பக்
குருபூமி யடைந்தனர்கள் திட்டத் தூய்மன்
கோட்டினன்றன் வாகினியை மகர யூகம்
வரிசாப வீடுமன்றன் றானை தன்னை
வகுத்தணிந்தான் கரிஞ்சமெனும் வியூக மாகப்
பொருதார்கள் இருதிறத்து ளாரும் வெம்போர்
புகழ்ந்திடவான் விமானமுறும் புலவ ரம்மா.

(இ-ள்) இருமூன்றும்பகல் - ஆறும்நாள், அமருக்கு - போரிடுதற்கு, இருதிறத்துமன்னரும் - இருபக்கத்து அரசர்களும், அனிகத்தோடும் - (தத்தம்) சேனைகளோடும், பல் இயங்கள் ஆர்ப்ப - பல வாச்சியங்கள் முழங்க, குருபூமி அடைந்தனர்கள் - குருக்ஷேத்திரத்தைச் சேர்ந்தார்கள் : திட்டத்தூய்மன் - திருஷ்டத்யும்நன், தன்வாகினியை - தன்சேனையை, (பாண்டவர்சேனையை) மகரயூகம் கோட்டினன் - மகரவியூகமாக அணிவகுத்தனன் ; (அதேசமயத்தில்) வரிசாப வீடுமன்-இறுக்கக்கட்டப்பட்ட வில்லையுடைய பீஷ்மன். தன் தானை தன்னை - தனது சேனையை (துரியோதனன் சேனையை), கரிஞ்சம் எனும் வியூகமாக - கிரௌஞ்சம் என்னும் வியூகமாக, வகுத்தணிந்தான் - அணிவகுத்தான் : (பின்னர்) வான் விமானம் உறும் புலவர் - ஆகாயத்திடத்து விமானங்களில் (போர்காண வந்து) இருந்த தேவர்கள், புகழ்ந்திட - மெச்சும்படி, இருதிறத்துளாரும் - இருபக்கத்திலுள்ள வீரர்களும், வெம்போர் பொருதார்கள் - கொடிய யுத்தத்தைச்செய்தார்கள் ; (எ. று,).

அம்மா - வியப்பிடைச்சொல்.

மகரவியூகம் - சுறாமீன் வடிவமாகச் செய்யும் படைவகுப்பு. மகரத்தின் தலையிடத்தில் அருச்சுனனும், கண்களில் நகுலசகதேவரும், வாயில் பீமசேனனும், கண்டத்தில் அபிமந்யு கடோற்

கசன் சாத்யகி தருமபுத்திரன் முதலியோரும், புறத்தில் விராடனும் திட்டத்துய்மனும், இடப்பக்கத்தில் கேகயநாட்டரசர் ஐவரும், வலப் பக்கத்தில் திருஷ்டகேதுவும் சேகிதானனும், கால்களில் குந்தி போசனும் சதாநீகனும், வாலில் சிகண்டியும் இராவானும் நின்றன ரென்று வியாசபாரதங்கூறும். கிரிஞ்சம் -க்ரௌஞ்சம் என்னும் வட மொழித்திரிபு. கிரௌஞ்ச வியூகம் - அன்றிற்பறவையின் வடிவமாகச் செய்யப்படும் படைவகுப்பு. அப்பறவையின் வாயிடத்தில் துரோ ணனும், கண்களில் அசுவத்தாமனும் கிருபனும், தலையில் பல அர சர்களோடு கிருதவர்மாவும், கழுத்தில் பல அரசர்களோடு துரி யோதனனும், மார்பில் பல அரசர்களோடும் பெருஞ்சேனையோடும் பகதத்தனும், இடச்சிறகில் தன்சேனையோடு சுசர்மாவும், வலச் சிறகில் யவனர்முதலிய பல அரசர்களும், புறத்தில் சுருதாயுவும் சதா யுவும் சௌமதத்தியும் நின்றனர் என்று முதனூல் கூறும். கோட்டு தல் - கட்டுதல், வகுத்தல், வரைதல். புலவர் - தேவர்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுள்ள ஐந்துகவிகள் - பெரும் பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும், மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியவிருத்தங்கள். (1)

2. **வீமன் துரோணனுடைய தேர்க்குதிரைகளையும் பாகனையும் அழிக்க, அப்போது அவனுடன் பொரச் சல்லியன்வர, அவ னையும்வெல்ல, அதுகண்டு துரியோதனன் பலரோடு வீமன் மேல் வந்துபொருதல்.**

ஒருபான்மா ருதிதுரோணன் மீதுற் றன்றேன்
உருதேர்சா ரதிபரிவீழ்ந் துடைய தானை
பொருதெற்று மவற்குறுகித் தோழ ! வென்மேற்
பொருகெனச்சல் லியன்மிசைபோய்ப் போர் செய் தன்றேன்
வரிசாபந் துணித்திரதம் புவிமேன் மோதி
வல்லைவென்றான் சல்லியன்பின் வாங்க நோக்கிக்
குருவேந்தன் அரசர்பலர் துணைவர் மாமன்
குழாமொடுமா ருதிமேற்போய்க் கொடும்போர் செய்தான்.

(இ-ள்) ஒருபால் - (போர்க்களத்து) ஒருபக்கத்து, மாருதி - வீமசேனன், துரோணன்மீது உற்று - துரோணசாரியன்மீது நெருங்கி, அன்னோன் - அவருடைய, உரு தேர் - அழகிய தேரினையும், சாரதி - பாகனையும், பரி - குதிரைகளையும், வீழ்ந்து உடைய - தரையில் விழுந்து மடியும்படி, தானை பொருது எற்றும் - சேனையோடு போரிட்டுத் தாக்கிவரும், அவன் குறுகி - அவனைக்கிட்டி, சல்லியன் —, தோழ - சிநேகிதனே! என்மேல் பொருக என, என்மீது போரிடுவாயாக என்று சொல்ல, மிசைபோய் - அச் சல்லியன்மீது சென்று, அன்னோன் - அவனுடைய, வரி சாபம் துணித்து - வெட்டப்பட்ட வில்லினைப்பிளந்து, இரதம் புவிமேல் மோதி - தேரினைப்பூமியின்மேல் சிதையத்தாக்கி, வல்லைவென்றான் - அதிசீக்கிரத்தில் வெற்றியுற்றான்: (ஆகவே) சல்லியன் பின்வாங்கல் நோக்கி - சல்லியன் பின்னிடுதலைக்கண்டு, குருவேந்தன் - துரியோதனன், பலர் அரசர் - பலமன்னர்களும், துணைவர் - தம்பிமார்களும், மாமன் - சகுனியும், குழாமொடு - ஆகிய இவர்கள் கூட்டத்தோடு, மாருதிமேல்போய் - வீமன்மேல் சென்று, கொடும்போர் செய்தான் - கொடிய போரினையிட்டான்; (எ. று.).

தனது மருமக்களான நகுலசகதேவர்களுக்கு இரண்டாந் தமையனான வீமனை சல்லியன் 'தோழ' என விளித்தது, போரில் தன்னொடொத்த பல பராக்கிரமமுடையவனாதலால் என்க. அன்றியும், சல்லியன் பகைவர் பக்கத்திற்சேர்ந்தும், முந்தின அன்பை மறவாமல், 'தோழ' என அழைத்தனன் என்க. வல்லை - விரைவுப் பொருளுணர்த்தும் வல் என்னும் இடைச்சொல் ஐகாரச்சாரியை பெற்றது. அவற்குறுகி - இரண்டனுருபுதொக்கது. பொருக - முன்னிலையேவல். (2)

3. **வீமன் துரியோதனனை அம்பெய்து வருத்தி, அவன் தம்பியாரைப் புண்படுத்திப்பலரையும் உயிர்வதைத்து, வானோர் பூமாரி பொழியநிற்ப, அப்போது விகர்ணன் வீமன்மேல் போரிட வருதல்.**

வலிவீம னுருத்தரவத் துவசன் மார்பில்
வடுப்படவில் வாங்கிபல வாளி யேவி
மலைகின்ற வவனிளையோ ருரத்துஞ் சோரி
வார்தரச்செய் தனேகர்தமை வானி லேற்றிச்
சிலவனிக முறிந்தகலப் பொருதான் வீரஞ்
செப்பிமலர் மழைதூவித் தேவ ரார்த்தார்

நிலைகுலைந்தெய் தரசரொடு விகன்னன் மீட்டு
நெடுங்கதையோன் மீதெதிர்ந்து நெடும்போர் செய்தான்.

(இ - ள்) வலி வீமன் உருத்து - வலிமை பொருந்திய வீமன் கோபித்து, அரவத்துவசன் மார்பில் - துரியோதனன் மார்பினில், வடுப்பட - காயத் தழும்பு உண்டாகும்படி, வில் வாங்கி - வில்லை வளைத்து, பல வாளி ஏவி - பலஅம்புகளைச்செலுத்தி, மலைகின்ற - போரிடவந்த, அவன் இளையோர் உரத்தும் - அந்தத்துரியோத னனது தம்பியர்களின் மார்பிலும், சோரி வார்தரச் செய்து - இரத்தம் பெருகச் செய்து, அநேகர்தமை - பல அரசர்களையும், வானில் ஏற்றி -வீரசுவர்க்கத்திற்செலுத்தி (கொன்று), சில அனிகம். முறிந்து அகல - சிலசேனைகள் அழிந்துபட்டு நீங்கும்படி, பொரு தான் - (வீமன்) போர்செய்தான் : (இதனைக்கண்ட) தேவர் — வீரம் செப்பி - வீமனது வீரத்தைப் புகழ்ந்து பேசி, மலர்மழை தூவி ஆர்த்தார் - பூமழை சொரிந்து (மகிழ்ச்சியால்) ஆரவாரித் தார்கள் : [இங்ஙனாக], நிலை குலைந்து எய்து அரசரொடு - நிலை கெட்டுத்திரும்புகின்ற மன்னர்களோடு, விகன்னன் - விகர்ணன், மீட்டு - மேலும், நெடும் கதையோன்மீது எதிர்ந்து - பெரிய கதாயு தத்தையுடைய வீமன்மீது எதிரிட்டு, நெடும்போர் செய்தான் - பெரியபோரைச்செய்தான்; (எ. று.)

சிலரைக்காயப்படுத்திச் சிலரைக் கொன்றனென்றபடி., விகன் னன் - விகர்ணன்; வடசொல்திரிபு : இவன் துரியோதனனது இளையதம்பியரில் ஒருவன் : இராவணன் தம்பியருள் விபீஷணன் போல நீதிகளை நன்கு உணர்ந்து நடுவுநிலைமையோடு நியாய வழியையே பேசுகிற நற்குணமுடையவன். ஆகையால் இவனை மற்றை யோரினும் பிரித்தெடுத்து இங்கே தலைமையாக்கிக் கூறினர், துரியோதனனுக்குச் சோற்றுக்கடன் கழிப்பதற்காக வீமன் மேல் பொரச் சென்றான் என அறிக. வீமனுக்குக் கதாயுதம் மயனென்னும் அசுர சிற்பியால் கொடுக்கப்பட்டது. வார்தரல் = வார்தல் : பெருகுதல் : தா - துணைவினை. (3)

4. **விகர்ணனுடைய தேர்முதலியவற்றை அபிமன்யு அழிக்க, அவ் விகர்ணன் துணையரசர், பகதத்தன், உடன்பிறந்தோர் அனை வருடன்மீட்டும் வந்து போரிட, அபிமன்யு அனைவரையும் வெல்லுதல்.**

தந்தையொடேற் றிடுவிகன்னன் தேரு மாவுஞ்
சாரதியுந் துணித்தவன்வென் றரவிற் பார்த்தன்

சந்ததிவென் றனன்முனைவிட் டிரிந்தோன் மீட்டோர்
தந்தேர்புக் கரசர்பக தத்த னோது
மைந்துடைச்சோ தரரொடுவந் தெதிர்ந்து வாளி
மழைபெய்தான் அபிமனவை மாற்றித் தன்மேல்
முந்தரசர் பின்றரவா னனேக ரேக
முரணனிக மிரியவமர் முனைவென் றனே.

(இ - ள்) தந்தையொடு - தகப்பன்முறையினனான வீமனோடு, ஏற்றிடும் - போரேற்றுநின்ற, விகன்னன் - விகர்ணனது, தேரும் - தேரினையும், மாவும் - குதிரைகளையும், சாரதியும் - பாகனையும், துணித்து - அழித்து, அவன் வென் தர-அந்த விகர்ணன் முதுகிடும் படி, வில் பார்த்தன் சந்ததி - வில்வல்ல அருச்சுனனுடைய மகனாகிய அபிமன்யு, வென்றனன் - செயித்தான் : (பிறகு) முனை விட்டு இரிந்தோன் - போர்முனையைவிட்டுப் பின்னிட்டவனாகிய விகர்ணன், மீட்டு - மறுபடியும், தன் ஓர் தேர் புக்கு - தன்னுடைய தேரொன்றிலேறிவந்து, - அரசர் - துணைமன்னர்கள், பகதத்தன் —, ஓது மைந்து உடை சோதரரொடு - சிறப்பித்துப் பேசப்படுகின்ற வலிமையையுடைய உடன்பிறந்தாரோடு, வந்து எதிர்ந்து - வந்து எதிரிட்டு, வாளிமழை பெய்தான் - அம்புமழையைச்சொரிந்தான் ; அபிமன் - அபிமன்யு, அவை மாற்றி - அந்த அம்புகளைப் பயனில வாக்கி, தன்மேல் முந்து அரசர் பின்தர - தன்மீது முன்னிட்டு வந்த மன்னர்கள் பின்னிடும்படியும், அநேகர் வான் ஏக - பல பேர்கள் வீரசுவர்க்கஞ்செல்லும்படியும் (இறக்கும்படியும்), முரண் அனிகம் இரிய-மாறுபட்டு வந்த சேனைகள் சிதைந்தோடும்படியும், அமர் முனை வென்றான் - போர்முனையில் வெற்றிபெற்றான் ; (எ. று.)

சந்ததி - வழித்தோன்றல், மகன். பகதத்தன் - பிராக்சோதிஷ புரத்தரசன். சோதரர் - உடன்பிறந்தோர். இவன் இறுதிதம்பி யாதலின், இவனது தமையன்மார்களைக்குறிக்கும் முரண் - வலிமை யெனவுமாம். முந்தரசர் பின்தர - முரணழகு காண்க. வாளிமழை - உருவகம். (4)

5. இருபக்கத்தாரும் தத்தம் பாசறைபுக, அபிமனைத்தந்தைமார் கொண்டாடித்தழுவுதல் - சூரியாஸ்தமனமும், மறுநாள் சூரி யோதயமும்.

விகனனுட றுளைந்துதிர மொழுகச் சோர்ந்து
வெருவிவரு திரளுடனே வென்கொண்
டெய்தல்
சகமதிக்குந் திதனைய னுணரா வேந்தர்
சகலரொடும் பாசறைபோய்ச் சார்ந்தான்
வைவேற்
குகனனைய வபிமனைமார் பணையா வைவர்
கொண்டாடிப் பாடிபுக்கார் குடபா லத்த
நகமணுகி மீட்டிரவை வெல்வான் தேர்மேல்
ஞாயிறெழுந் தனனுதய நாகத் தம்மா.

(இ-ள்) விகனன் உடல் துளைந்து - விகர்ணனுடைய தேகம் துளைக்கப்பட்டு, உதிரம் ஒழுக - இரத்தம் பெருக, (அதனைக்கண்டு) சோர்ந்து - தளர்ச்சியுற்று, வெருவி - பயந்து, வரு - (தன்னுடன்) வந்த, திரளுடனே - சேனைத்தொகுதியுடனே, வென்கொண்டு எய்தல் - முதுகுகாட்டித் திரும்புதலை, சகம் மதி குந்தி தனையன் உணரா - உலகம் மதிக்கும் குந்திதேவியின் மகனாகிய வீமன் அறிந்து, வேந்தர் சகலரொடும் - (தன்னுடன் வந்த) மன்னர் அனைவரோடும், பாசறை போய்ச்சார்ந்தான் - (தனது) படைவீட்டினைச் சென்றடைந்தான் : (அப்போது) ஐவர் - பாண்டவர் ஐவரும், வை வேல் குகன் அனைய அபிமனை - கூரிய வேலையேந்திய முருகனை யொத்த அபிமன்யுவை, மார்பு அணையா - மார்போடு அணைத்து, கொண்டாடி - (அவன்வீரத்தைப்) பாராட்டி, பாடி புக்கார் - பாசறையையடைந்தார்கள் : ஞாயிறு - சூரியன், குடபால் - மேற்குத் திசையில், அத்த நகம் அணுகி - அத்தமனகிரியைச்சேர்ந்து, மீட்டு- மேலும், இரவை வெல்வான் - இராத்திரியை வென்றொழிக்கும் பொருட்டு, தேர்மேல் - (தன்னுடைய ஓராழித்) தேரின்மேல், உதய நாகத்து எழுந்தனன் - உதயபர்வதத்தில் தோன்றினான் ; (எ. று.)

"அபிமன்யு வேறுதுணையில்லாமல் தானொருவனாகவே விகர்ணனை மார்புதுளைத்து உதிரம் ஒழுகச் செய்தனனென்றால், நாம் அவ்வபிமனோடு எதிர்த்து என்ன போர் செய்யமாட்டுவோம் ?" என்று சேனைத்திரள் வெருவியதென்பதாம். உணரா - உடன்பாட்டெச்சம். வை கூர்மை : உரிச்சொல் : "வையே கூர்மை" (தொல் : சொல் : உரியியல் : (91) ஐவர் - தொகைக்குறிப்பு. நகம், நாகம் - மலை, 'இரவை வெல்வான் எழுந்தனன்' என்றது - **ஏதுத்தற்குறிப் பேற்றவணி**. 'சகமதி' யென்பது குந்திக்கு அடைமொழி. (5)

ஆறும் போர்ச்சருக்கம் முற்றிற்று.

எட்டாவது

ஏழாம் போர்ச்சருக்கம்

1. இருதிறச்சேனையும் களங்குறுகி வியூகமாக வகுக்கப்பட, பாண்டியன் துரோணனுக்குத் தோற்றுப்போக, கடோற்கசன் வந்து அமர்செய்தல்.

களங்க லந்தன ரிருதி றத்தரும்
　　கண்ணன் வச்சிரமா சுணவி யூகமும்
வளங்கொள் வீடுமன் சகட வியூகமும்
　　வகுத்து ளாரிரு திறத்து மேற்றனர்
விளங்கு மாமுடி வழுதி துரோணனுல்
　　வென்கொ ளக்கடோற் கயனு மேகரித்
தளங்க ளாக்கியே மாயை யாலிபத்
　　தலைவ ரைத்தடிந் தமர்செய் தானரோ,

(இ - ள்) இருதிறத்தரும் - பாண்டவசேனையும் கௌரவசேனையும், களம் கலந்தனர் - போர்க்களத்துக்கு வந்தனர் : (அப்போது) கண்ணன் - கிருஷ்ணன், வச்சிரம் மாசுணம் வியூகமும் - உறுதியான சர்ப்பவியூகத்தையும், வளம் கொள் வீடுமன் - சேனைவளம் மிகுதியாக்கொண்ட பீஷ்மன், சகட வியூகமும் - வண்டி வடிவமான வியூகத்தையும், வகுத்துளார் - வகுத்தார்கள் : (பின்னர்) இருதிறத்தும் ஏற்றனர் - இருபக்கத்தாரும் எதிர்த்தனர் : விளங்கு மா முடி வழுதி - விளங்குகின்ற சிறந்த கிரீடத்தைத்தரித்த பாண்டியன், துரோணனுல் வென் கொள்ள - துரோணுசாரியனுல் [தோற்கடிக்கப்பட்டுப்] புறங்காட்டியோட, (அதுகண்டு) கடோற்கயனும் - கடோற்கசனும், மாயையால் - தனது மாயாசக்தியினுல், கரித் தளங்கள் ஆக்கி - யானைப்படைகளை அமைத்துக் கொண்டு, (எதிர்ப்பக்கத்துள்ள) இபத்தலைவரை தடிந்து - யானைத்தலைவர்களையழித்து, அமர்செய்தான்-போரிட்டான்; (எ-று.) அரோ - ஈற்றசை.

முதனூலில், ஏழாம்நாட்போரில் பாண்டவசேனை வச்சிரவியூகமாகவும், கௌரவசேனை மண்டலவியூகமாகவும் வகுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது, இங்குள்ளது வில்லிபாரதத்தின்படியென்க. வழுதி -பாண்டியன்.

இச்சருக்கத்திலுள்ள நான்குபாடல்களும் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (1)

2. சாத்தகி சதாயுவிடம் தோற்க, வீமன் சல்லியன்சகுனியரை வெல்ல, அருச்சுனனும் வீடுமனும் கடும்போர் புரிதல்.

சிலைகொள் சாத்தகி வலிச தாயுவால்
செருவ ழிந்துளான் பொருது சல்லியன்
வலிகொள் சௌபலன் திரளொ டோடவே
வாயு மைந்தனும் பாய்ந்து வென்றனன்
அலைகொள் சானவி மதலை தன்மிசை
யணுகி னனமர்க் கிணையி லாநரன்
மலைகொ டோளினு ரிருவ ருஞ்சிலை
வளைத்து வாளிவிட் டிளைத்தில் போர்செய்தார்.

(இ - ள்) சிலை கொள் சாத்தகி – வில்லைக்கொண்ட சாத்தகி, வலி சதாயுவால் - வலிமைகொண்ட சதாயுவினால், பொருது - போரிடப்பட்டு, செரு அழிந்து உளான் - போரில் தோற்றுப் போனான் : (அப்போது) வாயு மைந்தனும் - வீமனும், சல்லியன் - சல்லியனும், வலிகொள் சௌபலன் - வலிமைகொண்ட சகுனியும், திரளொடு ஓடவே – (தங்கள்) படைத்தொகுதிகளோடு தோற்று ஓடும்படி, பாய்ந்து வென்றனன் - (அவர்களைத்) தாக்கிச் செயித்தனன் : அலை கொள் சானவி மதலைதன் மிசை - அலைகளைக் கொண்டகங்கையின் புத்திரனாகிய வீடுமன் மேல், இணையிலா நரன் - ஒப்பில்லாத அருச்சுனன், அமர்க்கு அணுகினான் - போருக்குச்சென்றான் : மலைகொள் தோளினார் இருவரும் - மலைபோல் திண்ணிய தோள்களையுடைய இருவரும், சிலை வளைத்து - வில்லை வளைத்து, வாளி விட்டு - அம்புகளைச் செலுத்தி, இளைத்து இல் - களைப்பில்லாதபடி, போர் செய்தார் - (இடைவிடாது) போரிட்டனர் ; (எ. று.)

சதாயு - இவன் சுதாயுவின் தம்பி. இவன் சாத்தகியை வென்

ருன் என்ருர் இவ்வாசிரியர். ஆனுல் வில்லியோ சாத்தகிக்குச் சுதாயு தோற்ருனென்ருர். இது பின்னேன் கூறிய விகற்பமாகும். சானவி - ஜாஹ்நவீ : வடசொல். சன்னு (ஜஹ்நு) முனிவனது காதுகளின் வழியாக வந்ததனுல் சானவி [ஜாஹ்நவீ] என்று கங்கை ஒருபெயரைப்பெற்றது : இதனைக்கம்பர் "மகிதலத்திடைச் சன்னு வின் செவிவழி வரலால், நிகரில் சானவி யெனப்பெயர் படைத்த திந் நீத்தம்" என்று கூறியவாற்ருல் அறியலாம் : (பால : அகலி : 61) (2)

3. அருச்சுனனும் வீடுமனும் கடும்போர் புரிதல்.

ஒருவர் வெங்கணை யொருவர் மேலுரு
தொவ்வொ ரம்பினுக் கொவ்வொ ரம்புதூய்ப்
பொருதி னர்சமர் தாரு கன்குகன்
போலும் ராவணன் மாலு மென்னவங்
கிருவர் தங்கணை யெரியை யொத்தவவ்
விருவர் சேனையுஞ் சருகை யொத்துமுன்
னுரைசெய் மூவிரு பகலி லற்றதற்
குபய மும்மடங் கதிக மாய்ந்தவே.

(இ-ள்) ஒருவர் வெங்கணை ஒருவர் மேல் உருது - ஒருத்தர் தொடுத்த பாணம் மற்ருெருத்தர்மேற் படாதபடி, ஒவ்வொர் அம்பி னுக்கு ஒவ்வொர் அம்புதூய் - ஒவ்வொரு அம்புக்கும் ஒவ்வொரு எதிரம்பை (வில்லில் தொடுத்துச்) சொரிந்து, தாருகன் குகன் போலும்-தாரகாசுரனும் முருகனும் போரிட்டது போலவும், ராவணன் மாலும் என்ன - இராவணனும் திருமாலாகிய இராமபிரானும் போரிட்டது போலவும், சமர் பொருதினர் -போரினைச் செய்தார்கள் : அங்கு - அப்போது, இருவர் தம்கணை - இரண்டுபேருடைய பாணங் களும், எரியை ஒத்த - அக்கினியைப்போன்றன : அ இருவர் சேனையும் - அந்த இரண்டுபேருடைய படைகளும், சருகை ஒத்து - உலர்ந்த இலையைப் போன்று (உருமாய), முன் உரைசெய் மூவிரு பகலில் - முன்னுல் சொல்லப்பட்ட ஆறுநாட்போரில், அற்றதற்கு - அழிந்துபோனவற்றிற்கு, உபயம் மும்மடங்கு - ஆறுமடங்குசேனை கள், அதிகம் மாய்ந்த - அதிகமாகவே அழிந்துபோயின ;(எ. று.).

இப்பாடலில், முதலடி "ஒருவரெய்தவம் பொருவர் மேலுருதோ

ரொரம்பினுக்கோரொரம்பு தொட்டு ''என்றும், இரண்டாமடியிலுள்ள உவமைகள் ''தாரகனுமாமயிற் குகனுமன்றியே .... ராமராவணரு மென்னவே ''என்றும், ஈற்றடி'' ஆறுபோரினும் பட்டபேரினும் அறுமடங்குபேரன்றுபட்டதே ''என்றும் கூறிய வில்லியார் கூற்றுக் களைத் தழுவிவந்தன. (வீட்டும - ஏழாம் : 6, 8).

தாருகன் - தாரகாசுரன் ; சூரபத்மனுக்கும் சிங்கமுகனுக்கும் இளையவன் ; யானைமுகத்தோடு பிறந்தவன் : இவனோடு முருகக் கடவுளுக்குப்போர், அவ்வசுரனது இருப்பிடமான கிரௌஞ்ச கிரியினிடத்திலே நடந்தது. அதில் தாரகன் மாண்டான். குகன் - முருகக்கடவுள் ; இந்த வடசொல்லுக்கு - அஞ்ஞான இருளைப் போக்குபவனென்று பொருள் ; கு - இருள் : இது - இப்பொருள தாதலை 'குரு' என்ற சொல்லிலுங்காண்க. இனி, இச்சொல்லுக்கு - (பகைவர் படையினின்றும் தன்படையைக்) காத்துக்கொள்கிறவ னென்றுமாம்.

ராவணன் -கூவினவன் : கைலாசகிரியின்கீழ்க் கையகப்பட்டுக் கொண்டபொழுது பேராரவாரமிட்டது பற்றி, இவனுக்கு இப்பெயர் சிவபிரானால் அளிக்கப்பட்டது. கும்பகர்ணன் இறந்தபோது இவன் கதறினபோது, கம்பரும் ''பண்டைத் தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்'' என்றுர் (மாயாசனகப்படலம், 87). இனி, ராவணன்-கூச்சலிடச்செய்தவனென்றுங் கொள்ளலாம் ; தான் செய்யும் பல துன்பங்களால் உலகத்தாரை அலறிக்கதறிக் கூவச்செய்தான் இவன்.

இச்செய்யுளில், அருச்சுனனுக்கு-முருகக்கடவுளும், இராமனும் ; வீடுமனுக்கு - தாரகனும், ராவணனும் உவமையாவர், உபயம் : இரண்டு : வடசொல். (3)

4. படுகளச்சிறப்பு : சூரியாத்தமனமும் மறுநாள் சூரியோதயமும்.

சூடு சாபபற் குனன திச்சுதன்
தோள்வ லிப்புகழ்ந் தூன்கண் மாந்திபேய்
ஆடிப் பாடின வங்கை கொட்டியே
அந்த ரத்தபுள் பந்தர் செய்யவே
பாடி மேவின ரிருதி றத்தரும்
பானு மேற்கடற் ருன்ப டிந்தொளிர்

மாடு மாமலை சூழ்ந்து மற்றைநாள்
மலைதல் காணுவா னுதய மாயினான்.

(இ - ள்) சாபம் சூடு பற்குனன் - வில்லை யேந்திய அருச்சுனன், நதிச்சுதன் - வீடுமன் (இருவரது), தோள்வலி புகழ்ந்து - தோளின் வலிமையைப் பாராட்டி, பேய் - பேய்கள், ஊன் - மாமிசத்தையும், கள் - கள்ளையும். மாந்தி - உண்டு, (அதேசமயத்தில்) அந்தரத்த புள்-ஆகாயத்திலுள்ள (கழுகுமுதலிய) பறவைகள், பந்தர் செய்ய - (தமது சிறகுகளைவிரித்துப்பறந்து) பந்தல்போலச் சூழ்ந்திருப்ப, அங்கை கொட்டி - உள்ளங்கைகளைத் தட்டிக் கொண்டு, ஆடி பாடின - கூத்தாடிப் பாடலாயின : இருதிறத்தரும் - இரண்டுபக்கத்துப்படைஞரும், பாடி மேவினர் - (தத்தமது) படை வீட்டினை யடைந்தனர் : (அப்போது) பானு - சூரியனும், மேற்கடல் தான் படிந்து - மேலைக்கடலில் நீராடி, ஒளிர் - விளங்குகின்ற, மாடு - பக்கத்திலுள்ள, மா மலை சூழ்ந்து - பெரிய மேருமலையைச் சுற்றி வந்து, மற்றை நாள் - மறுநாள் [எட்டாம்நாள்], மலைதல் காணுவான் - (இருதிறத்தாரும்) போரிடுதலைப் பார்க்கும் பொருட்டு, உதயமாயினான் - (கீழ்த்திசையில்) தோன்றினான் ; (எ. று.)

புள்பந்தர் செய்தல், தசையினிடத்து நசையால். சூரியன் ஒவ்வொரு நாளும் மேருமலையைச் சுற்றிவருகிறானென்றும், [அதுபற்றி ''மாமலை சூழ்ந்து'' என்றது.] அவன் அம்மலையின் தென்புறத்தில் விளங்குங்காலம் நமக்குப்பகலும், வடபுறத்திலிருக்குங்காலம் நமக்கு இரவுமாகிறதென்றும், இவ்வாறே பகலிரவுகள் வடபுறத்திலுள்ளார்க்கு மாறுபடக்காணும் என்றும் நூற்கொள்கை. அங்கை - அகம் + கை : ''அகமுனர்ச் செவிகைவரின் இடையன கெடும்'' என்பது விதி - (நன் : மெய்யீற்றுப் : 19), ஈற்றடி பயன் தற்குறிப்பேற்றவணி. (4)

ஏழாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஒன்பதாவது

எட்டாம் போர்ச்சருக்கம்

1. இருதிறத்தாரும் சேனையை வியூகம் வகுத்தல்.

எட்டெ னும்பக லமரினுக் கிருவர் சேனையு மன்னரும்
கிட்டி னூர்களமர் வீடுமன் தூசி யூகமும் கேசவன்
வட்ட சக்கர யூகமும் வகுத்து ளாரிரு தானையும்
ஒட்டி யேற்றன வமரினுக் கொலிப்ப வாச்சிய முததி போல்.

(இ-ள்.) எட்டு எனும் பகல் - எட்டாம்நாளில், அமரினுக்கு - போர் செய்தற்கு, இருவர் சேனையும் - பாண்டவகௌரவ சேனைகளும், மன்னரும் - (துணைசெய்யவந்த) வேந்தர்களும், அமர் - போர்க்களத்தை, கிட்டினூர்கள் - நெருங்கினூர்கள் : (அப்போது) வீடுமன்—, தூசி யூகமும்-தூசியென்னும் வியூகத்தையும், கேசவன்- கிருஷ்ணன், வட்ட சக்கர யூகமும் - வட்டவடிவமான சக்கரயூகத்தையும், வகுத்துளார் - செய்தார்கள் ; (பிறகு) இரு தானையும் - இருதிறச்சேனைகளும், வாச்சியம் உததிபோல் ஒலிப்ப - போர் இசைக் கருவிகள் சமுத்திரம்போல் ஆரவாரஞ்செய்ய, அமரினுக்கு - போரிடுதற்கு, ஒட்டி ஏற்றன - சபதஞ்செய்து நின்றன ;(எ. று.)

தூசியென்ற சொல்லுக்கு - குதிரையென்று ஒருபொருள் உள்ளதனுல், 'அசுவவியூகம்' என்று ஒருவியூகம் அமைத்ததாகப்பொருள் காணலாம். எட்டாம் நாட்போரில் வீடுமன் கூர்மவியூகம் வகுத்ததாகவும், திருஷ்டத்யும்நன் சிருங்காடக (நாற்சந்தி) வியூகம் வகுத்ததாகவும் வியாசபாரதத்திலுள்ளது. உததிபோல் ஒலிப்ப - உவமையணி.

இதுமுதல் ஐந்துகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ் சீரும் மாச்சீர்களும், மற்றையவை விளச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தம். (1)

2. துரியோதனன் வீமனோடுபொரத் தம்பிமாருடன் வளைந்து கொள்ள, அவன் தம்பிமாரில் எண்மரைக் கொல்லுதல்.

தம்பி மாரொடு வீமனைத் தான்வ ளைந்துப லாசுகம்
வெம்ப ணிக்கொடி யோன்விட மேலு றக்கொதித் தாங் கவன்
உம்பர் புக்குநுஞ் சோதரற் குறவி டம்பிடித் திடுமினென்
றம்பி னால்வதைத் தெண்மரா மரசி ளைஞ்ஞரை யேவி னான்.

(இ-ள்) வெம் பணிக்கொடியோன் - கொடிய நாகக்கொடியை யுடைய துரியோதனன், தம்பிமாரொடு - தன் தம்பியருடனே, வீமனைத் தான் வளைந்து - வீமசேனனைத்தான் சூழ்ந்து கொண்டு, பல ஆசுகம்-பல அம்புகளை, விட-(அவன் மேல்) செலுத்த, (அவை) மேல் உற - தன் மீது பட, கொதித்து - மிக்க கோபங்கொண்டு, அங்கு - அவ்விடத்து, அவன் - அவ் வீமன், "உம்பர் புக்கு - வீரசுவர்க்கத்திற்குச்சென்று, (பின்பு வரும்) நும் சோதரற்கு - உம் முடைய அண்ணனாகிய துரியோதனனுக்காக, உற - அவன் தங்கும் படி, இடம் பிடித்திடுமின் என - இடம் அமைத்து வைப்பீர்களாக' என்றுகூறி, எண்மராம் அரசிளைஞ்ஞரை - எட்டுப்பேர் அரசிளந் தம்பியரை, அம்பினால் வதைத்து - (தன்) அம்பினாலே கொன்று, ஏவினான் - (அங்குச்) செலுத்தினான் ; (எ-று).

தமக்குத் தலைவனான அரசன் ஓரிடத்திற்குச் செல்லுதற்கு முன்னமே அவனைச் சேர்ந்தவர்கள் தாம் சென்று இடமமைத்தல், இயல்பு : அத்தன்மையை இங்கே வீமன் பகைவர்க்குச் சமத்கார மாகக் கூறினான். 'இடம் அமைத்திடுமின்' என்னாது 'இடம் பிடித் திடுமின்' என்றது - அப்பொழுது போரில் அளவில்லாமல் மேன்மேல் இறக்கிற வீரர்களால் சுவர்க்கம் இடம்நெருங்கியிருக்குமென்பது பற்றியென்க ; இங்ஙனம் கூறியதனால் துரியோதனனைத் தான் விரை வில் தவறாதுகொல்லுதல் உணர்த்தப்பட்டது. வதைத்துஏவினான்- **பிறிதினவிற்சியணி**. ஆசுகம் - விரைந்து செல்வது என அம்புக்குக் காரணப்பெயர். இறந்தஎண்மர் தம்பிமார் பெயர்கள் வில்லிபாரதத் தின்படி பின்வருமாறு :-சுந்தரன், விசாலக்கண்ணன், வீரவாசி, பௌதுண்டன், மகோதரன், மாகவிந்து; அபயன், ஆதித்தகேது என்பன. வியாசபாரதத்தின்படி இவர்கள் பெயர்கள் - சுநாபன், விசாலாக்ஷன், பஹ்வாசீ, பண்டிதன், மகோதரன், குண்டதாரன், அபராஜிதன், ஆதித்யகேது என்பன. (2)

3. துரியோதனன் வீடுமனிடம் சிலகூறிப் புலம்புதல்.

துள்ள மண்மிசைக் காயமுந் துணைவர் வானுற மன்னவன்
உள்ள மேயுடைந் திருகணீ ருடன னைப்பவந் தடிதொழா
வள்ளல் வீடும னோக்கியே வலிய னென்றுனை நம்பினேற்
கெள்ள லாயிட வெம்பிமா ரெண்மர் மாள்கை நன்னீதியோ.

(இ - ள்) மண்மிசை காயமும் துள்ள - தரையின் மேல் (அற்ற) உடம்பும் துடித்தெழ, துணைவர் - தம்பியர், (எண்மர்), வான் உற - வீரசுவர்க்கம் புக (இறக்க), மன்னவன் - துரியோதனன், உள்ளம் உடைந்து - மனமழிந்து, இரு கண் நீர் உடல் நனைப்ப - இரண்டு கண்களினின்றும் பெருகும் கண்ணீர் உடம்பு (முற்றும்) நனைக்க, வந்து - (வீடுமனிடம்) வந்து, அடி தொழா - பாதங்களில் பணிந்து, (பின்பு) வள்ளல் வீடுமன் நோக்கி - உதாரனான வீடுமனைப் பார்த்து, 'வலியன்' என்று உனை நம்பினேற்கு - பலமுடையவன் (நீ) என்று உன்னை நம்பியிருந்த எனக்கு, எள்ளல் ஆயிட - இகழ்ச்சியுண்டாகும்படி, எம்பிமார் எண்மர் மாள்கை - என் தம்பிமார் எட்டுப் பேர் இறத்தல், நல் நீதியோ - நல்ல முறைமையாகுமோ? (ஆகாதே) (எ. று)

தலை மேலே துள்ள மண்மிசை காயம் வீழ என்னவுமாம், நம்பினேற்கு - வினையாலணையும்பெயர். தொழா - தொழுது: உடன் பாட்டெச்சம். எள்ளல், மாள்கை - தொழிற்பெயர். "நன்னீதியே" எனவும்பாடம்; அஞ்ஞான்று, ஏகாரம் வினா. கண்ணீர் கணீர் எனக் குறுகிற்று. வீடுமனை வள்ளல் என்றது - சிறியதாய் பயந்த இரு தம்பியர்க்குத் தன் அரசும் அரசவாழ்வும் ஈந்தவனாதலின், (3)

4. இவ்வாறு சோகித்துக்கூறிய துரியோதனனுக்கு வீடுமன் கூறுவன.

என்ன வோதி யிரங்கிய விறைவ னோடுவல் வீடுமன்
முன்ன ரோதிய முதுவர்தம் மொழி தடுத்தனை சௌபலன்
கன்ன னும்பிசொற் கேட்டனை கன்னி தன்கணீர் பழுதுரு
தின்ன மென்வினை யுங்கொலோ வெனை வெறுப்பதி லென்பயன்.

(இ-ள்) என்ன ஓதி - என்று சொல்லி, இரங்கிய - வருத்தமுற்ற, இறைவனோடு - துரியோதனனோடு, வல் வீடுமன் - வலிய வீடுமன், 'முன்னர் -முன் நாளிலெல்லாம், ஓதிய-(உனக்கு நற்புத்தி) சொல்லிய, முதுவர்தம் மொழி-பெரியோர்களுடைய நல்லுபதேச வார்த்தைகளை, தடுத்தனை - (ஏற்றுக் கொள்ளாது) தடுத்துப் பேசினாய்; (அதற்கு மாறாக) சௌபலன் - சகுனி, கண்ணன்- கர்ணன், உம்பி - உன் தம்பி துச்சாதனன் (இவர்களுடைய) சொல் கேட்டனை - துர்ப் போதனைச் சொற்களைக்கேட்டு (அதன்படி) நடந்தனை; அனைத் துக்கும் மேலாக) கன்னி தன் கண்ணீர் பழுதுறுது - திரௌபதி யாகிய பத்தினியின் கண்ணீர் வீண்போகாது; இன்னம் - இனி மேலும் என் விளையும் கொல் ஓ - என்னென்ன தீங்குகள் விளையப் போவதோ ?: (ஆகவே) எனை வெறுப்பதில் என் பயன் ? - (குற்ற மற்ற) என்னை நிந்திப்பதில் என்ன பயன்? (பயனொன்றுமில்லை) (எ.று).

பெரியோர்கள் பலர்சாஸ்திரங்களிலுள்ள நீதிகளையெடுத்துச் சொல்லக் கேளாது தடுத்துப்பேசினாய்: அதனோடு இயல்பான துர்க் குணத்தைவிடாத மாமன் சகுனி, தேர்ப்பாகன் மகன் கன்னன், உன் தம்பி துச்சாதனன் இவர்கள் சொல்வதைக்கேட்டு ஒழுகினாய். மற்றும், பத்தினியாம் திரௌபதியைக் கண்ணீர் விட்டுக்கதறவைத் தாய்: அவள் சொரிந்த கண்ணீர் ஒருநாளும் வீண்போகாது. இன் னும் என்னென்ன துயரங்கள் விளையப்போவனவோ ? என்னை வெறுப்பதில் பயனென்ன ? இத்தனை அழிவுக்கும் நீயேகாரண மாவாய் என்று வீடுமன் சுட்டிக்காட்டினனென்க, 'இன்னம் என் விளையுங்கொலோ' என்றது -இன்னும் பல தீங்குகளைத்தரும் என்ற படி, உனக்கும் மரணத்தையுண்டாக்குமெனக் குறிப்பித்தவாறும். "ஏழையழுதகண்ணீர் கூரியவாளாக்கும்:" "தோற்றத்தாற் பொல் லார் துணையிலர் நல்கூர்ந்தார், மாற்றத்தாற் செற்றா ரெனவலியார் - ஆட்டியக்கால், ஆற்றா தவரழுத கண்ணீ ரவை யவர்க்குக் கூற்ற மாய் வீழ்ந்துவிடும்" "அல்லற்பட்டாற்றா தழுத கண்ணீரன்றே, செல் வத்தைத் தேய்க்கும்படை" என்பன காண்க. தடுத்தனை, கேட்டனை -முன்னிலையொருமை. இனியென்னும் இடைச்சொல் -விகாரப்பட்டு, இன் என்று ஆகி, அம் சாரியைபெற்று, இன்னம் என நிற்கும். கொல் - ஐயப்பொருளிடைச்சொல் - ஓ - வினா. (4)

5. வீடுமன் களம்புக அப்போதே கடோற்கசன் மாயையாற் பல வடிவுகொண்டு பகைஞரை யழித்தல்.

இரங்க கிற்கிலா மன்னநீ யிரங்க லின்றமர் தெவ்வரைச்
சிரங்க டள்ளுதும் அன்றெனிற் சேர்தும் விண்ணுடனண்
ணொரு

துரங்க வையமேற் சென்றனன் தோன்றி வல்லிடும் பிச்சுதன்
உரங்கொ டும்பிமே லாயிர முருக்கொ டெண்ணிலர் முருக்கினுன்.

(இ - ள்) மன்ன - துரியோதனராசனே! இரங்க கிற்கிலா நீ - இரங்குதற்கியலாத நீ (இரங்குதலின்னதென்பது அறியாத நீ), இரங்கல் - மனம் வருந்தாதே, இன்று அமர் – இன்றுசெய்யும் போரில், தெவ்வரை சிரங்கள் தள்ளுதும் – பகைவர்களின் தலைக ளைக்கொய்துவிடுவோம் : அன்று எனில் - அங்ஙனில்லையெனில், விண் சேர்தும் - வீரசுவர்க்கம் போவோம் : உடன் நண்ணு - என்னுடன் (நீயும்) வருவாய், என - என்று கூறி, துரங்க வையம் மேல் - குதிரைகள்கட்டிய தேரின் மேலேறி, சென்றனன் - போர்க் களத்திற்குச் சென்றுன் : (அப்போது) வல் இடும்பி சுதன் - பலம் பொருந்திய இடும்பியின் மகனுகிய கடோற்கசன், உரம் கொள் தும்பிமேல் தோன்றி - வலிமைகொண்ட யானையின்மேல்வந்து, ஆயிரம் உரு கொடு - (மாயையாற்) பலவடிவங்கள் கொண்டு, எண்ணிலர் - பலபகைவர்களை, முருக்கினுன் - அழித்தான் ; (எ. று.)

'இரங்ககிற்கிலா நீ' என்றவிடத்து, இரக்கம் இன்னதென்பது அறியாத அரக்கன்நீ என்பதும் தொனியாக் கொள்க "இரக்க மென் ஞெருபொருளிலாத நெஞ்சினர், அரக்கரென்பவருளார்' என்ருர் கம்பரும், தள்ளுதும், சேர்தும் - உளப்பாட்டுத்தன்மை பன்மை. நண்ணு - முன்னிலையேவல். எண்ணிலர் - பலர்பால் வினை யாலணையும்பெயர். (5)

வேறு.

6:- ஒருபுறத்தில் இராவான் பலவடிவு கொண்டுபொர, அப்போது பகாசுரன்தம்பி அலம்புசன் வீமன்மேற் பொரவர, அவனை இரா வான் புறங்கொடுக்கச் செய்தமை.

சீறியொரு புடையரவா னிகலோர் மாளத்
தென்றிசையோ னிவனெனவே செகுக்குங்காலை
ஏறணைய பகனிளவல் அரசேச டென்முன்
இகுத்தபகை வீமனைக்கொன் றிடுவ னென்னக்

கூறிபல வரக்கரொடும் அவன்மேற் பாயக்
கொதித்தரவக் கன்னிமகன் குறுகி யந்த
வீறுடைய அலம்புசன்மேல் விசிக மெண்ணில்
விட்டமர்செய் தன்னவனும் வென்தந் தானே.

(இ - ள்) ஒருபுடை - ஒருபக்கத்தில், அரவான் சீறி - இராவான் கோபங்கொண்டு, இகலோர் - பகைவர்கள், மாள - இறந்தொழிய, தென்திசையோன் இவன் என - யமனுவான் இவன் என்று சொல்லும்படி, செருக்கும் காலே - (பகைவரைக்) கொன்று வரும் போது, ஏறு அனைய பகன் இளவல் - ஆண் சிங்கம் போன்ற பகாசுரன் தம்பியாகிய அலம்புசன், அரசோடு - துரியோதனனுேடு, 'என் முன் இகுத்த பகை வீமனை, - எனக்கு முன்பிறந்த அண்ணனுகிய பகாசுரனைக்கொன்ற பகைவனுகிய வீமனை, கொன்றிடுவன் என்ன கூறி - கொல்வேன்' என்று வஞ்சினங்கூறி, பல அரக்க ரொடும் - பல அரக்கர்களோடும், அவன்மேல் பாய - அந்த வீமன்மேல் தாக்க, (அதனைக்கண்டு) அரவக்கன்னி மகன் - நாககன்னிகையாகிய உலூபி மகனுகிய இராவான், குறுகி - கிட்டி, அந்த வீறுடைய அலம்புசன் மேல் - பராக்கிரமமுடைய அலம்புசன் மீது, எண் இல் விசிகம் விட்டு - கணக்கற்ற அம்புகளைச் செலுத்தி, அமர்செய்து - போரைச் செய்ய, அன்னவனும் - அந்த அலம்புசனும், வென் தந்தான் - முதுகு கொடுத்தான்; (எ. று.).

நாககன்னிகையின் மகனுன இராவான் தலையின்மேற் படத்தோடு கூடிச் சிறிது பாம்பு வடிவம் உடையன். விசிகம்-அம்பு. வெந் தருதல் - புறமுதுகிடுதல். செய்து - செய்ய; எச்சத்திரிபு. பி - ம்: அலம்புதன்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுள்ள நான்கு கவிகள் - ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (6)

7:- அலம்புசன கருடன்வடிவுகொண்டு மீளவந்து இராவானை யழிக்க, அசுவத்தாமனும் துரோணனும் பாஞ்சாலரை வெல்ல, அபிமன்யு இராவான் இறந்தமைகேட்டுப் பலமன்னர்கெடக் கடும்போர் புரிதல்.

வென்றந்த நிருதனுமீட் டுவண ளுகி
மேவுதலா லரவானும் வெருவிக் குன்றி
ன்நிறிடவா ளோச்சியவ னிவனைக் கொன்ருன்
நிருபன்வரு தினிமகிழா நெடிதி ஞர்த்தார்
சென்றமர்செய் பாஞ்சாலர் பலரு மாளச்
சிலையெடுத்தான் மதலையொடுஞ் சினங்கொண் டாசான்
தன்துணைவன் வீழ்ந்தமைகேட் டபிமன் வெம் போர்
தருநிருபர் பலரிகுத்தான் தழல்போல் சீறி.

(இ - ள்) வென் தந்த நிருதனும் - முதுகுகாட்டிய அரக்கனுகிய அலம்புசனும், மீட்டு - மறுபடியும், உவணன் ஆகி- கருடன்வடிவு கொண்டு, மேவுதலால் - (போருக்கு) வந்தமையால், அரவானும் வெருவிட - இராவானும் பயந்து, குன்றிநின்றிட - (வலிமை) ஒடுங்கி யிருப்ப, (அப்போது) அவன் - அந்த அலம்புசன், இவனை - இந்த இராவானை, வாள் ஒச்சி -வாளைவீசி, கொன்ருன் - (அதனைக்கண்டு) நிருபன் வருதினி - துரியோதனன் படைஞர், மகிழா - மகிழ்ந்து, நெடிதின் ஆர்த்தார் - பெருத்த நீண்ட ஆரவாரஞ் 'செய்தார்கள்: (அதே சமயத்தில்) ஆசான் - துரோணுசாரியன்,சினம் கொண்டு - கோபங்கொண்டு, மதலையொடும் - தன் மைந்த அசுவத்தாமனோ டும், சென்று - போய், அமர்செய் பாஞ்சாலர்பலரும் மாள - போர் செய்கின்ற பாஞ்சாலப்படைஞர் பல பேர் இறக்கும்படி, சிலை எடுத் தான் - வில்லினை வளைத்தான் : (இஃது இங்ஙனுக) அபிமன் - அபி மன்யு, தன் துணைவன் வீழ்ந்தமை கேட்டு - தன் உடன்பிறந்த வனுகிய இராவான் இறந்தமை கேள்வியுற்று, தழல்போல் சீறி - அக்னிபோல் கொதித்தெழுந்து, வெம்போர் தரு நிருபர்பலர் - கொடியபோரைச் செய்கின்ற அரசர்கள்பலரை, இகுத்தான் - கொன் ருெழித்தான், (எ. று.).

அரக்கனுகிய அலம்புசனும் இராவானும் மாயையினுல் பலபல வடிவங்கொண்டு பலபல வகையாகப் போர் செய்து வருகையில், இராவான் மாயையால் பலபாம்புகளின் வடிவத்தையடைய, அரக் கன் மாயையால் கருடவடிவங் கொண்டு அப்பாம்புகளையழிக்கவே, இராவான் திகைப்படைந்து நின்ருன் என முதனூலிற் கூறியதையுங்

காண்க. உவணன் - கருடன், பாஞ்சால மன்னன் துருபதன், அவன் மகன் திட்டதுய்மன் முதலியோருக்கும் துரோண அசுவத்தா மர்களுக்கும் ஒருவரோடொருவர் பழமையாகவே பகைமையுள்ளது பிர சித்தமாதலின், இட்டபோரில் பாஞ்சாலசேனையின் படைவீரர்களிற் பலர் மாண்டனர் என்க. இராவான், அபிமன்யு என்ற இருவரும் அருச்சுனனது குமாரராதலால், இராவானை அபிமன்யுவின் துணைவ னென்றது. (7)

8. இராவான் இறந்ததுகேட்டு வீமன் வெகுண்டு வரக்கண்டு துரியோதனன்பலரோடும் வீமனைச்சூழ்ந்துகொள்ள, அவன் அவர்களை வலிகெடுத்துத் துரியோதனன் தம்பியரெழுவரை மாய்த்தல்.

கதைவீம னடலரவான் மடிதல் கேளா
காலாந்த ருத்திரன்போற் கனன்று சீறி
எதிருறல்கண் டகிகேது மவன்பின் னோரும்
எண்ணறுமன் னருமவன்மே லெதிர்ந்து ளிவா
புதைதரமெய் யொவ்வொன்று விடலுந் தண்டால்
போக்கியவை பலர்வீயப் பொருது மீட்டும்
விதியால்விண் ணரசிளைஞ ரெழுவ ரேக
விசிகமே வினனவரும் வீழ்ந்திட் டாரே.

(இ-ள்) கதை வீமன் - சத்ருகாதிநி என்னுங் கதாயுதத்தை யுடைய வீமன், அடல் அரவான் மடிதல் கேளா - வலிமைமிக்க இராவான் இறத்தலைக்கேட்டு, காலாந்த ருத்திரன்போல் - யுகாந்த காலத்து உருத்திர மூர்த்திபோல, கனன்று சீறி - மிகவும் கோபித்து, எதிர் உறல் கண்டு - எதிரே வருதலைப்பார்த்து, அகிகேதும் - துரி யோதனனும், அவன் பின்னோரும் - அவனது தம்பிமாரும், எண் அறு மன்னரும் - கணக்கற்ற அரசர்களும், அவன் மேல் எதிர்ந்து - அந்த வீமன்மீது எதிரிட்டுவந்து, மெய் - அவனது உடம்பில், வாளி புதைதர - அம்பு புதையும்படி, ஒவ்வொன்று விடலும் - ஒன்றுரென் ருகச் செலுத்தவும், அவை - அந்த அம்புகளை, தண்டால் போக்கி - கதாயுதத்தினால் பயனிலவாக்கி, பலர் வீயப் பொருது - பலபேர் இறக்கும்படி போரிட்டு, மீட்டும் - மறுபடியும், விதியால்- ஊழ்வினை யால், அரசு இளைஞர் எழுவர் - துரியோதனன் தம்பிமார் ஏழுபேர்,

விண் ஏக - வீரசுவர்க்கம் அடையும்படி (இறக்கும்படி), விசிகம் ஏவினன் - அம்பினை விடுத்தான் : (அதனால்) அவரும் வீழ்ந்திட்டார் - அவ் வேழுபேரும் மாண்டுபோயினார் ; (எ. று.).

வீமனுக்கு இராவானிடம் உள்ள அன்பை விளக்க ''காலாந்த ருத்திரன் போற்கனன்றுசீறி'' என்றார் ; உவமையணி. பிரளய காலத்துத்தீயினால் ருத்திரமூர்த்தி உலகனைத்தையும் சீறியழிப்பர் என்பது துணிபு. காலாந்தம் - யுகமுடிவு ; பிரளயகாலம். விண் ஏக - பிறிதினவிற்சி. இறந்த தம்பியர் எழுவர் பெயர்கள் வில்லிபாரதத்தின்படி - குண்டலபோசன், அனாதியக்கன், தீர்க்கநயனன், திம்மவாகு, குண்டலன், குண்டலதாரன், கனகத்துசன் என்பன. முதனூலின்படி பெயர்கள் - குண்டபேதன், அநாத்ருஷ்டி, தீர்க்கலோசநன், தீர்க்கபாகு, சுபாகு, வைராடன், கநகத்வஜன் என்பன. (8)

9. **அப்போது சூரியன் அத்தமிக்க, இருதிறத்தவரும் பாடிபுகுதலும், இராவான் இறந்ததற்குப் பாண்டவர் வருந்தக் கண்ணன் அவர்களைத் தேற்றுதலும், சூரியோதயமும் கூறும்.**

மாருதிமன் னவனேக்கி யனுசர் போனீ
மடியவெனி லமர்க்கடைதி வாழ வேண்டிற்
சேருதி யூரெனவவனும் புறந்தந் தான்முன்
செருவழிந்து வென்கொடுத்த சேனை யோடும்
வாருதிபா யினன்புகுந்தான் யாரும் பாடி
மனைபுகுந்தார் அரவானு மடிதற் கைவர்
சோருதலாற் றுயரொழித்தான் துளவோன் தேர்மேற்
றேன்றினன் கீழ்த்திசையிற் சுடரோ னம்மா.

(இ - ள்) மாருதி - வீமன், மன்னவன் நோக்கி-துரியோதனராசனைப் பார்த்து, அனுசர் போல் - உன் தம்பியர் (எழுவர்) போல், நீ —, மடிய எனில் - இறக்க விரும்பினால், அமர்க்கு அடைதி - போர்க்கு வருவாய் : வாழ வேண்டில் - உயிரோடு வாழ விரும்பினால், ஊர் சேருதி-அத்தினாபுரம் போய்ச் சேர்வாய், என-என்றுகூற, அவனும் - அந்தத் துரியோதனனும், முன் செரு அழிந்து - முன்னால் செய்த போரில் உடைந்து, வென் கொடுத்த - முதுகு காட்டிவந்த, சேனை

யோடும் - (தனது) படைகளோடும், புறந்தந்தான் - (தானும்) முதுகு காட்டித் திரும்பினுன் : (அப்போது) இனன் - சூரியன், வாருதிவாய் - மேற்குக் கடலிடத்து, புகுந்தான் - அத்தமித்தான் : (ஆகவே) யாரும் -(இருதிறத்தார்) அனைவரும், பாடிமனை புகுந்தார்-(தத்தமது) படை வீட்டினையடைந்தார்கள் : ஐவர் - பாண்டவர்கள், அரவானும் மடிதற்குச் சோருதலால் - இராவான் இறந்தமைக்கு வருந்துதலால், துளவோன் - திருத்துழாய் மாலையையணிந்துள்ள கிருஷ்ணன், துயர் ஒழித்தான் - அவர்கள் வருத்தத்தை (த்தேற்றிப்) போக்கினுன் :(பிறகுஇரவு கழிய) சுடரோன் -சூரியன், கீழ்திசையில்- கிழக்குத் திக்கில், தேர்மேல் தோன்றினுன் -(தன் ஓராழித்) தேரின் மேல் உதயமாயினுன். (எ. று.) - அம்மா ஈற்றசை.

துயரொழித்தான் - அன்றைக்கே தன்னைக் கொய்து பலி கொடுத்த இராவான் இதுவரையில் உயிர்வாழ்ந்திருந்ததற்கு மகிழவேண்டுவதே யொழிய, இன்றைக்கு இறந்ததற்கு வருந்தக் காரணமில்லை யென்று சொல்லித்தேற்றினுன் எனக் கொள்க. அடைதி, சேருதி - முன்னிலையேவல். துளவோன் - திருமால் : கிருஷ்ணனுக அவதரித்தான் என்றபடி. புகுந்தான் ... புகுந்தார் - சொன்னயங்காண்க. (9)

எட்டாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

பத்தாவது

ஒன்பதாம் போர்ச் சருக்கம்

வேறு.

1. **கர்ணனை நோக்கித் துரியோதனன் கூறியது.**

பின்வந்த தம்பி யுறுமாம னோடு
பெருமானு சாவி பிரதை
முன்றந்த சேயை யழையாவி ளைஞர்
முடிவெய்த லோதி முனிவன்
என்றந்தை தந்தை யிவர்வில்லெ டுத்தென்
யினிநீயெ டுக்கில் சிலைபோர்
வென்றுய்ய லாகு மெனபானு சூனு
வேந்தோடி யம்பும் வெகுளா.

(இ-ள்) பின்வந்த தம்பி - தனக்குப்பின் அடுத்தபடி தம்பியாகப் பிறந்த துச்சாதனன், உறு மாமனோடு - (தனக்குப்) பொருந்திய மாமனாகிய சகுனி இவர்களோடு, பெருமான் - துரியோதனன், உசாவி - ஆலோசித்து, பிரதை முன்தந்த சேயை - குந்திமுதலிற் பெற்ற பிள்ளையாகிய கர்ணனை, அழையா - (தன்னிடம் வரும்படி) அழைத்து, இளைஞர் முடிவு எய்தல் ஓதி -தனது தம்பியர் பதினைந்து பேர் மடிந்ததைச் சொல்லி, (மேலும்) முனிவன் - துரோணன், என் - எந்தை தந்தை - என் பாட்டனாராகிய வீடுமன், இவர் வில் எடுத்து என் ? - இவர்கள் வில்லையெடுத்துப் போர்செய்து என்னபலன் ? (தோல்விதான்) : இனி - இனிமேல், நீ சிலை எடுக்கில் - என்தோழனாகிய நீ (உனது) வில்லையெடுப்பாயானால், போர் வென்று உய்யலாகும் - யுத்தத்தில் (நாம்) வென்று உயிர் பிழைக்கலாம், என - என்று கூற, பானு சூனு - சூரியன் மகனாகிய கர்ணன், வெகுளா - கோபித்து, வேந்தோடு இயம்பும்-துரியோதனராசனோடு கூறுவான் ; (எ. று.) கர்ணன் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

'பிரதை முன்தந்தசேயை' என்றது கவிக்கூற்று. துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் கர்ணன் குந்திமகனாவன் என்பது தெரியாது. கண்ணபிரான், குந்தி, கர்ணன் இந்தமூவர்க்கும் மட்டும் இந்த விடயம் தெரியும் என்பது

நினைக. அழையா, வெகுளா - உடன்பாட்டெச்சம். இளைஞ்சர் - இளைஞர் என்பதன் போலி. முடிவெய்தல் - தொழிற்பெயர். பானு சூனு – வடமொழித்தொடர். பானு - சூரியன் : சூனு - மகன். வில்லி யார் கூறிய "பானுராசசூனுவே" (ஆதி :வாரணாவத : 61) என்றதைப்போற்றி இவ்வாசிரியர் மேற்கொண்டார் : "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோல் போற்று வம்" என்றது நன்னூல், (பொதுப்பாயிரம் : 9). இயம்பும் - செய்யு மென்முற்று ஆண்பாலுக்கு வந்தது.

இதுமுதல் நான்குகவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந் தாஞ்சீர்கள் மாங்காய்ச்சீர்களும், இரண்டு நான்கு ஆறு தேமாச் சீர்களும் ஏழாவது புளிமாச்சீரும் ஆகிய எழுசீராசிரியவிருத் தங்கள். (1)

2. கர்ணன்சொன்ன வார்த்தையை வீடுமனிடம் சொல்லும்படி துச்சாதனனை விடுத்தல்.

அன்றுற ளித்த சுதன்வாய்மை நீயும்
அறிவாய்கொல் மன்ன ! அவனே
வென்றீவ னாடு பொரவஞ்சி நிற்கின்
மேவாரை வென்று புவியான்
இன்றேய ளிப்ப னிதையங் கவற்குன்
இளையோன் உரைக்க வெனவே
சென்றேத துச்சா தனன்றாதை தாதை
சிறுமூரல் கொண்டு புகல்வான்.

(இ-ள்) 'அன்று - தேர்வீரரைத் தரம் பிரிக்கும்படி (நீ) சொன்ன அக்காலத்து, ஆறு அளித்த சுதன்- பீஷ்மனது, வாய்மை - (கூறிய) வார்த்தையை, நீயும் அறிவாய் - நீயும் தெரிந்துள்ளாய் : (ஆகை யால்) மன்னவ ! - அரசனே !, அவனே - அந்தப் பீஷ்மனே, வென்று - (போரில்) ஜெயித்து, நாடு ஈவன் - (உனக்கு) நாட்டர சாட்சியை உறுதியாக்கிக் கொடுப்பன் : (அவன்) பொர - இனி மேல் போரிட, அஞ்சி - பயந்து, நிற்கின் - (போர்க்களம் போகாது) நின்றால், (அப்போது) யான் - நானே (சென்று), இன்றே - இன் றைய தினத்திலேயே, மேவாரை - பகைவரை, வென்று - ஜெயித்து,

புவி - நாட்டினை, (நாட்டாட்சியை), அளிப்பன் - (உறுதியாக்கிக்) கொடுப்பேன் : இதை - இவ்வுறுதியை, அங்கு - அந்த வீடுமனிடத்து, அவற்கு - அவ்வீடுமனுக்கு, இளையோன் - துச்சாதனன், உரைக்க - (போய்) சொல்லட்டும், என -என்றுகூற, (அதன்படியே) துச்சாதனன் —, சென்று - (வீடுமனிடம்) போய், ஓத - சொல்ல, (அதனைக்கேட்டு) தாதை தாதை - பாட்டனாராகிய வீடுமன், சிறு மூரல்கொண்டு – புன்முறுவல்செய்து, புகல்வான் - கூறுவானாயினன் ; (எ. று.) வீடுமன்கூறியதை மேலைக்கவியிற் காண்க.

வாய்மையாவது - கர்ணனை அர்த்தராக்கியது. மூரல் கொண்டது - அவர்தம் பேதைமை நோக்கி. கொல் - அசை. ஈவன்- படர்க்கை எதிர்காலமுற்று. அளிப்பன் - தன்மையொருமை. உரைக்க- ஏவல் முற்று. (2)

3. வீடுமன் கூறியது.

அறனுற்ற வைவர் தமைவெற்றி கொண்டிவ்
வரசீவ னென்ன வறையேன்
பொறு மின்கள் நாளை யொருபோழ்து பின்பு
புவியாளு விக்கும் வலியோன்
கறுவெய்தி தெவ்வர் தமைவெல்வ னீவிர்
கடனாடு பெற்று நெடுநாள்
உறுவீர்க ளென்று விடைநல்கி கங்குல்
ஒழிகாலை பானு தொழுதே.

(இ - ள்) அறன் உற்ற ஐவர்தமை - தருமம் பொருந்திய பாண்டவர்களை, வெற்றிகொண்டு - செயித்து,இ அரசு ஈவன் என்ன - இந்த அரசாட்சியை நிலைநிறுத்திக் கொடுப்பேன் என்று, அறையேன் - உறுதிகூறமாட்டேன் : நாளை ஒரு போழ்து - நாளையொரு தினம் மட்டும், பொறுமின்கள் - பொறுத்துக் கொண்டிருங்கள் : பின்பு - பின்னர், புவியாளுவிக்கும் வலியோன் - உங்களைநாட்டினை யாளும்படியியக்கும் பலம் பொருந்தி, கர்ணன், கறு எய்தி - கோபங்கொண்டு, தெவ்வர்தமை - பகைவர்களாகிய பாண்டவ சேனைகளை, வெல்வன் - செயிப்பான் : நீவிர் - நீங்கள், கடல்நாடு பெற்று - கடல்சூழ்ந்த இந்தவுலகாட்சியைப்பெற்று, நெடுநாள் உறு

வீர்கள் - அநேக வருடங்கள் ஆண்டுவரலாம், என்று - என்று (உறுத்தும்படி) சொல்லி, விடை நல்கி - விடைகொடுத்து, கங்குல் ஒழி காலை - இராப்போது நீங்கியபோது, பானு தொழுது - சூரியனை நமஸ்கரித்து ; (எ, று.) ''சென்று .... யூக நிறுவா நின்றான்'' என மேலைக்கவியிலியையும்.

துரியோதனனைப் புவியாளச்செய்பவனே கர்ணன்போலும் எனக்குத்திக்காட்டியபடி வெல்வன், நாடு உறுவீர்கள்-பிறகுறிப்பு. பொறுமின்கள் - முன்னிலைப்பன்மைவினைமுற்று, போழ்து - பொழுது என்பதன் மரூஉ. கடல் + நாடு = கடனாடு : ',ல ள ....மெலிமேவின் னணவும்'' என்பது விதி (நன் : மெய்யீற்றுப் : 24). (3)

4:- இருதிறத்துச்சேனையும் அணிவகுக்கப்படல்.

சென்றாக வத்தி ரட்டானை தன்னை
செய்பத்திர யூக நிறுவா
நின்றான்க வுந்தி தருமைந்தர் போரில்
நிலையெய்த நின்ற துளவோன்
வன்றானை தன்னை யுயர்பத்ம ராக
வரையூக மாக வனைய।
ஒன்றாய வூழி கடல்போலி யங்கள்
ஒலிசெய்ய மூண்ட தமரே.

(இ - ள்) சென்று - போய், ஆகவம் - யுத்தபூமியில், திரள் - திரண்டு சேர்ந்த, தானை தன்னை - கௌரவப் படைகளை, செய்பத்திர யூகம் நிறுவா - ஸர்வதோபத்ரமென்னும் படைவகுப்பாக நிறுவி, நின்றான் - வீடுமன் (களத்து) நின்றான் : (அப்போது) கவுந்தி தரு மைந்தர் - குந்திபெற்ற பாண்டவர்கள், போரில் நிலை எய்த - போர்க்களத்தில் வந்துசேர, நின்ற - அங்கேயிருந்த, துளவோன் - கிருஷ்ணன், வன் தானைதன்னை - வலிய சேனைகளை, உயர் பத்மராக வரை யூகமாக வனைய - சிறந்த பத்மராகமணி தோன்றுதற்கிடனான மலைவடிவான வியூகமாக (அசலவியூகமாக) வகுக்க, (பிறகு) ஊழி கடல் போல் - பிரளயகாலத்துச்சமுத்திரம் போல், இயங்கள் - (போர்) வாச்சியங்கள், ஒன்றாய - ஒருசேர, ஒலி செய்ய - பேரொலியையெழுப்ப, அமர் மூண்டது - போர் தொடங்கலாயிற்று ; (எ. று.)

செய்பத்திரம் - ஸர்வதோபத்ரம் என்ற வடசொல் திரிந்து சிதைந்தது : சருப்பதோபத்ரம் எனவும் வரும், அதாவது - நாற் புறத்திலும் எங்குநின்றுபார்த்தாலும் ஒரேவிதமாகக்காட்சிதோன்றும் படி சேனையை வகுத்த வியூகம், இது சித்திரகவிகளில் ஒன்று கவும் வழங்கும். இனி மூன்றுமடியில் "பத்மராக வரையூகமாக" என்பதற்கு. ராகம் - (தம்மவர்க்கு) ஆசையை (வளர்ப்பதும்), வரை – மலைபோல (எதற்கு சலியாததுமாகவுள்ள), பத்மயூகமாக எனவும் உரைக்கலாம். பத்மவியூகமாவது - தாமரை வடிவினதாக நிறுவப்பட்ட வியூகம். திரள் - தானை - திரட்டானை : "ணளமுன் டணவும் ஆகும் தநக்க ளாயுங்காலே" என்பதுவிதி (நன் : மெய்யீற் றுப் : 34) நிறுவா - நிறுவி : உடன்பாட்டெச்சம். கவுந்தி - குந்தி யென்பதுமருவியது. வன் + தானை = வன்றானை "னலமுன் றனவும் .... தநக்கள் ஆயுங்காலே" (நன் : மெய்யீற்றுப் : 34). ஈற்றடி - உவமையணி. (4)

வேறு.

5. வீமனுடன் பொரவந்து அலம்புசன் ஒருமலையை எறிதல்.

மண்டலமு மெண்டிசையு வானுமதி ரெய்த
மண்டிவரு வீமன்மிசை வந்தமர் விளைத்தே
திண்டிறல லம்புதன்வில் சிந்தலின் வெகுண்டோர்
கொண்டறவ ழோங்கறனைக் கொண்டெதிரெறிந்தான்.

(இ - ள்) மண் தலமும்-பூமியிடங்களும், எண் திசையும்-எட்டுத் திக்குக்களும், வானும் - ஆகாயமும், அதிர் எய்த-அதிர்ச்சியடைந்து குலையும்படி, மண்டிவரும் வீமன்மிசை -நெருங்கிவரும் வீமன்மீது, திண் திறல் அலம்புதன் - மிக்க வலிமையுடைய அலம்புசன், வந்து - எதிர்த்து வந்து, அமர் விளைத்து - போரைச்செய்து, வில் சிந்தலின் , (அவ்வீமன் தன்மேல்) வில்லினின்று அம்புகளைச் சொரிந்ததால், வெகுண்டு - கோபங்கொண்டு, கொண்டல் தவழ் ஓர் ஓங்கல்தனை - மேகங்கள் தவழ்கின்ற (உயர்ச்சியினையுடைய) ஒருமலையை, கொண்டு- தன்கையிலெடுத்துக்கொண்டு, எதிர் எறிந்தான்-அவ்வீம னெதிரே வீசினான் ; (எ.று).

வில் - அம்புக்கு இலக்கணை. அம்புசிந்தினவன் வீமன் ; மலை யெறிந்தவன் அலம்புசன். ஓங்கல் - மலைக்குக் காரணக்குறி.

இதுமுதல்மூன்றுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச் சீரும், மற்றைமூன்றும் விளங்காய்ச்சீர்களுமாகிய அளவடிநான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (5)

6. வீமன் அலம்புசனைக்கொன்று மற்றும்பல அரக்கர்களையும் கொல்லுதல்.

விட்டவரை வெட்டியொரு வேல்கொடவ னாவிப்
பட்டிடவி யற்றியெதிர் பட்டிடும ரக்கர்
மட்டில்பல மன்னரொடு வாகினியு மாளத்
தொட்டுகதை வெஞ்சமர்தொ டங்கிபொரு போதில்.

(இ - ள்) விட்ட வரை வெட்டி - (அலம்புசன்) வீசியமலையைத் துண்டித்து, ஒரு வேல்கொடு - ஒரு வேலாயுதத்தைக்கொண்டு, அவன் ஆவி பட்டிட இயற்றி - அவனுயிரையொழித்து, எதிர் பட்டிடும் அரக்கர் -தனக்குஎதிரே வந்த அரக்கர்களும், மட்டில் பல மன்னரொடு வாகினியும் - அளவற்ற பல அரசர்களோடு (அவர்களது) சேனைகளும், மாள - இறந்தொழிய, கதை தொட்டு - கதாயுதத்தையெடுத்து, வெம் சமர் தொடங்கி -கொடிய போரை மேற்கொண்டு, பொரு போதில் - சண்டையிடுஞ்சமயத்தில் ;(எ.று) ; "அருச்சுனனை சூழா "என மேலைக்கவியில் தொடரும்.

வேலினாலே அலம்புசனையும் கதாயுதத்தாலே அரக்கர் மன்னர் வாகினி இவைகளையும் வீமன் அழித்தான் என்றபடி. (6)

7:- அருச்சுனனம்பாற் பலர்மடியவும் வீமன் கதையால் படைகள் பின்னிடவும் கண்ட வீடுமன் போர்செய்தல்.

அருச்சுனனை யேழுபதி னாயிரவர் சூழா
செருச்செய்தவ னேவிறலை சிந்தினவெவ் வாயு
தருச்சுதனெ டுங்கதையி னானைகளு டைந்தே
வரச்சிலைந திச்சுதன்வ ளைத்தமர்ம லைந்தான்.

(இ - ள்) அருச்சுனனை —, ஏழுபதினாயிரவர் - எழுபதினாயிரம் வீரர்கள், சூழா - சூழ்ந்துகொண்டு, செரு செய்து - போரிலேயிட்டு, அவன் ஏவில்-அவனது அம்பினால், தலை சிந்தின- தலைகள்சிதறப்

பெற்றனர் : வெம் வாயு தரு சுதன் -பலத்தகாற்றின் பிள்ளையாகிய (பலத்த) வீமனது, நெடுங்கதையில் -நீண்டகதாயுதத்திருல், தானை கள் உடைந்து வர- படைகள்கெட்டுப்பின்னிட்டு வர, (அதனைக் கண்ட) நதிச்சுதன் - கங்காபுத்திரனுகிய வீடுமன், சிலை வளைத்து- (தனது) வில்லை வளைத்து, அமர் மலைந்தான் - போரிடலானுன் ; (எ.று).

சூழா - சூழ்ந்து : உடன்பாட்டெச்சம் ஏவில் + தலை = ஏவிறலை ; க்தையில் + தானை = கதையிருனை,'' ணலமுன் றனவும் ஆகும் தநக்களாயுங்காலே'' என்பது விதி (நன் : மெய் : 34) (7)

வேறு.

8:- வீடுமனோடு தருமன் மலைந்து வில்லிழந்து நிற்க, சிகண்டி திட்டத்துய்மனுடன் பாஞ்சாலரெலாம் வீடுமனைச் சூழ்ந்துகொளல்.

மந்தா கினிநந் தனன்றொடையால்
மடியப் படைகள் மறலிமகன்
வந்தாங் கவனோ டெதிர்ந்துசமர்
மலைந்தே வளைக்கும் வரிசிலைபோய்ச்
சிந்தா குலமுற் றிடற்காணுச்
சிகண்டி திட்டத் துய்மனுடன்
முந்தா வமர்பாஞ் சாலரெலாம்
முனைவீ டுமனை மொய்த்தனரால்.

(இ - ள்) மந்தாகினி நந்தனன் தொடையால் - கங்கையின் புத்திரனுகியவீடுமனின் அம்புகளால், படைகள் மடிய - (தனது)சேனை கள் இறக்கவே, மறலிமகன் - யமனுக்குமகனுகிய தருமன், வந்து - (போரிட) வந்து, ஆங்கு - அவ்விடத்து, அவனோடு எதிர்ந்து - அவ் வீடுமனோடு எதிரிட்டு, சமர்மலைந்து - போரினைச்செய்து, வளைக்கும் வரிசிலை போய் -வளைத்த கட்டமைந்தவில்லையும்இழந்து, சிந்தாகுலம் உற்றிடல் காணு - மனத்துயரம் அடைந்திருத்தலைக்கண்டு, சிகண்டி- திட்டத்துய்மனுடன்-திருஷ்டத்யும்நனொடு, முந்தா -முந்திக்கொண்டு வர, அமர் பாஞ்சாலர் எலாம் - போருக்குவந்த பாஞ்சாலதேச மன் னர்களெல்லாம், முனை - போர்முனையில், வீடுமனை —, மொய்த்தனர்- நெருங்கிச் சூழ்ந்துகொண்டார்கள் ; (எ.று) ஆல் - ஈற்றசை.

மறவிமகன் - நான்கனுருபு தொக்கது. உற்றிடல்-தொழிற்பெயர், காணு - கண்டு: உடன்பாட்டெச்சம். முதனூலில் சிகண்டியைத் திட்டத்துய்மனது தமையனென்று கூறியுள்ளது.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள நான்கு கவிகள்- மூன்று ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள். (8)

9:- பாஞ்சாலர் பலர்மடிய, வீடுமன் சிகண்டியின் கணைக்கு இலக்காக, துச்சாதனன் போருக்குவரல்.

தகையாச் செருச்செய் பாஞ்சாலர்
தம்மோ டனிகந் தடிந்துபுர
நகையா னென நின் றமர்செய்யா
நவில்சந் தனுவி னந்தனனேர்
பகையாஞ் சிகண்டி யேற்றலின்விற்
பாட்டன் குனியாப் பரிசுணர்ந்து
தொகைவா கினியோ டவன்மிசைப்போய்த்
துச்சா தனன்போர் தொடங்கினனே.

(இ - ள்) தகையா - (வீடுமனைத்) தடுத்து, செரு செய் - போரைச்செய்த, பாஞ்சாலர்தம்மோடு - பாஞ்சால மன்னர்களோடு, அனிகம் தடிந்து - அவர்கள் சேனைகளையும் அழித்து, புரம் நகையான் என - திரிபுரங்களைத் தன் புன்சிரிப்பினால் எரித்த சிவபிரான் என்று சொல்லும்படி, நின்று - வீறுதோன்றநின்று, அமர் செய்யா - போரினைச்செய்து, நவில் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற, சந்தனுவின் நந்தனன் - சந்தனு மகாராசனின் மகனாகிய வீடுமனுக்கு, நேர் - எதிராக, பகையாம் சிகண்டி - (அவனுக்குப்) பகைவனாயிருந்து வரும் சிகண்டி, ஏற்றலின் - எதிர்த்தலின்,, துச்சாதனன் —, பாட்டன் - (தனக்குப்) பிதாமகனாகிய வீடுமன் வில் குனியா பரிசு உணர்ந்து - தமது வில்லை (க்கீழேயெறிந்து) வளைக்காத தன்மையினையறிந்து, தொகை வாகினியோடு - தொகுதிபட்ட தன் சேனைகளோடு, அவன் மிசை போய் - அந்தச் சிகண்டியின்மேலே சென்று, போர் தொடங்கினன் - போர்செய்ய ஆரம்பித்தான் ; (எ. று.).

முதலிற் பெண்ணாகப்பிறந்து பின்பு யக்ஷனது அருளால் ஆண் தன்மையைப் பெற்ற சிகண்டியுடன் வீடுமன் 'போர்செய்ய வில்லை வளைக்கவில்லையென்க. தகையா - தகைந்து, தடுத்து ; உடன்பாட் டெச்சம். புரநகையான் - சிவபிரான். பகையாம் சிகண்டி - ஜன்ம விரோதியான சிகண்டி. குனியா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெய ரெச்சம். (9)

10:- சிகண்டியின் வில் கொடி தேர் இவற்றைத்துச்சாதனன் சிதைக்க,அதுகண்டு அருச்சுனன் போர்க்குவர. அதுகண்டு வீடுமன் அவனோடுஅமர்செய்தல்.

சிலையுங் கொடியுந் தேரும்போய்
சிகண்டி யிளைப்பத் திரளுடைய
மலையுந் துச்சா தனன்முறிய
மன்ன ரனேக ருடன்றானை
இலகின் மடிந்து விழவிசயன்
இகல்போர் புரிய வீடுமன்மீட்
டலைவுண் டனிகம் வரல்காணு
வாற்றல் சிலைகொண் டமர்செய்தான்.

(இ - ள்) சிலையும் கொடியும் தேரும் போய் -(தனது) வில்லும் கொடியும் தேரும் சிதைந்து, சிகண்டி இளைப்ப - சிகண்டி சோர் வடையவும், திரள் உடைய - (அவனது) சேனைசிதறவும், மலையும் துச்சாதனன் – போரிட்டதுச்சாதனன், முறிய - தோற்றுப்போகும் படியும், அனேகர் மன்னருடன் - பல அரசர்களோடு, தானை - அவர் களது சேனைகளும், இலகு இல் மடிந்து விழ – அளவில்லாதபடி இறந்து விழும்படியும், விசயன் - அருச்சுனன், இகல் போர் புரிய - வலிய போரினைச் செய்ய, (அதுகண்டு) வீடுமன் —, மீட்டு - மறுபடி யும், அனிகம் - (அருச்சுனனது) சேனை, அலை உண்டு – அலைக்கப் பெற்று, வரல் காணு ஆற்றல் - [தன்மேல்] வருதலைச் செய்யாத வகையால், சிலை கொண்டு அமர் செய்தான் - வில்லைக் கையிலெடுத் துப்போரிட்டான் ; (எ. று.)

இளைப்ப, உடைய, முறிய, விழ, புரிய வீடுமன் மீட்டு அமர் செய்தான் எனமுடியும். உடைதல் - பின்னிடுதல். இலகு -அளவு, காணு - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். (10)

11:- சதானிகன் வந்தெதிர்த்து உயிரொழிந்தமை கூறும்-மறுநாள் சூரியோதயமாதல்.

மெய்யோ னனிக முறிந்திடலால்
விராடற் கிளைய சதானிகன்விற்
கையோர்ந் தவரோ டெய்திபல
. கடும்போர் செய்து கங்கைமகன்
எய்யோ ரேவற் சிரமிழந்தான்
யாரும் பாடி யில்லடைந்தார்
வெய்யோன் குடபா லவன்றலைபோல்
வீழ்ந்தான் குணக்கின் மீண்டெழுந்தான்.

(இ - ள்) மெய்யோன் - தருமனது, அனிகம் - சேனை, முறிந்திடலால் - தோற்றுப் போனதால், (அதுகண்டு) விராடற்கு இளைய சதானிகன் - விராடராசனுக்குத் தம்பியாகிய சதாநீகன் என்பவன், வில் - (தமது) விற்களை, கை ஓர்ந்தவரோடு - கையில் தெரிந்த அம்புகளோடு ஏந்திய மன்னர்களோடு, எய்தி - (களத்திற்கு) வந்து, பல கடும்போர் செய்து - பல மிக்கபோர்களையிட்டு, (இறுதியில்) கங்கை மகன் எய் ஓர் ஏவால் - வீடுமன் செலுத்திய ஒரு அம்பினால், சிரம் இழந்தான் - தலையறுபட்டு இறந்தான் : (அதேசமயத்தில்) வெய்யோன்-சூரியன், குடபால் - மேற்குத்திசையில், அவன் தலைபோல் - அந்தச்சதாநீகன் தலை (வீழ்ந்தது) போல, வீழ்ந்தான் - அத்தமித்தான் : (அப்போது) யாரும் - இருதிறத்தார் அனைவரும், பாடி இல் - (தத்தமது) படைவீட்டினை, அடைந்தார் - போய்ச்சேர்ந்தார்கள் : (மறுநாள் சூரியன்) குணக்கில் - கிழக்கு திசையில், மீண்டு எழுந்தான் - மறுபடியும் உதயமாயினான்; (எ. று.)

அவன்தலைபோல் என்றவிடத்து - தலை துணிபட்டு விழுகையில் கழன்று சிதறிவிழுந்த அச்சதாநீகனது கிரீடம்போல எனினுமாம் : தலை - கிரீடத்துக்கு இலக்கணை. "தேரோனும் இற்றுத்தெறித்த மகுடமென வீழ்ந்தான் புணரிக்கிடையந்தோ" என்றார் வில்லியும், (ஒன்பதாம் போர் : 38) ஓர்தல் - ஆராய்தல் : அம்புகளைத் தெரிந்தெடுத்தல், தலைபோல் வீழ்ந்தான் - சமயோசித உவமை. குடபால், பால் - ஏழனுருபு. (11)

ஒன்பதாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதினோராவது

பத்தாம் போர்ச் சருக்கம்.

வேறு.

1. தருமனும் வீடுமனும் முந்திய வியூகமாகவே சேனையை அணி வகுத்தல்.

காலை பானு கைகு வித்துக் கடலின் றானை நாலொடும்
வேலை போல பணைக றங்க வெங்க ளத்தி லெய்தியே
சீலன் வீடு மன்னு மாலுஞ் செய்து ளார்கள் முன்னர் நாட்
போல யூக மின்று மன்னர் போரி யற்று பொழுதிலே.

(இ-ள்) காலை பானு கை குவித்து - காலையில் சூரியநமஸ்காரஞ் செய்து கைகூப்பி வணங்கி, கடலின் தானை நாலொடும் - கடல் போற் பரந்துள்ள சதுரங்க சேனையோடும், வேலை போல பணை கறங்க - சமுத்திரம்போலப் போர்வாச்சியங்கள் முழங்க, வெம் களத்தில் எய்தி - கொடிய போர்க்களத்திற்கு வந்து, சீலன் வீடுமனும் - நற்குணவானான பீஷ்மனும், மாலும் - ஸ்ரீகிருஷ்ணனும், முன்னர் நாள்போல - முன் ஒன்பதாம் நாள்செய்ததுபோல, இன்று- இன்று பத்தாம் நாளிலும், யூகம் செய்துளார்கள் - வியூகத்தை- வகுத்தார்கள் : (பின்னர்) மன்னர் - அரசர்கள், போர் - போரை, இயற்று - செய்கின்ற, பொழுதில் - சமயத்தில் ; (எ. று.). ஏ - ஈற்றசை.

இன்றைய நாளிலும் தருமன் பதுமவியூகமாகவும், வீடுமன் சருவ தோபத்திரவியூகமாகவும் தத்தம் படைகளை வகுத்தனரென்க. காலை சூரியனைக் கைகுவித்தலாவது - சந்தியாவந்தனம் முதலியன முடித் தல். கடலின், இன் - உவமவுருபு. வீடுமன்னும் - னகரம் மிகுதல். நால் தானை - ரதகஜதுரகபதாதிகள்.

இதுமுதல் நான்குகவிகள் - ஈற்றுச்சீரொன்று விளச்சீரும் மற்றவை மாச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. கிருஷ்ணன் இன்று வீடுமனை விழச்செய் என்று அருச்சுனனிடம் கூற, அவன் வீரவாதமாகக் கூறுதல்.

விரத சீல னின்று வீழ வெம்போர் செய்ய வேண்டுமென்
றிரத மூரு மாலு ரைப்ப விந்த்ர சூனு புகலுவான்
வரத யாவ ரெனினு மென்மேல் வரிறு ணிப்ப னின்றிது
சரத மென்று தாதை தாதை தனையெ திர்ந்து நின்றனன்.

(இ-ள்) விரதசீலன் - பிரமசரியவிரதம் மேற்கொண்ட வீடுமன், இன்று - இன்றைய பத்தாம்நாள், வீழ - இறக்கும்படி, வெம்போர் செய்யவேண்டும் என்று - கொடியபோரை (நீ) செய்யவேண்டு மென்று, இரதம் ஊரும் மால் உரைப்ப - தேரைச் செலுத்தும் சாரதி யாகிய கிருஷ்ணன் கூற, இந்த்ர சூனு - (அதற்கு) இந்திரன் மக னாகிய அருச்சுனன், புகலுவான் - கூறுபவனானான் : வரத ! - மேலோனே ! யாவர் எனினும் - எவராயிருந்தாலும், என்மேல் வரில்- என்மீது போரிட வருவாராயின், துணிப்பன் - வெட்டிக்கொல்லு வேன் : இன்று - இன்றையதினம், இது - இப்போதுயான் சொன்னது, சரதம் - நிச்சயம், என்று - என்று (வீரவாதம்) பேசி, தாதை தாதை தனை - பாட்டனாராகிய வீடுமனை, எதிர்ந்து நின்ற னன் - எதிரிட்டு நின்றான் ; (எ. று.).

விரதசீலன் - தேவவிரதன் என்று ஒருபெயர் படைத்த வீடுமன். 'யாவரெனினும்' என்ற விடத்து - ''எந்தையாக துணைவராக தனய ராக வெந்தைதன், தந்தையாக நீயுரைக்கில் யாரையுந் தறிப்பன் யான்'' என்ற வில்லிபாரதம் நினைக. (பத்தாம் : 10) வரில் + துணிப் பன் = வரிறுணிப்பன் : ''னலமுன்றனவும்'' என்பது விதி. (நன்; மெய் : 34). (2)

3:- அருச்சுனனோடு மன்னரும் தன்மீது அம்புகளைச்சொரிய வீடுமன் தளர்ந்தும் அந்த அம்புகளை விலக்குதல்.

பார்த்த னோடு தானை மன்னர் பலரு மொன்றி வந்துமேல்
தூர்த்த வாளி மெய்கு ளிப்பச் சோர்ந்து தூய வீடுமன்
வேர்த்து பற்ப றுன்னி மித்தமேவல் கண்டும் வெருவலன்
ஆர்த்து மீது வருச ரங்க ளற்று வீழ மாற்றியே.

(இ - ள்) பார்த்தனோடு - அருச்சுனனோடு, தானை மன்னர் பலரும் - (தத்தம்) சேனைகளோடுவந்த அரசர்கள் பலரும், ஒன்றி வந்து - ஒருசேரப்பொருந்திவந்து, மேல் - தன்மீது, தூர்த்த வாளி - சொரிந்த அம்புகள், மெய் குளிப்ப - உடம்புமுழுவதிலும் தைத்து மூட, தூய வீடுமன் - புனிதனாகிய பீஷ்மன், சோர்ந்து - தளர்ந்து போய், வேர்த்து - உடல் வேர்வை சொரிய, பல் பல் - பலப்பல, துன்னிமித்தம் மேவல் கண்டும் - தீக்குறிகள் பல நிகழ்தலைப்பார்த்தும், வெருவலன் - (சிறிதும்) அஞ்சாதவனாய், ஆர்த்து - ஆரவாரஞ் செய்து, மீது வரு சரங்கள் - தன்மேல் வந்துவீழ்ந்த அம்புகள், அற்று வீழ -பயனற்றுப்போய்த் தரையில் விழும்படி, மாற்றி - அவைகளை விலக்கி ; (எ.று.) ''அமர்செயா'' என மேலைக்கவியிலியையும்.

வேர்வை-சோர்வினால் ஏற்பட்டது. நிமித்தம் -பின்வரும்பயனை முன்னே தெரிவிக்குங் குறி. அது - துர்நிமித்தம் என்றும், சந்நிமித்தம் என்றும் இருவகைப்படும். துர்நிமித்தம் - தீ நிமித்தம் : பின்வரும் தீமையைத் தெரிவிக்குங்குறி. உதாரணமாக,ஆடவர்க்கு இடக்கண் இடத்தோள் இவை துடித்தல் முதலியன. வீடுமன் வெருவலனாயது உலக வாழ்க்கையில் பற்று அற்றதனாலும், உயர்ந்த மறுமைக் கதியை அடையும் உவப்பினாலும் என்க. கண்டும், உம்மை உயர்வுசிறப்பு. வெருவலன் - முற்றெச்சம். (3)

4. மாற்றரசர் இறப்ப வீடுமன் போரிட, சல்லியன் முதலியோர் வீடுமனுக்கு உதவியாக வருதல்.

உருத்தெ திர்ந்து வந்த மன்ன ருள்ள னேக மன்னர்விற்
றரித்த கையு முடியு மற்று தாமி றப்ப வமர்செயா
விருத்த னுக்கு மத்ரனாதி வேந்தர் தேசி கோத்தமர்
வருத்த மாறு மாறு சீறி வந்து போர்தொ டங்கினார்.

(இ-ள்) உருத்து - கோபித்து, எதிர்ந்து வந்த மன்னருள் - எதிரிட்டுவந்த அரசர்களுள், அநேக மன்னர் - பல அரசர்கள், வில் தரித்த கையும் - வில்லைப்பிடித்த கைகளும், முடியும் - தலையும், அற்று - துண்டிக்கப்பட்டு, தாம் இறப்ப - தாங்கள் உயிரிழக்கும்படி, அமர் செயா - போரினைச்செய்த, விருத்தனுக்கு - (யாவரினும்) மூத்தவனான வீடுமனுக்கு, மத்ரன் ஆதி வேந்தர் - மத்திர தேசத்தரசனாகிய சல்லியன் முதலிய அரசர்கள், தேசி கோத்து - பெரிய குதிரைகளைத் (தமது) தேரிற்பூட்டி, அமர் வருத்தம் ஆறு மாறு சீறி வந்து - (வீடுமனுக்குப்) போரிலேற்பட்டதளர்ச்சித் துன்பம் தணியு

மாறு (பகைவர்மேல்) கோபித்து வந்து, போர் தொடங்கினூர் - யுத்தத்தை யாரம்பித்தார்கள் ; (எ. று.).

விருத்தன் - வ்ருத்தன் : வடசொல்; கிழவன். செயா - செய்யும் ; உடன்பாட்டுப் பெயரெச்சம். தேசி - பெரிய குதிரை : "தேசிநடை கொள்ளிற் பலம்பரவும்" (பதார்த்த குணசிந்தாமணி. 1294) (4)

வேறு.

5. **அருச்சுனன் பகைவரைத்தடுத்தபோது, வீமன் கதைகொண்டு வீரச்செயல் புரிதல்.**

மானடவு தேர்நரனை யாதவனை வந்திபம்வ
ளைந்தெனவ ளைந்த னர்தமை
வானமழை மானவிடு கோலிறகை போதுவரு
மாருதியும் வன்க தைகொளா
ஆனையென மீறியடர் வார்முதுகு தந்திடவ
டித்திரத மானை பரியாள்
மேனிமிர வீசுதிரள் பந்தெனவெ றிந்துபொரு
வீரவினை யாடல் செயவே.

(இ-ள்) மால் நடவு தேர் நரனை - ஸ்ரீ கிருஷ்ணன் (சாரதியாய்ச்) செலுத்துகின்ற தேரிலுள்ள அருச்சுனனையும், யாதவனை - கிருஷ்ணனையும், இபம் வந்து வளைந்தென - யானைகள்வந்து சூழ்ந்து கொண்டது போல, வளைந்தனர்தமை - சூழ்ந்துகொண்ட பகை மன்னர்களை, (அருச்சுனன்) வான மழை மான - மேகம் சொரிகின்ற மழைத்தாரைகளை யொப்ப, கோலில் தகை போது - அம்புகளால் தடுத்துநிறுத்தியபோது, வரு - (அங்கு) வந்த, மாருதியும் - வீமனும், வன்கதை கொளா - வலிய கதாயுதத்தைக் கைக்கொண்டு, ஆனை என மீறி அடர்வார் - யானைகளென்னும்படி (நிறுத்திய எல்லை) மீறி தாக்கவரும் மன்னர்கள், முதுகு தந்திட - புறங்காட்டியோடும்படி, அடித்து - (அந்தக்கதையால்) மோதியடித்து, இரதம் ஆனை பரி ஆள் மேல் - ரதகஜதுரகபதாதிகளின்மீது, நிமிர வீசு திரள் பந்து என - ஓடும்படி வீசிய பந்துகளின் தொகுதியென்னுபடி, எறிந்து - (பலஅடிகள்) அடித்து, பொரு வீர விளையாடல் செய - போரில் வீரச் செயல்களை எளிதாகச்செய்ய ; (எ. று.) "தேர்கதிபடத்திரள்" என மேலைக்கவியில் தொடரும்.

வளைந்தென, மழைமான, ஆனையென, பந்தென - உவமைகள். இரதமானபரியாள் - உம்மைத்தொகை. வளைந்தனர், அடர்வார் - வினையாலணையும்பெயர். கொளா - உடன்பாட்டுவினையெச்சம்.

இதுமுதல் ஏழுகவிகள் - பெரும்பாலும் முதலைந்துசீரும் விளங் காய்ச்சீர்களும், ஆறுவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீரும் ஆகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரியவிருத் தங்கள். (5)

6. துரியோதனன் கட்டளையால் ஐந்துலட்சம்வீரர் வீமனையெதிர்க்க, துச்சாதனனும் வந்து போரிடல்.

சதாகதிசு தன்கையில தேர்கதிப டத்திரட
ராபதிவெ குண்டு விடவே
மதாசலநி கர்த்தவலி யைந்துநூ ருயிரவர்
வந்தமர்வி ளைப்ப வபிமன்
பிதாவவ ரடற்சிலைக ளொண்முடிக ளற்றுடல்பி
ளந்திடவி யற்ற லுணரா
நிதானமொடு மைவரைவெல் வேனெனமி
னுடை களை
நிருபனிளை யோன மர்செய்தான்.

(இ - ள்) சதாகதி சுதன் கையில்-வாயுபுத்திரனாகிய வீமன்கையி னால், திரள்-பகைவரது சேனைத்தொகுதி, அதேர்கதிபட-அந்தத் தேர்கள் பட்டகதியை அடைய(சிதறிப்போக), (அதனைக்கண்ட) தராபதி - அரசனாகிய துரியோதனன், வெகுண்டு - கோபித்து, விட - அனுப்ப, மதாசலம் நிகர்த்த வலி ஐந்துநூருயிரவர் - மதங் கொண்டயானைகளையொத்த வலிமைபடைத்த ஐந்துலக்ஷம் வீரர் கள், வந்து - (களத்திற்கு) வந்து, அமர் விளைப்ப - போரினைச் செய்ய, (அப்போது) அபிமன் பிதா - அபிமன்யுவுக்குத் தந்தை யாகிய அருச்சுனன், அவர் அடல் சிலைகள் - அந்த வீரர்களின் பலத்தவிற்களையும், ஒண் முடிகள் - ஒளி வீசுகின்ற கிரீடங்களையும், அற்று - அறுத்துத்தள்ளி, உடல் பிளந்திட - அவர்களது தேகங்கள் துண்டுபட்டுப்போக, இயற்றல் - [போரினைச்] செய்தலை, உணரா - அறிந்து, மின் ஆடை களை நிருபன் இளையோன் - திரௌபதியினது துகிலை யுரிந்த துரியோதனனின் தம்பியாகிய துச்சாதனன், நிதான

மொடும் - மெதுவாக, ஐவரை வெல்வேன் என - பாண்டவர்களைச் செயிப்பேன் என்று (வீரம்பேசி), அமர்செய்தான் - போரிட்டான்; (எ. று.)

சதாகதி - வாயு: எப்போதும் சஞ்சரிப்பது என்பதுபற்றிவந்த காரணக்குறி. அ- சுட்டு: முன்செய்யுளில் வந்த தேரழிவைக் குறித்து வந்தது. திரள் + தராபதி = திரடராபதி: "லள வேற்று மையில் றடவும் வலிவரின்" என்பது விதி (நன்: மெய்: 24) மத + அசலம் = மதாசலம். தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர். இயற்றல் - தொழிற்பெயர். உணரா - உடன்பாட்டெச்சம். மின் - மின்னல்போன்ருளுக்கு உவமவாகுபெயர். கிளைஇளையோன் என இயையும். நிதானமாக வெல்வேன் என்றது உறுதியின்மை பற்றியென்க. தராபதி - வடசொற்ருெடர். அபிமன் பிதா - மகன் வீரம்பற்றித் தந்தையைச் சிறப்பித்தபடியென்க. (6)

7. வீமார்ச்சுனர் பொர யாவரும் முதுகிட்டிரிய, வீடுமன் தருமன் படையைக் கடுமையாக எதிர்த்தல்.

அன்னவனொ டெண்ணில்பல மன்னவர ருஞ்சமர
ழிந்துமுது கிட்டி ரியவே
வின்னரனொ டுங்கதைய வன்பொருத போதுவலி
வீடுமன்ந மக்கி றுதிநாள்
என்னமன துன்னிவில்வ ணக்கிவித மானபல
வேவுகள்தெ ரிந்து தவியே
வன்னியையெ திர்த்தசரு கென்னவற மன்படைகள்
மாண்டிடவி மைப்பில் பொருதான்.

(இ - ள்) அன்னவனொடு - அந்தத் துச்சாதனனோடு, எண் இல் பல மன்னவர் - கணக்கற்ற பல அரசர்கள், அரும் சமர் அழிந்து - அரியபோரிலே உறுதிகெட்டு, முதுகிட்டு இரியவே - புறங்காட்டி யோடிடவே, கதையவன் வில் நரனொடும் பொருத போது - வீமன் வில் விசயனுடன் சேர்ந்து போரிட்ட போது, வலி வீடுமன் - பலம் பொருந்தியிருந்த பீஷ்மன், 'நமக்கு இறுதி நாள்' என்ன மன்னது உன்னி - நமக்குஇன்றையதினம் (போர்முடித்தற்குக்) கடைசிநாளா கும் என்று மனத்தில் நினைத்து, வில் வணக்கி - (தனது) வில்லை வளைத்து, பல விதமான ஏவுகள் தெரிந்து - பலவகைப்பட்ட அம்பு

களையாராய்ந்தெடுத்து, உதவி - செலுத்தி, வன்னியை எதிர்த்த சருகு என்ன - நெருப்பினை நெருங்கின உலர்ந்தஇலைகளென்னும் படி, அறம் மன் படைகள் - தருமனது சேனைகள், மாண்டிட - மடியும்படி, இமைப்பில் பொருதான் - நொடியினிற் போரிட்டழித் தான் ; (எ. று.)

தனக்கு அழிவுகாலம் அருகிலிருத்தலால், அதற்குமுன் தனது போர்த்திறம் முழுவதையும் காட்டக் கருதினனென்பார் "நமக்கு இறுதிநாள் என்ன உன்னி" என்றார். ஈற்றடியில் வந்துள்ள உவமை - உருமாறியழிதற்கு என்க :உவமையணி. (7)

8. **அருச்சுனன் சிகண்டியை முன்னிட்டுக் கொண்டு போர்தொடங் கக்கண்டவீடுமன் வில்லைப் போகட்டுநிற்க, அப்போது துச்சா தனன்வந்து சிகண்டியை வெல்லுதல்.**

கங்கைமக னுந்தியக டுங்கணையி னிற்படைக
ழிந்தொழிதல் கண்டு வெகுளா
அங்கவன்மு னஞ்சிலைசி கண்டிபொர வுய்த்தடல்அ
ருச்சுனனெ திர்ந்தி டவவன்
செங்கைவி லொழிந்தனன டும்பகழி சிந்தியசி
கண்டியிர தங்கு னிவில்போய்ப்
பங்கமுற மன்னிளவல் வென்றிடலும் வன்னிசிலை
பற்றுபுவு டற்றி விசிகம்.

(இ-ள்) கங்கை மகன் – வீடுமன், உந்திய கடும் கணையினில் - செலுத்திய கொடிய அம்புகளினால், படை கழிந்து ஒழிதல்கண்டு – (தனது) சேனைகள் களம்விட்டுப் போதல்கண்டு, வெகுளா - கோபித்து, அடல் அருச்சுனன் – வலிய அருச்சுனன், அங்கு - அவ் விடத்து (அப்போது), அவன் முனம் சிலை சிகண்டி பொர உய்த்து - அந்த வீடுமன் முன்னே வில்லோடு சிகண்டியைப் போரிடச் செலுத்தி, எதிர்ந்திட - தானும் வீடுமனை எதிர்த்துப்போக, அவன் - அவ்வீடுமன், செங்கை வில் ஒழிந்தனன் - (தனது) செவ்வியகையிற் பிடித்த வில்லைப் போகட்டுநின்றான் : (அப்போது) மன் இளவல் - துச்சாதனன், அடும் பகழி சிந்திய சிகண்டி - (வீடுமனைக்) கொல்ல அம்புவிடுத்த சிகண்டியை, இரதம் குனி வில் போய் பங்கமுற வென் றிடலும் - (அவனது) தேர் வளைத்த வில் இவைகளையிழந்து வெட்க

முறும்படி செயித்திடவும், வன்னி - பிரமசாரியாகிய வீடுமன், சிலை பற்றுபு - தனது வில்லை (மீளவெடுத்துப்) பற்றி, விசிகம் உடற்றி - அம்புகளைச்செலுத்திவருத்தி ; (எ. று.). "அரத்தமயமாக்குதலும்" என மேலைக்கவியில் தொடரும்.

சிகண்டியை முனம் உய்த்தது - அவனைக்கண்டதும் வீடுமன் ஆயுதமொழிந்து நிற்பன் என்பதுபற்றி மன் இளவல் - அரசன் தம்பி : துச்சாதனன், வெகுளா - உடன்பாட்டெச்சம். பற்றுபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (8)

9. **வீடுமன் கிருஷ்ணனது திருமேனியும் புண்படும்படி சரம் விடுதலும், அருச்சுனன் சிகண்டியை முன்னிட்டுவைத்துத்தான் அம்புகளால் வீடுமனை ஊறுபடுத்த அவன் அருச்சுனன்திறத்திற்கு மகிழ்தல்.**

அறந்திகழ வந்தநர நாரணர்க றுத்தமெய்ய
ரத்தமய மாக்கு தலுமுன்
முறிந்தகல்சி கண்டிதனை மீளவிச யன்கொடுமு
னைந்தமர்பு ரிந்தி டமணந்
துறந்தவன்ம றந்தமர்சி கண்டிகணை வென்னிடைது
தைந்திடந ரன்க ணையுரந்
திறந்திடம றந்தனையொ ழிந்துவிச யன்புரிதி
றங்கொலிது தென்று மகிழா.

(இ - ள்) அறம் திகழவந்த நரநாரணர் - தருமத்தைவிளங்கச் செய்ய அவதரித்த அருச்சுனனும் கிருஷ்ணனும், கறுத்த மெய் அரத்தம் மயமாக்குதலும்-கருநிறம் பொருந்தியதங்களது உடலங்களை சிவப்புநிறமாகும்படி இரத்தமயமாக ஊறுபடுத்தவும், விசயன் - அருச்சுனன், முன் முறிந்து அகல் சிகண்டிதனை - முன்பு கெட்டு அகன்றுபோன சிகண்டியை, மீள கொடு - திரும்பவும் கொண்டு வந்து (முன்நிறுத்தி) முனைந்து அமர் புரிந்திட - ஊக்கங்கொண்டு போரைச்செய்திட, (அப்போது) மணம் துறந்தவன் - விவாகத்தைச்(செய்துகொள்ளாது) விடுத்த வீடுமன், அமர் மறந்து - போரினைக் கைவிட்டு, சிகண்டி கணைவென்னிடை துதைந்திட - சிகண்டிவிடுத்த அம்புகள் தமது முதுகில் பதியும்படி படவும், நரன்

கணை - அருச்சுனனது அம்புகள், உரம் திறந்திட - மார்பைப் பிளக்கவும், மறம் தனை ஒழிந்து - வீரமாகப்போரிடுதலைநீத்து, விசயன் புரி திறம் கொல் இஃது என்று - அருச்சுனன் செய்த சாமர்த்தியம் போலும் இது என்றுபாராட்டி, மகிழா -மகிழ்ந்து ; (எ. று.) " ... கூறி" என மேலைக்கவியில் தொடரும்.

நரன்கணைமார்பில் ஊடுருவிப் பிளக்கும்படி தொடுத்ததைப் பெருஞ்சிறப்பெனப்பாராட்டினுன் வீடுமன் என்க.மணம்துறந்தவன்-பிரமசரிய விரதம் மேற்கொண்ட வீடுமன் : கொலிஃ - ஆய்தம் அலகு பெற்றது. மகிழா - உடன்பாட்டெச்சம். (9)

10. வீடுமன் துரியோதனன் தம்பிமாரை 'உங்களால் இங்கு ஒன்றுஞ்செய்யலாகாது : இனிமேல் ஆகவேண்டுவதை அண்ணனுெடுஉசாவியறிவீர்' என்றுகூறி,அம்பாகிய அணையில் சாய்ந்து கிடப்பத் தேவர்கள மலர்மாரிபொழிதல்.

மேவலர்க ளம்பின்மெலி வாயினமி டங்குறுகி
வேந்தனொ டுசாவி மலைவீர்
ஆவதினி யொன்றுமிலை யாண்மைகெடு மென்றுநதி
யாடனைய னங்க ருகுசேர்
காவலனி ளைஞரொடு கூறியரி நாமமிகு
காதலொடு மோதி யுடலார்
ஏவணைகி டப்பவுயர் மாகர்கள்ம கிழ்ந்துமிசை
யிர்மலர்கள் நூவி னர்களே.

(இ - ள்)' மேவலர்கள் அம்பின் - பகைவரது அம்பு பட்டு ஊறுசெய்ததால், மெலிவு ஆயினம் - தளர்ச்சியடைந்து வலியிழந் தேன் : இடம் குறுகி - நுமதுபாசறைக்குப் போய், வேந்தனுெடு உசாவி - துரியோதனராசனுேடு ஆலோசித்து, மலைவீர் - போர் செய்யமுற்படுவீர் : இனி - இனிமேல் இங்கு, ஆவது ஒன்றும் இலை - உங்களால் (எனதுமெலிவு போக்குதற்குச்) செய்யவேண்டிய தக்கவழி ஒன்றும் இல்லை : ஆண்மை கெடும் - (உங்கள்) பராக்கி ரமம்தான் அழிந்துபோகும், என்று —, நதியாள் தனையன் - கங்காபுத்திரனுகிய வீடுமன், அங்கு - அவ்விடத்து, அருகு சேர் - (தன்) அருகிற் பொருந்திய, காவலன் இளைஞரொடு - துரியோ தனன் தம்பிமார்களோடு, கூறி - சொல்லி, (பின்பு) அரி நாமம்

மிகு காதலொடும் ஓதி - நாராயண நாமத்தைமிக்கபக்திசிரத்தை யொடு செபித்து, உடல் - (தனது) உடம்போடு,ஏ ஆர் அணை கிடப்ப - அம்புகள் மிகுதியாகப்பொருந்திய படுக்கையிலே சாய்ந்து கிடக்க, (அக் கிடக்கைகண்ட) உயர் மாகர்கள் - மேலான தேவர் கள், மகிழ்ந்து - சந்தோஷித்து, மிசை - அவ்வீடுமன் மீது, ஈர் மலர் கள் தூவினர்கள் - குளிர்ந்த மலர்களைச் சொரிந்தார்கள் ; (எ. று.).

வீடுமனுக்கு உதவியாகப் போர்செய்யவந்த துரியோதனன் தம்பிமாரை நோக்கி வீடுமன் "இனி நீங்கள் எனக்கு உதவிசெய்து பொருதலிற் பயனில்லை : நான் இன்று அழிவது நிச்சயம் : இனிச் செய்ய வேண்டுவதைப் பற்றி உங்கள் தமையனோடு ஆலோசித்துச் செய்யுங்கள் : இப்பொழுது அருச்சுனனையெதிர்த்து வீணாய் வலிமைகெடாதிர்" என்று அறிவுகூறினான்.

தன் மார்பில்தைத்து முதுகின்வழி புறப்பட்டுநிற்கும் அம்பு களின்மேல் விழுந்திட்டனனென்பது "உடலார் ஏவணைகிடப்ப" என்பதன்கருத்து, அம்பு அணை - சரதல்பம். அரிநாமம் ஓதியது - முக்தியளிக்குமாதலின். மெலிவாயினம் - தன்மையொருமை. மலைவீர் - முன்னிலைப் பன்மை. (10)

11. வீடுமன் பாதத்தைவணங்கி இருதிறத்தாரும் புலம்பியழ வீடுமன் அவர்களுக்குத் தேற்றரவு கூறுதல்.

நாகநழு சோதியென வேயிரதம் விட்டவனி
நண்ணியொரு வாவ மெனவே
யாகமுறு மம்பையணை யாகவமர் வீடுமனை
யாங்கிரு திறத்த ரனுகா
கோகொவென வேயவன கோகனக பாதமிசை
கூவியழ வேமு துவனுஞ்
சோகமுற லேனெனது சோர்வுமினி தே தொடர்கொள்
தொல்வினையும் வெல்ல லரிதே.

(இ - ள்) நாகம் நழு சோதி என - வானிலிருந்து நழுவி விழு கின்ற நட்சத்திரம் போல, இரதம் விட்டு - தேரினை நீத்து, அவனி நண்ணி - பூமியிலிறங்கி, ஒரு ஆவம் என - ஒரு அம்பறுத்தூணி

(விழுந்தது) என்னும்படி, ஆகம் உறு அம்பை அணையாக - (தனது) உடம்பிலே தைத்துப்பொருந்தியுள்ள அம்புகளையே படுக்கையாக, அமர் - விரும்பிக்கிடக்கின்ற, வீடுமனை, அங்கு - அப்போது அவரிருந்தவிடத்து, இரு திறத்தர் அனுகா - இருபக்கத்துப்படையுளாரும் கிட்டி, அவன கோகனகம் பாதம் மிசை - அவனுடைய செந்தாமரைபோன்ற திருவடிமேல் (சிரம்வைத்து) வணங்கி, கோ கோவென கூவி அழ - கோவெனப்பலமுறைக்கதறிப்புலம்ப, (அதுகண்டு) முதுவனும் - வயதுமுதிர்ந்தவனாகிய வீடுமனும், ''சோகம் உறல் ஏன் - (நீங்கள்) அழுதுதுன்புறுவானேன்'' : எனது சோர்வும் இனிது - எனது மெலிவும் (எனக்கு)இனிமையானதே:(மேலும்)தொடர்கொள் தொல் வினையும் - (நம்மைத்)தொடர்ந்துவருகின்ற பழைய ஊழ்வினையையும், வெல்லல் அரிது - (கடந்து) செயித்தல் என்பது கூடாததாகும் ; (எ. று.)

ஆவம் - அம்பருத்தூணி, அம்புப்புட்டில். அம்பருத்தூணியில் பலஅம்புகள் நெருங்கிச்செறிந்து இருத்தல்போல, வீடுமன் உடம்பிலும் பலஅம்புகள் நெருங்கிச்செறிந்திருந்தன.அவற்றையே படுக்கையாகவிரும்பினுன் வீடுமன். அமர்தல் - விரும்புதல், பகைவரம்பால் போரிற்புண்பட்டு வீழ்தல் வீரர்களுக்குச்சிறப்பாதலாலும், அதுவும் பலபந்துக்களது முன்னிலையில் வீழ்ந்து இறத்தல் யாவர்க்கும் சிறப்பாதலாலும் '' அமர் வீடுமன்' என்றது. கோகோ என்பது 'கோகொ'' எனக்குறுகிற்று, கோகனகம் - செந்தாமரை. கோகனக பாதம் - உவமைத்தொகை. கோகனகம் - கோகநதமென்பதன் திரிபு : இதற்கு - சக்கரவாகப்பறவைகள் தன்னிடத்து ஒலிக்கப்பெறுவதென்றும், கோகமென்னும் நதியினிடத்தே முதலில் தோன்றியதென்றும் பொருள். அவன,அ - ஆறும் வேற்றுமை விரி. வள்ளுவரும் ''வினைப்பகை வீயாது பின்சென்றடும்'' என்றார். நாகம் நழு சோதி - Meteors போன்றவையெனலாம். (11)

வேறு.

12. வீடுமன் துரியோதனனுக்கு இதம் உரைத்தல்.

இன்பே திதுகா றமரி லின்னுஞ் செய்யத் துணியில்
துன்பே யெய்தும் அதனுற் சூதும் வாதும் விட்டே
அன்பா யொன்றி நீவிர் அரசாண் டுறுமி னென்றே
மன்பால் கருணை வைத்தே வகுத்தா னின்ப முகுத்தான்.

(இ - ள்) இதுகாறு அமரில் இன்புஏ - இதுவரைப்போரில் [பொதுவாக] மகிழ்ச்சியே எனலாம் : இன்னும் செய்யத் துணியில் - இனி மேலும் போரிடத் துணிவோமாயின், துன்பு ஏ எய்தும் - துயரமே விளையும் : அதனால் —, நீவிர் - நீங்கள், சூதும் வாதும் விட்டு - வஞ்சனையும் சர்ச்சைசெய்தலும் விடுத்து, அன்பாய் ஒன்றி - அன்போடு மனம்பொருந்தி, அரசாண்டு உறுமின் - அரசாட்சிசெய்துவாருங்கள், ,என்று —, மன் பால் கருணை வைத்து, - துரியோதனராசனிடத்துக் கிருபைவைத்து, இன்பம் உகுத்தான் - சிற்றின்பத்தைவிரும்பாது துறந்தவனாகிய வீடுமன், வகுத்தான் - கூறியருளினான் ; (எ. று)

வீடுமன் இவ்வார்த்தை சொல்லும் பொழுது பத்தாம்நாள் சூரியாஸ்தமனகாலமாகும். அரசாண்டுறுமின் - முன்னிலைவியங் கோள், ஈற்றடியில் பிராசம் காண்க.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள எட்டுக்கவிகள் - எல்லாச் சீரும் மாச்சீராகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறு சீராசிரியவிருத்தங்கள். (12)

13. வீடுமன் தன்சிரசைத்தாழாது உயரும்படிசெய்யத் துரியோதனனைச் சொல்லுதல்.

பைந்தா ரரசங் கிசையாப் படுவே னமர்செய் தென்றான்
கொந்தார் குழலார் போகங் கொள்ளான் மெள்ள நகையா
மைந்தா ! ஊழின் முறையே மதியாய் வந்த தென்றன்
கந்தா ழாம லுயரக் கடிதாற் றிடுதி யென்றான்.

(இ - ள்) பைந்தரர் அரசு - நந்தியாவட்டமாலையையுடைய துரியோதனன், அங்கு இசையா — அப்போது சம்மதியாமல், அமர் செய்து படுவேன் என்றான் - போரிட்டு மடிவேன் என்று (தன் உறுதி) கூறினான் : (அதுகேட்டு) கொந்து ஆர் குழலார் போகம் கொள்ளான் - தொகுதிப்பட்ட கூந்தலையுடைய மகளிரின் இன்பத்தை நுகராத (பிரமசரியங்காத்த) வீடுமன், மெள்ள நகையா - மெதுவாகச்சிரித்து, மைந்தா ! - மகனே ! ஊழின் முறையே - விதியின்படியே, மதியாய் வந்தது - (உனக்குப்) புத்திசெல்கின்றது : (அது கிடப்ப) என்தன் - என்னுடைய, கம் தாழாமல் உயர - தலை தாழ்ந்துபோகாமல் உயரமாகவிருப்ப. கடிது ஆற்றிடுதி - சீக்கிரமாகச்செய்வாய், என்றான் - என்றுசொன்னான்; (எ. று.)

நந்தியாவட்டமாலை (வலம்புரித்தார்) துரியோதனனுக்குரியது, இசையா - எதிர்மறை வினையெச்சம். கொந்து - பூங்கொத்து எனினுமாம். கொள்ளான் - வினையாலணையும்பெயர். "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படூஉம்"என்றது புறமும். கம் - தலை "தலைக்குஉயரஞ்செய்வாய்"என்றான் வீடுமன். கடிது - விரைவுகுறிக்கும் இடைச்சொல். ஆற்றிடுதி - முன்னிலையேவல். நகைத்தது அவனது அறிவின்மைநோக்கி. (13)

14. அருச்சுனன் வீடுமன் சிரசைத் தாழாது உயரும்படி செய்தல்.

அதுகேட் டன்னோன் மென்பஞ் சணைகள் நல்க மறுத்திம்
மதிகொண் டமர்வென் றிடுவாய் மதியில் லாயென் றிந்த்ரன்
சுதனோ டோத வன்னான் தூயோன் சென்னி தாழா
இதுபோல் வாளி யதனால் விரைவி லுயரச் செய்தான்.

(இ - ள்) அது கேட்டு - (வீடுமன்,) சொன்னதைக்கேட்டு, அன்னோன் - அந்தத் துரியோதனன், மெல் பஞ்சணைகள் நல்க - மென்மையான பஞ்சினாலாகிய தலையணைகளைக்கொடுக்க, மறுத்து - (அந்த வீடுமன்) ஏற்க மறுத்து, "இ மதி கொண்டு - இந்தப் புத்தியைக்கொண்டு, மதியில்லாய் - சமயோசித புத்தியில்லாதவனே ! அமர் வென்றிடுவாய் ? - போரிலே வெல்லப்போகிறாயா ?, என்று - என்று கடிந்து, (பிறகு அருகிலிருந்த) இந்த்ரன் சுதனோடு ஓத - இந்திரன் மகனாகிய அருச்சுனனோடு சொல்ல, அன்னான் - அந்த அருச்சுனன், தூயோன் - புனிதனாகிய வீடுமனது, சென்னி - தலை, தாழா - தாழ்ந்திராதபடி, வாளி அதனால் இது போல் - அம்புகளாலேயே தலையணைபோல் செய்து, விரைவில் உயரச் செய்தான் - சீக்கிரமாகத் தலைக்கு உயரஞ்செய்தான் ; (எ. று.).

அம்புப்படுக்கைக்கேற்ப அம்புத்தலையணை யீவதேயன்றிப்பஞ்சுத்தலையணை கொணர்ந்த பேதைமைநோக்கி"மதியில்லாய்" என்று விளித்தது. வென்றிடுவாய்-என்பது வினா:வென்றிடுவாயாஎன்றபடி. அருச்சுனன் மீண்டும் மூன்று அம்புகளைத் தொடுத்து வீடுமன் தலையை உயர்த்தினான் என முதனூல் கூறும். (14)

15:- உத்தராயணகாலம் வருமளவும் வீடுமன் தன்னுயிரை விடாதுவைத்திருக்க எண்ணும்போது, கர்ணன் அவனருகு வந்து தன்னை மன்னிக்க வேண்டுதல்.

வடபா லருக்க னுறுநாள் வானஞ் சேர்வா னெண்ணி
அடுகூர் வாளி யணைமே லமர்வான் பால்வந் தையா !
கடையே னுணரா துன்னைக் கழறும் புன்சொ லெல்லாம்
விடுவா யென்று கன்னன் வீழ்ந்தே தாழ்ந்தா னடிமேல்.

(இ - ள்) வடபால் அருக்கன் உறு நாள்-வடபுறத்தைச் சூரியன் அடையும்நாளில் [உத்தராயணம்வரும்போது], வானம் சேர்வான் எண்ணி - மேலுலகத்தையடையநிச்சயித்து, அடுகூர் வாளி அணை மேல் - கொல்லுந்தன்மையுள்ள கூரிய அம்புகளாலாகிய படுக்கை யின்மேல், அமர்வான்பால் -கிடந்தவனுகிய வீடுமனிடத்து, கன்னன் வந்து - கர்ணன் வந்து, "ஐயா!- பெரியோனே ! கடையேன் - சிறி யேனுகிய நான், உணராது - அறிவில்லாமல், (அறியாமையினுல்), உன்னை - பல்வகையிலும் சான்ருேனுகிய உன்னை, கழறும், புன்சொல் எல்லாம் - கூறிய இழிசொற்களையெல்லாம், விடுவாய் - மறந்து என்னை மன்னிப்பாய்,என்று-என்று பிரார்த்தித்து,அடிமேல், வீழ்ந்து தாழ்ந்தான் - (அவ்வீடுமன்) பாதங்களில் விழுந்து வணங்கினுன்,' (எ. று.)

(ஆடிமாசம் முதல் மார்கழிமாசம் வரையிலும் தக்ஷிணுயனமாகிய ஆறுமாசம் தேவர்களுக்கு இரவு ; தைமாசம் முதல் ஆனிமாசம்வரை யிலும் உத்தராயணமாகிய ஆறுமாசம் அவர்களுக்குப் பகல் : ஆக, மனித மானத்தால் ஒரு வருஷம் தேவமானத்தால் ஒரு நாளாம்) சூரியன் வடபுறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்குங்காலம் உத்தரா யணம் ; தென்புறமாகச் சஞ்சரிக்குங்காலம் தக்ஷிணுயனம். தேவ மானத்தால் தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணுயனத்தில் இறந்தவர் களுக்கு நற்கதியில்லையென்றும், உயர்கதிபெறுபவர் உத்தராயணத் திலே இறப்பரென்றும் நூற்கொள்கையாதலால், வீடுமன் தக்ஷிணு யனத்தில் உயிர்விடாமல் உத்தராயணத்தை எதிர்நோக்கி உயிர்த் திருப்பவனுனுன் : வேண்டியபொழுது உயிர்விடும்படி வீடுமனுக்குத் தந்தையால் வரம் கொடுக்கப்பட்டிருந்ததென்றும் நூல்கள்கூறும். "கழறும் புன்சொல் எல்லாம்" என்றதால் தான் கூறியவையனைத்தும் புன்மையானவையே என்பதைக் கர்ணன் உணர்ந்தான் என்பது தெரிகின்றது. சேர்வான் - வானீற்று வினையெச்சம். அமர்வான்- வினையாலணையும்பெயர். பால் - ஏழனுருபு. விடுவாய் - முன்னிலை வியங்கோள். (15).

16. கன்னனை வேந்தனைக்காக்கச்சொல்லி வீடுமன்அனைவர்க்கும் இனிமைபேசி விடையீதல்.

கன்னு சமரி னின்னைக் கடக்க வல்லா ருண்டோ ?
நின்னு லரசன் வாழ்வா னின்ருன் இனிகா வென்று
மன்னுங் குற்ருர்க் கினிமை பேசிப் பாடி புகுமென்
றன்று னுறவங் கியாரு மமரும் பாடி புக்கார்.

(இ - ள்) "கன்னு ! - கர்ணனே ! சமரில் - யுத்தத்தில், நின்னைக் கடக்க வல்லார் உண்டோ ?-உன்னைச்செயிக்கவல்லவரும் உளரோ? (இல்லை): நின்னுல்-உன் உதவியினுல்,அரசன் வாழ்வான் நின்ருன் - துரியோதனன் உயிர்வாழ நினைத்துள்ளான் : இனி கா-இனிமேல் அவனைக் காப்பாயாக, என்று என்று - [இதமாகச்] சொல்லி, (பின்னர்) மன் - (சேனைத்) தலைவனுகிய வீடுமன், ஆங்குஉற்ருர்க்கு - அவ்விடத்துத்தன்னருகிலுள்ளவரனைவர்க்கும், இனிமை பேசி - இனியவார்த்தைகளைச்சொல்லி, பாடி புகும் என்று - [நுங்களது] பாசறைக்குச்செல்லுங்கள் என்று விடைகொடுத்து அனுப்பி, அன்றுன் உற-அவ்வீடுமன்அம்புப்படுக்கையிலேயே படுத்திருப்ப,அங்கு-அப்போது யாரும் - எல்லாரும், அமரும் பாடி புக்கார் - (தாங்கள்) தங்கியிருந்த பாசறைகளுக்குச் சென்ருர்கள் ; (எ. று.)

கடத்தல் - வெல்லுதல். உண்டோ, ஓ - வினு எதிர்மறை. வாழ்வான் நின்ருன் - முற்றெச்சம். கா - முன்னிலையேவல் ,உற்ருர்- பலர்பால் வினையாலணையும்பெயர். இனிமை - இனிய வார்த்தைகளுக்குப் பண்பாகுபெயர். புகும் - ஏவற்பன்மைவினைமுற்று. (16)

17. வீடுமன் வீழ்ந்தமை கேட்டுத் திருதராட்டிரன் அழுதல்.

பட்டா னுந்தை யென்னுப் பகர்நீ யெந்தைக் கென்று
விட்டா னகர்சஞ் சயனை வேந்த னவன்சென் ருேத
மட்டார் மாலை மார்பன் மனையா ளோடும் வீழ்ந்தே
வெட்டா வீழ்ந்த மரம்போல் விறலோன் திறஞ்சொற் றழுதான்.

(இ - ள்) (பிறகு) வேந்தன் - துரியோதனன், சஞ்சயனை - சஞ்சயமுனிவனை நோக்கி, "நீ —, எந்தைக்கு - என்தந்தையாகிய திருதராட்டிரனிடம், நுந்தை பட்டான் என்று - உன் தந்தையாகிய வீடுமன் உயிரொடுங்கினுன் என்று, பகர் - சொல்வாயாக," என்று - என்றுசெய்தி கூறி, - நகர் விட்டான் - அத்தினுபுரிக்கு அனுப்பினுன் : அவன் சென்று ஓத - அச் சஞ்சயன் அங்ஙனமே போய்ச் சொல்ல, மட்டு ஆர் மாலை மார்பன் - தேன்பொருந்திய மாலையைத் தரித்த மார்பினையுடைய திருதராட்டிரன், மனையா

ளோடும் - மனைவியாகிய காந்தாரியோடும், வெட்டா வீழ்ந்த மரம் போல் வீழ்ந்து - [வாளினால்] வெட்டாமலேயே [முதிர்ந்து] விழுந்த மரத்தைப்போலத் தரையில் விழுந்து, விறலோன் திறம் சொற்று - பராக்கிரமமுடைய வீடுமனின் வல்லமையைப்புகழ்ந்து சொல்லி, அழுதான் - புலம்பினான் ; (எ. று.)

சஞ்சயன் நாள்தோறும் பகலில் போரில் நடக்கிற செய்தியை அறிந்துபோய் இரவில் திருதராட்டிரனுக்குச் சொல்லிவந்தான். அவனையே அனுப்பினான் துரியோதனன் என்க. வெட்டா - பெயரெச்சம், ஈற்றடியில் உவமையணி. (17)

18. சூரியாத்தமனமும் மீண்டும் உதயமாதலும்.

மற்றங் கவரைத் தேற்றி மலைவா ருழிச்சஞ் சயன்வந்
துற்றான் யார்க்குங் கண்போன் றுறுவீ டுமனைக் கணை
யாற்
செற்றார் கொடுமை காணுச் செல்வான் போன்மேற்
கடைந்தே
எற்றான் மகன்போர் காண்பான் இன்போ டெழுந்தான்
குணபால்.

(இ - ள்) சஞ்சயன் - சஞ்சயமுனிவன், ஆங்கு - அவ்வத்தின புரத்து, அவரைத் தேற்றி - அந்தத் திருதராட்டிரன் காந்தாரி இவர் களையாற்றுவித்து, மலைவார் உழி வந்து உற்றான்-போரிடும் கௌரவர் பாசறைக்குவந்துசேர்ந்தான் : (அப்போது) எல் - சூரியன், யார்க்கும் - அனைவருக்கும், கண்போன்று உறு வீடுமன் - கண்போல் பாராட்டத்தக்க பீஷ்மன், கணையால் செற்ற கொடுமை- (அருச்சுனன் தன்) அம்புகளால் விழச்செய்த குரூரத்தை, காணு செல்வான்போல்- பார்க்கச் சகிக்காது போவான்போல, மேற்கு அடைந்து - மேற்குத் திசையைச்சேர்ந்து அத்தமித்து, (பிறகு மறுநாள்) தான் - அந்தச் சூரியன், மகன் போர் காண்பான் - தன்பிள்ளையாகியகர்ணன் செய்யப்போகின்ற போரினைப்பார்க்கும்பொருட்டு, குணபால் - கிழக்குத் திசையில், இன்போடு - மகிழ்ச்சியோடு, எழுந்தான் - உதயமாயினான் ; (எ. று.) மற்று - அசை.

கொடுமை - அநீதியென்னவுமாம் சிகண்டியைமுன்னிட்டு வீழ்த்தினாதலின் என்க. வீடுமனை அனைவரும் தமக்குக் கண்ணாகக்

கருதியிருந்தமை விளங்கும். ஈற்றடிகளில் - தற்குறிப்பேற்றவணி காண்க. (18)

19. அடுத்த துரோணபருவத்திற்குத் தோற்றுவாய்.

பகல்பத் தரசன் சேனு பதியாய் கங்கா சுதனு
டிகல்சொற் றனநாளைந்தா ரியனு டமர்சொல் வமெனு
சகமன் னவனுக் கருமா தவனே தினன்வீ டுமப்போர்
தகுமிப் பருவச் செய்யு டானூற் றிருபத் தாறே.

(இ - ள்) பத்துப்பகல் - பத்துநாட்கள், அரசன் சேனுபதியாய் - துரியோதனராசனின் சேனைக்குத்தலைவனாய், கங்கா சுதன் - கங்கா புத்திரனாகிய வீடுமன், ஆடு - செய்த, இகல் - போரினைப்பற்றி, சொற்றனம் - சொல்லிமுடித்தேன் : நாள் ஐந்து - மேல்வரும் ஐந்து நாட்களிலும், ஆரியன் - துரோணுசாரியன், ஆடு அமர் சொல்வம் - செய்த போரிணைப்பற்றிச் சொல்லுவேன், எனு - என்று, சகம் மன்னவனுக்கு - உலகாளும் ஜெனமேஜய ராஜனுக்கு, அரு மா தவன் - அரிய தவத்தைச் செய்த வைசம்பாயனன், ஓதினன் - சொன்னான் : (இதுநிற்க) வீடுமப்போர் தகும் - வீடுமன் செய்த போரிணைப்பற்றித் தக்கபடி சொன்ன, இ பருவச்செய்யுள் - இந்தப் பருவத்திலுள்ள செய்யுட்கள், நூற்றிருபத்தாறு - ஒருநூற்றிருபத் தாருகும் ; (எ. று.)

இச்செய்யுள் வைசம்பாயனன் கூறியதுபோலக்கூறி, அடுத்த பருவத்திற்குக் கவி தோற்றுவாய் செய்தபடியாகும், சொற்றனம், சொல்வம் - தன்மைப்பன்மைமுற்றுக்கள். (19)

பத்தாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

பீஷ்ம பருவம் முற்றுப்பெற்றது.

சுபம்.

பீஷ்ம பருவத்தின்
அபிதான சூசிகையகராதி

அசுவத்தாமன் -கர்ணனைக் கண்டித்தல், நா-15; பாஞ்சாலரை வெல்லுதல், எட் — 7,

அபிமன் - கடுமையாகப் பொருதல், இர - 9; விகர்ணனையும் பகதத்தனையும் வெல்லுதல், ஆரும் - 4. பாண்டவர் கொண்டாடுதல், 5.

அருச்சுனன் - உதவிக்கு வருதல், இர - 9; கிருஷ்ணனைப்போர் புரியாதபடி தடுத்தல், மூன் - 4; சேனைகளைக் கண்டுமனங்கசிதல், 10; போர் வேண்டேனெனல்' 11; செருச்செய்ய ஒருப்படல், 15; குரக்குக்கொடியோன்,' ஐந் - 2; சிகண்டியை முன்னிட்டுவைத்து வீடுமனை ஊறுபடுத்தல், பத் - 9; வீடுமன் சிரசைத் தாழாது அம்பினால் உயர்த்துதல் 14.

அலம்புசன் - இராவானுக்குப் புறங்கொடுத்தல், எட் - 6; கருடன் வடிவுகொண்டு இராவானை யழித்தல், எட் -7; வீமன்மேல் மலையெறிதல், ஒன் - 5; வீமனாற்கொல்லப்படல், 6

இராவான்(அராவான்) - அலம்புசனைப்புறங் கொடுக்கச்செய்தமை, எட் - 6; அலம்புசனால் அழிக்கப்படல், 7, இவனிறந்தமைக்குப்பாண்டவர் வருந்தல், 9

உத்தரன் - சல்லியனால் கொல்லப்பட்டான், முத - 13

உதிட்டிரன்(யுதிஷ்டிரன) - தருமபுத்திரனைப்பார்க்க.

கங்கை - வீடுமனைப்பெற்றவள், ஒன் - 11

கடோற்கசன் - துரியோதனனை மூர்ச்சித்து விழச்செய்தல், மூன்- 2; பகதத்தன்மீதுவருதல், நா - 9 ; அவனை வெல்லுதல்; 10; மாயையாற் பலவடிவு கொண்டு பகைஞரையழித்தல், எட் - 5.

கர்ணன் - தற்பெருமை கூறல், நா - 14 ; கண்டிக்கப்படுதல் , 15; வீடுமனைத் தன்னை மன்னிக்க வேண்டுதல் , பத் - 15.

காந்தாரி - இறந்துபோன புதல்வர் ஐவர்க்கு வருந்துதல் , நா - 17; வீடுமனிறந்ததற்கு அழுதல் , பத் - 17 .

கிருஷ்ணன் - பவங்கள் நீக்குபவன் ; இடங்கர்நூறி இபம் அளித்தவன் ; நெய்பால்ததிக்கு அங்காந்தவாயன்;விண்தழல்மண்கால்நீராய் விளங்குபவன் ; விமலைமார்பன் ; பக - 1. தத்துவங்களை அருச்சுனனுக்கு உபதேசித்து விசுவரூபம் காட்டுதல், 12 - 14 ; புத்திர சோகமுற்ற விராடனைத்தேற்றுதல் , முத - 22 வீடுமன்மேல் சக்கரம் எடுத்தல் ; மூன் - 3; சக்கரயூகம் வகுத்தல், எட் - 1 ; இராவான் இறந்தமைக்கு வருந்தும் பாண்டவரைத் தேற்றுதல் , எட் –9; அருச்சுனனை வீடுமனை வீழ்த்தச்சொல்லுதல், பத் - 2

குந்தி - பிரதை , ஒன் - 1

சக்ரதேவன் - கலிங்கமன்னன், இர - 4; யானைப்படையினன், 5,6; வீமனோடு பொருது அழிதல், 7.

சகுனி - தரையில் வீழ்ந்த துரியோதனனை எடுத்தணைத்தல், நா - 7 வீமனுக்கு முதுகிடல், ஐந் - 4

சஞ்சயன் - திருதராட்டிரனுக்குப் போரின் போக்கினைச் சொல்பவன், பக - 6 ; பதினான்கு லோக இயற்கையும் கூறுதல், 8-9

சதாயு – சாத்தகியை வெல்லுதல், ஏழாம் - 2

சதானிகன் - விராடனுக்கு இளையவன், ஒன் - 11 ; வீடுமனால் இறந்தான், 11

சந்தனு - வீடுமனின் தந்தை, ஒன் - 9

சல்லியன் - புயவலியுடையன், முத- 13; உத்தரனைக் கொன்றவன், 13; வீமனுக்குத் தோற்றல், ஆறும்- 2; வீடுமனுக்கு உதவ வருதல், பத்- 4

சாத்தகி - கிருஷ்ணனுக்குத் தம்பி முறையான், பூரிசிரவாவை எதிர்த்தல், ஐந்- 5; அவனோடு விற்போர், வாட்போர் புரிதல், 6; சதாயுவிடம் தோற்றல், ஏழாம் - 2

சிகண்டி - வீடுமனைப் பாஞ்சாலரொடு சூழ்ந்து கொள்ளல், ஒன் -:8- இவன் கணைக்கு வீடுமன் இலக்காதல், 9

சிவேதன் (சுவேதன்) - பாண்டவர் பக்கத்துச் சேனாபதியாதல், சல்லியனையெதிர்த்தான், முத - 14 ; துரியோதனன் தம்பியர் அறுவரை முதுகு கண்டவன், 15 ; வாளெடுத்துப் போரிடுதல், 19 ; வீடுமனம்பால் இறத்தல், 20 ; விராடன்மகன், 22.

செனமேசயன் - குருக்ஷேத்திரப் போரினையுரைக்கும்படி வைசம்பாயனனை வேண்டினவன், பக - 2.

தருமபுத்திரன் - வீடுமனோடு மலைந்து வில்லிழந்து நிற்றல்; ஒன் .8

திட்டத்துய்மன் - பாண்டவர் சேனாதிபதியாதல், இர -1 ; துரோணனுக்குத் தோற்றல், 3 ; மகரவியூகம் வகுத்தல், ஆறும் - 1.

திருதராட்டிரன் - வியாசனை நினைத்தல், பக - 3 ; கண்கள் பெறுதல், 4 ; கண் வேண்டா எனல், 5 ; பதினான்கு லோக இயற்கையறிய வினவல், 8 ; இறந்த ஐவர் புதல்வர்க்கு வருந்துதல், நா-17 ; வீடுமன் இறந்தமைக்கு அழுதல்; பத் - 17

துச்சாதனன் - சிகண்டியின் வில் கொடி தேர் இவற்றைச் சிதைத்தல். ஒன் - 10 ; வீமனொடு பொருதல், பத் - 6 ; சிகண்டியை வெல்லுதல், 8

துரியோதனன் - வீமனை வளைத்தல், மூன் - 1 ; கடோற்கசன் அம்புகளால் மூர்ச்சித்து விழல், 2 ; செய லறுதல், நா - 4 ; வீமனது வில்லும் கவசமும் பொடியாக்குதல், 5 ; தரையில் விழச் சகுனி எடுத்தணைத்தல், 7 ; வீமன் கவசத்தைப் பிளத்தல், ஐந் -4 ; வீடுமனிடம் வந்து புலம்புதல், எட்-3 ; கர்ணன் சிலையெடுக்கில் உய்யலாமெனல், ஒன் - 1.

துரோணன் - தன்னை வெல்லும் உபாயம் கூறல், முத - 3 ; கர்ணனைக் கண்டித்தல், நா - 15 ; பாஞ் சாலரை வெல்லுதல், எட் - 7.

பகதத்தன் - பாண்டவர் சேனையை எதிர்த்தல், நா 47 ; கடோற் கசனிடம் தோற்றல், 10 ; அபிமன்யுவிடம் தோற்றல், ஆறும் - 4.

பாண்டியன் - துரோணனுக்குத் தோற்றல், ஏழாம் - 1.

பாண்டு - பாண்டவர் தந்தை. நா - 8

பூரிசிரவா - துரியோதனனுக்கு உதவியாக வரச் சாத்தகி யெதிர்த்தல், ஐந் - 5 ; சாத்தகியோடு விற் போர் வாட்போர் புரிதல், 6.

விகருணன் - வீமன்மேல் பொரவருதல், ஆறும் - 3 ; அபிமன்யு வால் வெல்லப்படல், 4.

வியாசன் - திருதராட்டிரன் நினைக்க வருதல், பக - 3 ; அவனுக்குக் கண்கள் உதவுதல், 4.

விராடன் - சுவேதன் இறக்கப் புத்திர சோக முறுதல், முத - 22.

வீடுமன் - தன்னை வெல்லும் உபாயங் கூறல், முத –2 ; அருச்சுன னிடம் தோற்றல், 12 ; வஞ்சனையால் சுவேதனை வெல்லநினைத்தல், 19 ; சுவேதனை மாய்த்தல், 20 ; துரியோதனனின் மூர்ச்சை

யைத் தெளிவித்தல், மூன்- 22; துரியோதன ஊத்தேற்றுதல், நா - 12 ; கிரௌஞ்ச வியூகம் வகுத்தல், ஆரும் - 1 தூசியூகம் வகுத்தல், எட் - 1 ; இரங்கிய துரி யோதனனுக்கு அவன்தவறுகளைச்சுட்டிக் காட்டுதல், 4 ; சிகண்டியின் கணைக்கு இலக்காதல், ஒன் - 9 ; சதானிகனைக் கொல்லுதல், 11 ; தருமன் படைகளைக் கடுமையாக எதிர்த்தல்,பத் 7; சிகண்டியைக் கண்டு வில்லைப் போகட்டு நிற்றல், 8 ; கிருஷ்ணனது திருமேனியைப் புண்படுத்தல்'; 9 ; அருச்சுனனின் கணைத்திறம் வியத்தல் 9 ; அம்பு அணை கிடத்தல், 10 ; தேவர்கள் மலர்மாரி பொழிதல், 10 ; இருதிறத்தார்க்கும் தேற்றரவு கூறுதல், 11 ; துரியோதனனுர்கு இதம் உரைத்தல், 12 ; அனைவர்க்கும் இனிமைபேசி விடையீதல், 16 ; வீடுமன் உயிர்துறத்தல், 17 .

வீமன் - துரோணனோடு பொர, கலிங்கமன்னன் எதிர்த்துவருதல், இர- 4; யானைகளை மாய்த்தல், 5,6; கலிங்க மன்னனைக்கொல்லுதல், 7; வீடுமனுக்குப் பின்னிடல், மூன்- 8; வேழப்படைவேந்தர் வளைதல், நா- 2; துரியோதனன துயானைச் சேனையைச்சிதைத்துச் செயலறச் செய்தல், நா- 4; துரியோதனனின் தம்பியர்ஐவரைக் கொல்லுதல், 8; துரோணனுடைய தேர்க் குதிரையையும் பாகனையும் அழித்தல்,ஆரும்- 2; சல்லியன் சகுனியரை வெல்லுதல், ஏழாம்- 2; துரியோதனனின் தம்பியரில் எண்மரைக் கொல்லுதல், எட்- 2; மேலும் தம்பியர் எழுவரை மாய்த்தல், 8; அலம்புசனைக் கொல்லுதல், ஒன் - 6,

வைசம்பாயனர் - செனமேசயனுக்குக் குருக்ஷேத்திரப்போரையுரைத் தவர், பக- 2;

பீஷ்ம பருவத்தின்
அரும்பதவகராதி முதலியன

அக்குரோணி- அஷௌஹிணி, (ஒருபெருந்தொகை எண்), முதற்-4,

அகி - பாம்பு ,மூன் - 2

அகிகேதன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், ஐந் - 4

அங்கதம் - பாம்பு, நா - 5

அசி - வாள், முத - 20

அத்தி - யானை , எலும்பு , கொல்லுதல் , நா - 4

அந்தரம் - ஆகாசம், ஏழாம் - 4

அயில் - வேல், இர - 8

அயிலோன் - முருகன், பக - 14

அரன் - சிவபிரான், முத - 14

அரி - குதிரை (பிங்கலந்தை), முத - 6

அரித்துவசன் - சிங்கக்கொடியையுடைய வீமன், ஐந் - 5.

அருக்கன் - சூரியன், முத - 22, பத் - 15

அலகை - பேய், முத - 21

அளக்கர் - கடல், அலைக்கு இலக்கணை, இர - 1

அனற்கணை - ஆக்னேயாஸ்திரம், இர - 9

அனிகம் - சேனை, நா - 6, ஒன் - 11

அனிலன் - வாயு, நா - 8

அனுசர் - தம்பியர், முத - 17, எட் - 9

ஆகார் - பகைவர், நா - 12

ஆசுகம் - அம்பு, இர - 3

ஆதவன் - சூரியன், நா - 13

ஆவம் - அம்பறாத்தூணி, அம்புப்புட்டில், பத் - 11

ஆழி - சக்கரப்படை, மூன் - 8
ஆளி - சிங்கம், இர - 9
ஆறளித்தசுதன் - வீடுமன், ஒன் - 2
இகல் - பகைமை, நா - 14
இடங்கர் - முதலை, பக - 1
இதழி - கொன்றை, முத - 18. (இதழிசூடி - சிவபிரான்)
இந்த்ரசூனு - அருச்சுனன், (சூனு - மகன்), பத் - 2
இபத்தலைவர் - யானைத்தலைவர், ஏழாம் - 1.
இபம் - யானை, பக - 1
இயம் - வாச்சியம், முத - 14
இருக்கை - குடியிருப்பு, முத - 22
இவுளி - குதிரை, இர - 9
இனன் - சூரியன், நா - 12
உசாவுதல் - ஆலோசித்தல், ஒன் - 1
உட்புலன் - அந்தக்கரணம், பக - 5
உபயம் மும்மடங்கு - ஆறுமடங்கு, ஏழாம் - 3
உபயர் - இருவர், முத - 15
உரககேது - துரியோதனன், முத - 15
உரு - அழகு, ஆறும் - 2
உருத்தல் - கோபித்தல், இர - 9
உலவை - காற்று, நா - 5
உவணன் - கருடன், எட் - 7
உவராழி - உப்புக்கடல், ஐந் - 1
உழி - இடம், இர -]10, ஐந் - 7
ஊழி - நிலம், பக - 12
எல் - சூரியன், பத் - 18
எள்ளல் - இகழ்தல், எட் - 3
என்று - சூரியன், நா - 14
ஏ - அம்பு, நா - 6

ஏடு - இதழ், முத - 18
ஏழை - அறிவின்மை, பக - 12
ஏறு - ஆண்சிங்கம், எட் - 6
ஓங்கல் - மலை, ஒன் - 5
கடத்தல் - வெல்லுதல், பத் - 16
கடவுதல் - செலுத்துதல், இர - 9
கணையமர் - வாளிப்போர், நா - 1
கம் - தலை, சிரசு, பத் - 13
கயம் - யானை, இர - 6
கரித்தளம் - யானைப்படை, ஏழாம் - 1
கவந்தம் - தலைநீங்கிய உடல், ஐந் - 7
கவி - குரங்கு, இர - 9, ஐந் - 2
கறங்குதல் - ஒலித்தல், பத் - 1
காங்கயன் - வீடுமன், முத - 17
காய்தல் - கோபித்தல், மூன் - 3
காயம் - உடம்பு, எட் - 3
கார்முகம் - வில், இர - 4
காலாந்தம் - யுகமுடிவு, பிரளயகாலம், எட் - 8
காலாந்த ருத்திரன் - யுகாந்தகாலத்து உருத்திரமூர்த்தி, எட் - 8
காளம் - எக்காளம் என்னும் ஊதுகருவி, ஐந் - 1.
கிரிடி, கிருடி=கிரீடி, அருச்சுனன், முத - 12, மூன் - 4
கீழ்திசை - கிழக்குத்திக்கு, எட் - 9
குகன் - முருகன், ஆறும் - 5
குடபால் - மேற்குத்திசை, ஒன் - 11
குணக்கு – கிழக்குத்திசை, ஒன் - 11(குணக்குன்று - உதயகிரி)
குண திசை - கிழக்குத்திக்கு, முத - 22
குரை - ஒலி, முத - 5
குழைத்தல் - வளைத்தல், மூன் - 2
கூ - பூமி, பக - 1, முத - 10

கேடயம் - பரிசை(Shield), ஐந் - 6

கேது - கொடி, இர - 9

கொடிச்சீலை - கொடியாடை, முத - 16

கொண்டல் - மேகம், ஒன் - 5

கொந்து - கொத்து, தொகுதி,பத் -13

கோகனகம் - செந்தாமரை, பத் 11

கோட்டுதல் - வகுத்தல், ஆரும் - 1

கோல் - அம்பு, பத் - 5

கோலுதல் - வளைத்தல், முத - 14

ஙன் - ஙனம், இடம், பக - 7

சகடம் - வண்டி, ஏழாம் - 1 ,

சதாகதி - வாயு, பத் - 6

சந்ததி - வழித்தோன்றல், மகன், ஆரும் - 4

சருகு - வற்றிய இலை, மூன் - 3

சாடுதல் - தாக்கிப்போரிடுதல், முத - 7, ஐந் - 7

சாபம் - வில், ஐந் - 6, ஏழாம் - 4

சானவி - கங்கை, ஏழாம் – 2

சிந்தாகுலம் - மனக்கவலை, நா - 12

சிமந்தபஞ்சகம் - ஐந்துதடாகங்கள், பக - 9

சின்னபின்னம் - கண்டதுண்டம், நா - 8

சீயம் - சிங்கம், நா - 6

சுதன் - மகன், பிள்ளை, பக - 10, நா - 6

சூட்சம் - சூட்சுமம், திறங்கள், நா - 15

சூர் - சூரியன், முத - 22

செகுத்தல் - அழித்தல், கொல்லுதல், எட் - 6

செந்நீர் - இரத்தம், இர - 6

செய்பத்திரயூகம் - ஸர்வதோபத்ரம் என்னும் படைவகுப்பு, ஒன் - 4

செருமுறிதல் - தோற்றல், இர - 3

சேத்தல் - சிவத்தல், மூன் - 3

சேதித்தல் - துண்டாக்குதல், பக - 12

ஞாயம்—நியாயம், மூன்—4

தகைதல் - தடுத்தல், மூன் - 4, ஒன் - 9

தந்தி— யானை, இர - 7, நா - 10

தளம்— படை, இர - 7

தானவர்—அசுரர், மூன் - 1

திரள்பதி - சேனுபதி. இர - 1

திரிபுரர் - அசுரர்மூவர், மூன் - 5

தினகரன் · சூரியன், இர - 4

தும்பி - யானை, எட் - 5

துரங்கம் - குதிரை, நா -7, எட் - 5

துன்னிமித்தம் - தீக்குறி, பத் - 3

தூசி வியூகம் - அசுவவியூகம் எனலாம். (தூசி - குதிரை) எட் -1

தெவ்வர் - பகைவர், எட் - 5

தென் திசையோன் - யமன், எட் - 6

தேசி - பெரிய குதிரை, பத் - 4

தொடுதல் - பிரயோகித்தல், எடுத்தல், ஒன் - 6

தொடை - அம்பு, மூன் - 2 ; பாணம், நா - 8

தொறு - ஆநிரை, நா -15

நகம - மலை, பக - 8

நதிநந்தனன் - வீடுமன், ஐந் - 3

நந்தனன் - குமாரன், ஒன் - 8, 9

நள்ளார் - பகைவர், முத - 21

நற்குணன் - தருமன், மூன் - 6

நாகம் - மலை, பாம்பு, யானை, மேலிடம், (ஆகாயம்), நா - 3 ; வானம், பத் - 11

நாட்டம் - கண், பக - 7

நுதியளவு—நுணுக்கப்பரிமாணம், பக - 8

நூறுதல்—அழித்தல், பக - 1, முத - 15

பகீரதி—கங்கை, முத - 21
படுதல்—இறத்தல், நா - 7
படையாற்றுதல்—கருவி கொண்டு பொருதல், நா - 16
பணிக்கொடி—பாம்புக்கொடி, எட் - 2 (பணி - பாம்பு)
பணை—வாச்சியம், இர 2, பத் - 1
பத்மவியூகம்—தாமரைவடிவினதாக நிறுவப்படும் வியூகம், ஒன் - 4
பரி—விரையுஞ்செலவு, கதி, நா - 7
பலம்—உற்பலம், கருநெய்தல், ஐந் - 8
பற்குனன்—அருச்சுனன், மூன் - 5
பறவைப்பதி—பட்சிராஜன், கருடன், நா - 3
பனிப்பகைவன்—சூரியன், இர - 10
பணைப்பதாகை—பணைக்கொடி (வீடுமனுக்குரியது), முத -12
பாடியில்—படைவீடு, முத - 22
பார்க்கரன்—பாஸ்கரன், சூரியன், நா -1
பானு—சூரியன், ஏழாம் - 4
பானுசூனு—சூரியன்மகன், கர்ணன். ஒன் - 1 (சூனு - மகன்)
பிரதை—குந்தி, ஒன் - 1
பிலம்—கீழுலகம், பா - 8
பிறிதினவிற்சியணி, முத - 8, நா -8
பின்தரல்—முதுகிடல், மூத - 14
புகழ்விட்ட இறை—துரியோதனன், இர - 10
புணரி—கடல், பக - 8
புல்லார்—பகைவர், நா - 9
புலவர்—தேவர், ஆறும் - 1
புலன்—கட்புலன், பக - 4
புழைக்கை—தும்பிக்கை, நா -9
பூபாலர்—வேந்தர், நா - 7
பொன்றுதல்—இறத்தல், முத - 3
மணம்துறந்தவன்—வீடுமன். பத் - 9

மந்தாகினி—கங்கை, நா - 12 ஒன் - 8
மயக்கு—மயக்கம், விபரீத அறிவு, பக - 15
மறலி—யமன், இர - 5, ஒன் - 8
மன்—தலைவன், அரசன், மூன் - 6
மாகர்—தேவர், பத் - 10
மாசுணம்—பாம்பு, ஏழாம்—1
மாதுலன்—மாமன், நா - 15
மாந்துதல்—குடித்தல், முத—21, உண்ணுதல், ஏழாம்—4
மாயை—ஒன்றை மற்றொன்றாகக்காட்டும் எம்பெருமானது சக்தி, பக—11
மாருதி—வீடுமன், இர—5
மான்—குதிரை, மூன்—1
மித்திரன்—சூரியன், பக—3
முதுவர்—பெரியோர், எட்—4
முருக்குதல்—அழித்தல், எட்—5
முளரி—தாமரை, நா—11
மூரி—வலிமை, மூன்—6
மேதை—நிணக்கொழுப்பு, முத - 21
மேவலர்—பகைவர், மூன்—5
மேவார்—பகைவர், ஒன்—2
மைந்து—வலிமை, நா - 17
மொய்ம்பு—வலிமை, நா - 16
யூகம்—வியூகம், படைவகுப்பு, முத—4
வச்சிரம்—உறுதி, ஏழாம்—1
வடவத்தி—வடவைத்தீ என்பதன் சிதைவு, நா—4
வயம்—வெற்றி, இர—10
வருதினி—படைஞர், எட்—7
வளி—காற்று, பக—12
வன்னி—பிரமசாரி, வீடுமன், நா—2, பத்—8

வாகு—தோள், முத—20

வாரிதி—கடல், முத—21

வாளி—அம்பு, இர—4

விசிகம்—அம்பு, முத—3, எட்—6

விடையான்—சிவபெருமான், நா - 16(விடை - எருது)

விண் ஏகுதல்—வீரசுவர்க்கமடைதல் (இறத்தல்), எட் - 6

வித்தகன்—அற்புதசக்தியுடையவன், கிருஷ்ணன், மூன் - 4

விமலை—இலக்குமி, பக - 1

விரதசீலன்—தேவவிரதனுகிய வீடுமன், பத் - 2

விருத்தன்—கிழவன், பத் - 4

வில்—ஒளி, மூன் - 6

வில் ஆரணன்—துரோணன், நா - 15

விற்றல்—பிளக்கப்படல், ஐந் - 2

வெந்கொடுத்தல், வெந்கொளல்—புறமுதுகிடுதல், முத - 13, 15

வேலை—சமுத்திரம், பத் - 1

வை—கூர்மை, ஆறும் - 5

வையம்—தேர், எட் -5

பீஷ்ம பருவத்தின் சில அருந்தொடர்கள்

நெய்பால்கூவுக்கு அங்காந்த வாயன், பக - 1

பற்கலேதோய்ந்த வைசம்பாயனன், பக - 2

வென்றோர் தோற்பர் தோற்றவர் வெல்வர், பக - 6

ஊழைமாற்றிவாழ்குநர்யார் ? யாதும் வரன் செயல், பக - 6

தேவரும் புகழ் குருக்கேத்திரம், பக - 9

இருவினையால் எடுத்துடலம் இரண்டுந்துய்ப்பார், பக - 12

சூழுமயல் துலேத்தறிவாஞ் சூழ்ச்சியறிபவரே நற்றூயோராவார், பக - 12

உடுத்தகலே விடுத்தே வேறுடுப்பதுபோல் வேறுடலில் உறுதல் ஆன்மா, பக - 13

நண்ணுநம்பாதம், பக - 13

மாயைபுரிதன்மையினுல் தந்தார் சேய் தாரஞ்சுற்றம் அடுத்தபகை யுறவெனத்தோன்றும், பக - 13

மாயை பிணிப்பவிழ்த்தால் அறிவே தோற்றும், பக- 13

தோற்றறிவே யுயிர்கடொறுஞ் சுவைப்பால்நெய் போன்றிருக்கும் பக - 14

புல்லார் பணிதாட் பகதத்தன், நா - 9

சொல்லால் வெல்வை வில்லமரின் சூட்சமுணராய், நா - 15

அரசுளத்தை வேருக்கிடும் மாதுலன் நீயும் புல்லார், ஐவரன்று' நா - 15,

மூவிருபகலிலற்றதற் குபயமும்மடங்கு அதிகமாய்ந்தவே, ஏழாம் - 3

கன்னிதன்கணீர் பழுதுருது, எட் - 4

அரிநாமமிருகாதலொடுமோதி, பத் - 10

சுபம்

பீஷ்ம பருவத்தின் செய்யுண்முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்
அடலத்திகடாகையற	— 61
அணிவகுத்துதிட்டதூய்மன்	— 43
அதுகேட்டன்னோன்மென்	— 12ö
அரசுபின்றரச்செருசெய்	— 33
அருச்சுனனையேழுபதினாயிரவர்	— 109
அறந்திகழவந்தநரநாரணர்	— 121
அறனுற்றவைவர்தமைவெற்றி	— 106
அன்றுறளித்தசுதன்வாய்மை	— 105
அன்னவனொடெண்ணில்பல	— 119
ஆடும்பலபேயோடுடனாடும்	— 80
ஆரியன்சீடர்தம்மோ	— 24
இந்தவண்ணமிருபடையுஞ்	— 30
இரங்ககிற்கிலாமன்ன நீ	— 97
இரதமோடிரதம்	— 27
இருமூன்றும்பகலமருக்	— 83
இருவருக்கத்தவர்பாடியில்	— 40
இலகாதவன்றோன்றி	— 75
இன்பேதிதிகாறமரில்	— 124
உடுத்தகலைவிடுத்தேவேறு	— 17
உதயகாலைக்கடனியற்றி	— 42
உருத்தெதிர்ந்துவந்தமன்னர்	— 116

ஊழிபுனற்கனல்வளியா	— 15
எட்டெனும்பகலமரினுக்	— 94
என்னலுமவனைவேந்தன்	— 9
என்னவோதியிரங்கிய	— 96
ஒருபான்மாருதிதுரோணன்	— 84
ஒருவர்தம்பினேரிலையென	— 34
ஒருவர்வெங்கணையொருவர்	— 91
கங்கைமகனுந்தியகடுங்கணை	— 120
கட்புலன்றெரியப்பாரின்	— 6
கதைவீமனடலரவான்	— 101
கவசம்பொடித்தான்றன்	— 78
களங்கலந்தனரிருதிறத்தரும்	— 89
கன்றுசமரினினைக்கடக்க	— 128
காங்கயனிளைத்திடுதல்	— 36
காலைபானுகைகுவித்து	— 114
குதிகொண்டுகவியாடுகொடி	— 76
குருவிடைகொடுசென்றேழக்	— 25
குரைசெய்வார்கடற்	— 27
கொடையானென்மொய்ம்பி	— 72
சதாகதிசுதன்கையில்தேர்	— 118
சல்லியனைவிட்டுமிசை	— 35
சாற்றருஞானநாட்டஞ்	— 7
சிங்கமன்னதிட்டத்துரய்மன்	— 43
சிரமிழந்தனர்சிற்சிலர்	— 29
சிலைகொள்சாத்தகிவலி	— 90
சிலையுங்கொடியுந்தேரும்	— 112
சீறியொருபுடையரவானிக	— 98
சூடுசாபபற்குனனதிச்சுதன்	— 92
சூழ்ந்துசாபங்குழைத்தெய்யுந்	— 52

செருசெய்வீடுமன்பனை — 31
சென்ருகவத்திரட்டானை — 107
சொல்லால்வெல்வை — 72
சொற்றசஞ்சயனைவேந்தன் — 13
தகையாச்செருச்செய் — 111
தண்டுளவோயரிதாய — 20
தந்திக்கணமாளப்படை — 62
தந்தியாவுமீதாளுஞ் — 67
தந்தியும் வந்திடுந்தளமழிந் — 46
தந்தை சென்றிடலுமண்ணல் — 8
தந்தையொடேற்றிவிகன்னன் — 86
தம்பிமாரொடுவீமனைத் — 95
தரைமீவலர்யாமேயெனச் — 79
தன் தம்பிமார் மைந்தர் — 77
தாதையை வணங்கிச்செய்யத் — 5
திரணடுங்கவமர்செய் — 44
துரியோதனனை யணியுணீரீஇத் — 53
துள்ளமண்மிசைக்காயமுந் — 96
தொண்டுசெய்பவங்கள் — 2
தொழுதலும்வெஞ்சின — 56
தோற்றிவேயுயிர்க — 18
நரனேவிலமர்செய்க — 77
நாகநழுசோதியென — 123
நாவலந்தீவேயாகும் — 11
நிலமன்னவர்பலர்விண்புக — 81
நின்றவர்போர்க்காசிரியர் — 14
நீடனுகொள்வீடுமனெடுங் — 38
பகல்பத்தரசன்சேனுபதியாய் — 130

பகீரதியின்சுதன்ருெடையாற் — 39
பட்டனர்கள்பற்பலர் — 49
பட்டானுந்தையென்ருெப் — 128
பரிகொடேர்விட்டுமண் — 45
பலகயந்தோல்களாய்ப் — 46
பற்குனன் வன்னிமேற் — 60
பற்குனனேவியவிற்கணை — 57
பாயுமமருக்கைவரெதிர் — 70
பார்க்கரற்ருெழுகடன் — 59
பார்த்தனேடுதானைமன்னர் — 115
பின்வந்ததம்பியுறுமாமனொடு — 104
பைந்தாரரசங்கிசையா — 125
பைந்தாரரசன்விடைநல்க — 73
பொருதார்சமரமிருதிறத்துப் — 64
போர்க்கிசைந்திடவிற் — 22
மண்டலமுமெண்டிசையு — 108
மந்தாகினிசேய்யாவரொடும் — 69
மந்தாகினிநந்தனன் — 110
மற்றரும்புயமத்திரன் — 32
மற்ருங்கவுரைத்தேற்றி — 129
மாருதிபுகுந்திரதமேவ — 47
மாருதிமன்னவனேக்கி — 102
மானடவுதேர்நரனை — 117
மித்திரற்ருெழுதுவேந்தர் — 5
முற்பகைகொண்டுவெல்வான் — 23
முன்னேன்றளரத்தரித்தி — 65
மூன்ருமமருக்கிருபடையும் — 51
மெய்யோனனிகமுறிந்திட — 113

மேவலர்களம்பின்மெலி — 122
வஞ்சனையிறுவிகொளு — 37
வடநாகநிகர்க்கும்பரிமாத் — 60
வடபாலருக்கனுறுநாள் — 127
வலிவீமனுருத்தரவத் — 85
வாயுச்சுதனரவக்கொடி — 63
வாளபிமன்மாவிரதநேர் — 48
விகனனுடறுளைந்துதிர — 88
விட்டவரைவெட்டியொரு — 109
விரதசீலனின்றுவீழ — 115
வில்லர்வில்லினர் — 28
வில்லான்மல்லாற் — 66
விற்செனமேசயப்பேர் — 4
விற்ருங்கியகை பகதத்தன் — 68
வீடுமனும்மீளவொரு — 36
வீடுமனைக்கொலவாழி — 54
வெட்டிவெஞ்சமர்வென்றனர் — 28
வென்றதிதுகாறியார்நரனை — 71
வென்றந்தநிருதனுமீட்டுவணை — 100
வென்றிபேசியேவென்றிடத் — 29

சுபம்.